## உள்ளே...

எழுந்து நிற்கும் கேள்விகள் 4
- தலையங்கம்

‘என்.பி.ஆர்.-என்.ஆர்.சி.-சி.ஏ.ஏ.’ சட்டங்கள் குறித்த ஒரு பார்வை 5

திராவிடர் விவசாய-தொழிலாளர் சங்கத்தின் வெளிச்சத்துக்கு வராத வரலாறு 12

அது என்ன “சரசுவதி சிந்து நாகரிகம்”? 14
- ஆதி வள்ளியப்பன்

சாட்சிக் கூண்டில் ஏறி ‘துக்ளக்’ சோ கேட்ட மன்னிப்பு 17
- வழக்கறிஞர் எஸ். துரைசாமி

பால் - மனிதர்களின் உணவானது எப்படி? 23

சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தேவை 26
- மருத்துவர் செந்தில்

மணவிலக்கு கேட்பது கலாச்சார சீரழிவா? 30
- மோகன் பகவத்துக்கு மறுப்பு

1958இல் ‘விடுதலை’ வெளியிட்ட கட்டுரைக்காகக் கிடைத்த தண்டனை 32

அம்பேத்கர் நடத்திய ‘மூக் நாயக்’ 34

அறிவியலுக்கு எதிரான கருத்துகளைப் பரப்பும் - உச்சநீதிமன்ற நீதிபதி இராமசுப்பிரமணியன் நூலுக்கு மறுப்பு (2) 37
- எட்வின் பிரபாகரன்

பெரியாரின் பெரும் பணி: பேராசிரியர் அன்பழகன் படப்பிடிப்பு 41

# நிமிர்வோம்

தடைகளைத் தகர்த்து...

**திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்**
**மார்ச் 2020 / ரூ.20**
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
**கொளத்தூர் மணி**
**விடுதலை இராசேந்திரன்**

வினியோகப் பொறுப்பு
**சூலூர் பன்னீர்செல்வம்**

இதழ் வடிவமைப்பு
**வெல்கின் கணினி**

அலுவலக முகவரி
**95, டாக்டர் நடேசன் சாலை**
**அம்பேத்கர் பாலம்**
**மயிலாப்பூர், சென்னை 600 004**
**தொலைபேசி எண்:**
**044-24980745**

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**இரா. உமாபதி**
**72992 30363**
**வெ. மனோஜ்**
**7373684049**


# எழுந்து நிற்கும் கேள்விகள்

குடியுரிமை திருத்தச் சட்டத்தில் இந்தியாவில் எவருக்கும் பாதிப்பு இல்லை என்ற வாதத்தையே பிரதமரும், உள்துறை அமைச்சரும் மீண்டும் மீண்டும் கூறுகிறார்கள். சட்டம் அமுலுக்கு வந்த பிறகு தானே பாதிப்புகளை மக்கள் உணர முடியும்? ஆனாலும் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே இந்தச் சட்டம் 'இந்தியா'வின் மதிப்புக்கு கடும் பாதிப்பையும் தலைகுனிவையும் ஏற்படுத்தி விட்டது என்பதை மறுக்க முடியாது. மதத்தின் அடிப்படையில் குடிமக்களிடம் பாகுபாடு காட்டக் கூடாது என்ற இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கத்தையும் சிதைத்துவிட்டது. இந்த இரண்டு பாதிப்புகளுக்கும் நடுவண் ஆட்சி என்ன பதிலை வைத்திருக்கிறது?

பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் நாடுகளில் நடக்கும் இஸ்லாமிய ஆட்சிகளால் பாதிக்கப்பட்டு இந்தியாவுக்கு வரும் இஸ்லாமியர் அல்லாத ஆறு பிரிவினருக்கு குடியுரிமை வழங்க சட்டம் கொண்டு வந்த பிறகு தலைநகர் டெல்லியில் இஸ்லாமியர்களை குறி வைத்து கொலை வெறித் தாக்குதல் நடத்தி, 57 உயிர்களை (இது எழுதப்படும் வரை) பலி வாங்கியிருப்பதை எப்படிப் புரிந்து கொள்வது? இஸ்லாமியர் அகதிகளாகவும் வர வேண்டாம்; இந்தியாவிலும் வாழ வேண்டாம் என்று அச்சுறுத்துகிறார்களா?

தலைநகர் டெல்லியில் திட்டமிட்டப் படுகொலைகளும் தீ வைப்புகளும் நடத்தி முடித்த வன்முறையாளர்கள் மீது "துப்பாக்கியால் சுடுங்கள்" என்ற கொலை வெறியைத் தூண்டிவிட்ட கபில் மிஸ்ரா, அனுராக் தாக்கூர் (இவர் மத்திய நிதித் துறை இணை அமைச்சர்), பிரவேஷ் வர்மா (பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்) உள்ளிட்டோர் மீது, எந்த நடவடிக்கையும் எடுக்காதது ஏன்? இதைச் சுட்டிக்காட்டிய டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி முரளிதரர் என்பவரை, பஞ்சாப், அரியானா மாநிலத்துக்கு உரிய கால அவகாசம் தராமலேயே மாற்றியது ஏன்?

பற்றி எரியும் இந்தப் பிரச்சினையை உடனடியாக விசாரணைக்கு ஏற்காமல் ஒரு மாத காலத்துக்கு அதே டெல்லி உயர்நீதிமன்றத்தில் வேறு ஒரு அமர்வு தள்ளிப் போட்டதும், இதை உச்சநீதிமன்றமே சுட்டிக்காட்டி, விசாரணையை முன்கூட்டியே நடத்த உத்தரவிட்டிருப்பதும் எதைக் காட்டுகிறது?

அய்.நா. மனித உரிமை ஆணையர் உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்குகளில் தன்னையும் இணைத்துக் கொள்ள முன் வந்திருக்கும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்ற ஒரு பிரச்சினையை நாடாளுமன்றத்தில் விவாதிக்கவே மறுப்பது ஏன்? 'ஹோலி பண்டிகை' கொண்டாட்டத்துக்குப் பிறகு விவாதிக்கலாம் என்று நாடாளுமன்ற அவைத் தலைவரே கூறுவது பிரச்சினையை அலட்சியப்படுத்துவது அல்லவா?

உடைமைகளையும் உயிரையும் இழந்து நிற்கும் மக்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆட்சியாளர்கள் ஆறுதல் கூட கூற மறுப்பது ஏன்? கலவரம் தொடங்கி நான்கு நாட்கள் வரை அமைதி காத்துவிட்டு, பிறகு சடங்குக்காக ஒரு அறிக்கை விடுவதோடு பிரதமர் கடமை முடிந்து விட்டதா?

டெல்லி காவல்துறையின் அலட்சியத்தை மக்களிடமிருந்து பேட்டி கண்டு வெளியிட்ட இரண்டு மலையாள தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவையை 48 மணி நேரத்துக்கு ஒளிபரப்ப, மத்திய தகவல் தொடர்புத் துறை தடை போட்டுவது கருத்துரிமையா? ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை எப்படி விமர்சிக்கலாம் என்று மத்திய அரசின் தகவல் தொடர்புத் துறை எழுத்துப்பூர்வமாக இந்தத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு தாக்கீது அனுப்பியது சரி தானா? ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அரசின் பாதுகாப்புத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டதா?

குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய மக்கள் பதிவேடு, குடியுரிமைப் பதிவேடுகளை எதிர்த்து கேரளா, புதுவை, பஞ்சாப், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள் சட்டம் இயற்றிய நிலையிலும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கும் பீகாரில் குடியுரிமைப் பதிவேட்டை எதிர்த்தும், மக்கள் தொகைப் பதிவேட்டில், புதிதாக இணைக்கப்பட்ட கேள்விகளைக் கை விடுமாறும் தீர்மானம் போட்டும், மாநிலங்களின் குரலை அலட்சியப்படுத்துவது கூட்டாட்சி தத்துவத்தையே குழி தோண்டி புதைப்பதல்லவா? இப்படி அடுக்கடுக்கான கேள்விகள் எழுந்து நிற்கின்றன.

நாடு ஆபத்தான திசையில் பயணிக்கிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைப் புறந்தள்ளிவிட்டு 'மதவெறி' வட்டத்துக்குள் மோத விட்டுக் கொண்டிருக்கும் சூழ்ச்சிகளை மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள் என்பதை நடுவண் ஆட்சியாளர்கள் உணரும் காலம் தொலைவில் இல்லை.

# ‘என்.பி.ஆர்.-என்.ஆர்.சி.-சி.ஏ.ஏ.’ சட்டங்கள் குறித்த ஒரு பார்வை

1. *குடியுரிமை திருத்தச் சட்டம் CAA-19 என்றால் என்ன? இத்திருத்தம் ஏன் சர்ச்சைக்குரியதாக உள்ளது?*

இப்போதைய குடியுரிமை திருத்தச் சட்டத்தின்படி (CAA 2019) பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் வங்க தேசத்திலிருந்து இந்தியா விற்குள் வந்த இந்து, சீக்கியம், கிறிஸ்தவம், பார்சி, பௌத்தம் மற்றும் சமணம் ஆகிய ஆறு மதத்தை சேர்ந்த மக்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படும். இவர்கள் 2014 திசம்பர் 31 க்கு முன்பாக இந்தியாவில் வாழ்ந்திருந்தால் போதுமானது என்கிறது. ஆனால், இந்த சட்டத் திருத்தம் இஸ்லாமியர்களை மேற்கூறிய பட்டியலில் சேர்க்காததே சர்ச்சையின் மையம்.

2. *கடந்த காலத்தில், இந்தியக் குடியுரிமைச் சட்டத்தில் என்னென்ன திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டன? தற்போதைய திருத்தத் திற்கும் கடந்த கால திருத்தத்திற்குமான வேறுபாடு என்ன?*

இந்திய அரசியல் சட்டம் (ஜனவரி 26,1950) இந்தியக் குடியுரிமை குறித்து விதிகளை (பிரிவு 5 முதல் 11)முதன்முறையாக கூறியது. அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 5 ன்படி, இந்தியாவை இருப்பிடமாகக் கொண்டவர்கள் இந்தியாவில் பிறந்திருந்தாலோ அல்லது அவரின் பெற்றோரில் ஒருவர் இந்தியாவில் பிறந்திருந்தாலோ இந்தியக் குடியுரிமை பெறத் தகுதியுடையவர்களாக கூறியது. அகதிகளைப் பொருத்தவரையிலும் ஒருவர் அரசியல் சட்டத் தேதிக்கு முன் (அதாவது 1950 சனவரி 26 க்கு முன்) ஐந்து ஆண்டுகளுகளுக்கு மேல் இந்தியாவில் குடியிருந்திருந்தால், அவர் இந்தியக் குடியுரிமைக்கு தகுதியுடையவராகக் கூறியது.

பிறகு 1955 இல் இந்தியக் குடியுரிமை சட்டம் இயற்றப்பட்டது. அது இந்த அடிப்படை வரையறையில் இருந்து பிறப்பு மற்றும் மரபுவழியில் இந்தியக் குடியுரிமை விதிகளை வகுத்தது. இந்தியக்

குடியுரிமை சட்டம் 1955 இன் பிரிவு 3 இன் படி, அரசியல் அமைப்புச் சட்டம் செயல்படுத்தப்பட்ட தேதிக்குப்(26-01-1950) பின் இந்தியாவில் பிறந்திருக்க வேண்டும் என்றது.

இதன் பின் 1986, 1992, 2003, 2005, 2015 ஆண்டுகளில் குடியுரிமைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த திருத்தங்கள் யாவும் மரபு வழியில் இந்தியக் குடியுரிமை பெறுவதை வற்புறுத்தியது. ஆனால் 2003 இல் வாஜ்பாய் தலைமையிலான பாசக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டமானது, சட்டவிரோத குடியேறிகளை அடையாளங்காண்பது, வெளியேற்றுவது என அகதிகள் மீதான தாக்குதலாகத் திருத்தப்பட்டது.

இந்தியக் குடியுரிமை சட்டம் என்பது காலந்தோரும் ஆட்சியாளர்களால் மாற்றப்பட்டு வந்துள்ள போதும் பாசக ஆட்சிக்கு வந்தால் அத்திருத்தங்கள் குறிப்பாக வங்கதேச இஸ்லாமிய அகதிகளுக்கு (ஆர்.எஸ்.எஸ். மொழியில் சட்ட விரோத குடியேறிகளுக்கு) எதிராகவும் இந்தியாவை விட்டு புலம்பெயர்ந்த வசதிபடைத்த NRIக்களுக்கு ஆதரவாகவும் இருக்கிறது. அதாவது குடியுரிமை சட்டத்தை தனது இந்துத்துவ அடிப்படைவாத கருத்தியலுக்கு ஏற்ப திருத்தி வருவது தெளிவாகிறது. இந்தியாவின் மதச் சார்பின்மையைக் கேள்விக்குள்ளாக்கி வருகிறது. அதனது தொடர்ச்சியாகவே தற்போதைய CAA-19 சட்டத் திருத்தத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

### 3. அகதிகள் குறித்த ஐநாவின் கொள்கை என்ன?

உலகெங்கிலும் உள்ள அகதிகளை நாடு, இன, மத, மொழி பேதமின்றி பாதுகாத்து ஆதரவளிப்பதை நோக்கமாக கொண்டு 1951 ஆம் ஆண்டில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் உருவாக்கப்பட்டது (UNHCR). இந்த ஆணையத்தால் 1951 ஆம் ஆண்டில் அகதிகள் தொடர்பான ஜெனீவா உடன்பாடு, மற்றும் 1967 இல் வகைமுறை உடன்படிக்கை ஏற்படுத்தப் பட்டது. இதில் 140 நாடுகள் கையெழுத்திட் டுள்ளன. இந்த ஜெனீவா உடன்பாடு மற்றும் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகள் அகதிகளை மனித உரிமை அடிப்படையில் நடத்துகிற விதிமுறைகளை ஏற்று நடக்க வேண்டும். அதன்படி, பலவந்தமாக அகதிகளை நாட்டைவிட்டு வெளியேற்றக் கூடாது, அகதிகளுக்கு தண்டம் விதிக்கக் கூடாது, புலம்பெயர்ந்த நாடுகளில் கல்வி,வேலைவாய்ப்பு பெறுவதற்கு உரிமை அளிக்கப்படவேண்டும் உள்ளிட்ட அகதிகள் பாதுகாப்பு நடைமுறைகள் வகுக்கப் பட்டன. இவ்விரண்டிலும் இந்தியா கையெழுத் திடவில்லை. இந்திய அரசுக்கு தேசிய அகதிகள் கொள்கை (National Refugees Policy) என்ற ஒன்றே இல்லை.

### 4. இந்தியாவில் அகதிகள் குடியேற்றத்திற்கான காரணம் என்ன?

இந்தியாவின் எல்லைகளை மதரீதியான பிரிவினைகள் காலந்தோறும் மாற்றி வந்துள்ளன. 1947 ஆம் ஆண்டின் இந்திய பாகிஸ்தான் பிரிவினையானது, பஞ்சாபை பாகிஸ்தான் பஞ்சாம் மற்றும் இந்தியப் பஞ்சாப்பாகவும், வங்கத்தை மேற்கு வங்கம்(இந்தியா) மற்றும் கிழக்கு பாகிஸ்தானாகவும் பிரித்தது. 1971 ஆம் ஆண்டில் நடைபெற்ற வங்கதேச விடுதலைப் போராட்டத்தில், கிழக்கு பாகிஸ்தான் வங்காள தேசமாக தனிநாடாக உருவானது. இவற்றால் மக்கள் பெருமளவில் புலம்பெயர நேர்ந்தது. இவ்வாறு கடந்த காலத்தில் நடைபெற்ற பிரிவினைகளும் போர்களும் சாமானிய மக்களின் வாழ்வை சூறையாடியது.

1971இல் வங்க தேச விடுதலைப் போராட் டத்தின் போது பெருமளவில் வங்கதேச மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு குடியேறினர். குறிப்பாக இந்தியாவின் எல்லையோரத்தில் உள்ள வடகிழக்கு மாநிலங்கள், மேற்கு வங்கத்தில் குடியேறினர். அவர்களில் சிலர்(பௌத்தர்கள் மற்றும் இந்துக்கள்) இஸ்லாமிய பெரும்பான்மை வாதத்தின் மத நெருக்கடி/துன்புறுத்தல் காரணமாக இந்தியாவிற்கு புலம் பெயர்ந்தனர். மேலும் பல ஏழை எளிய இஸ்லாமியர்கள்கூட தங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்கும் எனும் கனவில் இந்தியாவில் குடியேறினர். போலவே அண்மையில் அண்டை நாடான மியான்மரில், ரோஹிங்யா மொழிபேசும் மக்கள் (இவர்களில் பெரும்பான்மையினர் இஸ்லாமி யர்கள், மிகச் சிறுபான்மையினர் இந்துக்கள்) மீதான தாக்குதல்களால்,அவர்கள் இந்தியாவிற்கு தப்பி வந்தனர். இலங்கையில் சிங்களபௌத்தப் பேரினவாதத்தின் இனப் பாகுபாடு மற்றும் போரால் ஈழத் தமிழர்கள் தமிழகத்திற்குள் அகதிகளாக வந்துள்ளனர். இது மட்டுமின்றி, திபெத், பூடானிலிருந்தும் அகதிகள் இந்தியாவில் குடியேறியுள்ளனர்.

### 5. தற்போதைய சட்டத் திருத்தம் அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டதா? பாரபட்சம் இல்லாததா?

இத்திருத்தம் மீதான விவாதத்தில் பேசிய

உள்துறை அமைச்சர் அமித்சா, மூன்று இஸ்லாமிய அண்டை நாடுகளில் உள்ள இந்து மதத்தை சேர்ந்த மக்களே மதரீதியான "துன்புறுத் தலுக்கு" உள்ளானதாகவும் அதனால் இந்துக்களை மட்டுமே கவனத்தில் கொண்ட தாகவும் விளக்கமளித்தார். ஆனால் உள்துறை அமைச்சரின் விளக்கமானது பல அம்சங்களில் எதார்த்த உண்மையோடு முரண்படுவதோடு மதப் பாகுபடுத்தலையும் நியாயப்படுத்த முயற்சிக்கிறது.

1. இந்திய அரசியல் அமைப்பு சட்டம் குடி மக்களுக்கு என சில உரிமைகளைச் சட்டப் பிரிவு 19 இன் கீழ் வழங்கியுள்ளது.மேலும் சட்டப்பிரிவு-14 சமத்துவத்தையும் சட்ட பிரிவு-21 வாழ்வதற்கான உரிமையையும் சுதந்திரத்தையும் அனைவருக்கும் உறுதிப் படுத்துகிறது. குடிமகன் அல்லாதவரும் மனிதரே என்ற வகையில் அவர்களுக்கும் இந்த உரிமை பொருந்தும். எனவே, அகதிகளே என்றாலும் அவர்களிடம் மதரீதியானப் பாகுபாடு காட்டும் குடியுரிமைச் திருத்தச்சட்டம் அரசியல் சாசன சட்டப்பிரிவுகள் -14 மற்றும் 21 ஐ மீறிய, அரசியல் சாசனத்திற்கு விரோதமான சட்டத்திருத்தம் ஆகும். இதுமட்டுமின்றி, இந்தியா ஒப்பமிட்டுள்ள பன்னாட்டு உடன்படிக்கைகளில் இரண்டை இச்சட்டத் திருத்தம் திட்டவட்டமாக மீறுகிறது.

2. ஈழத்தில் இருந்து சிங்கள பௌத்தப் பேரினவாத தாக்குதலால் தஞ்சம்புகும் (இந்து, கிறிஸ்தவ) தமிழர்களையும், பர்மா விலிருந்து வருகிற ரோஹிங்கியா இஸ்லாமி யர்களையும், பூடானில் இருந்து மத துன்புறுத்தல் காரணமாக வருகிற கிறித்த வர்களையும் சீன ஆக்கிரமிப்பு காரணமாக திபெத்தில் இருந்து வருகிற திபெத்தியர் களையும் இத்திருத்தச் சட்டம் ஏற்றுக் கொள்ளவில்லை. பாகிஸ்தானில் அகமதியர்கள் இஸ்லாமியர்களே அல்ல என அந்நாடு சட்டத்திருத்தம் செய்துள்ளது. அதேநேரம் இந்தியாவில் கேரள உயர்நீதி மன்றமோ, அகமதியர்கள் இஸ்லாமி யர்களே எனத் தீர்ப்பளித்துள்ளது. அது எப்படியானாலும் பாகிஸ்தானில் அகமதி யர்கள் மோசமாக நடத்தப்படுகிறார்கள். பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் தஞ்சம் புகுந்துள்ள அகமதியர்கள் இப்போதைய திருத்தச் சட்டத்தால் 'சட்டப்புறம்பான குடியேறிகள்' என முத்திரை குத்தப்படுகிறார்கள்.

3. இந்தியாவின் அண்டை நாடுகளில் இருந்து மத துன்புறுத்தல் காரணமாக மட்டும் அகதிகள் வருவதில்லை. குறிப்பாக வங்க தேசத்தில் இருந்து மதப் பாகுபாடு காரணமாக இந்துக்கள் மற்றும் பௌத்தர்கள் வந்துள்ள போதிலும் பல ஏழை எளிய இஸ்லாமியர்கள்கூட பிழைப் பதற்காக அங்கிருந்து இந்தியாவில் குடியேறினர்.

   இப்படி மதக் காரணங்களுக்காக மட்டு மல்லாமல் நல்ல வாழ்க்கை நிலையை எதிர்நோக்கி புலம்பெயர்ந்தவர்கள் "பொருளாதார அகதிகள்" எனப்படுவர். சரியாக சொல்வதென்றால் 1951 இல் ஐ.நா அகதிகள் மாநாட்டில் அகதிகள் இவ்வாறே வரையறை செய்யப்பட்டுள்ளனர்.

   இந்தப் பொருளாதார அகதிகளை இத்திருத்தச் சட்டம் விட்டுவிடுகிறது.

4. கடல் நீர் மட்டம் உயர்தல்,அதீத இயற்கைப் பேரிடர் நிகழ்வுகள் போன்ற காலநிலை மாற்றப் பிரச்சனையால் புலம்பெயர்கிற சூழலியல் அகதிகளைப்பற்றி இத்திருத்தம் துளியும் கவலைப்படவில்லை.

### 6. அசாம் மக்கள் குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஏன் எதிர்க்கிறார்கள்? இவர் களின் போராட்டம் ஏனையே இந்தியப் பகுதிகளில் நடைபெறுகிற போராட்டத் திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

முன்பே குறிப்பிட்டது போல் நாட்டுப் பிரிவினைகள் மற்றும் போர் காரணங்களாலும் நல்ல வாழ்க்கை நிலைமைகளுக்காகவும் இன்றைய வங்கதேச பகுதியில் இருந்து வெவ்வேறு கால கட்டங்களில் வங்காளிகள் அசாமில் குடியேறினார்கள். காலப்போக்கில் அவர்களுக்கு இந்திய குடிமக்களுக்கு வழங்கப்படும் வாக்குரிமை உள்ளிட்ட பல்வேறு உரிமைகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில், அசாமில் குடியேறிய வங்க தேசத்தவர்களால் தங்களது வேலை வாய்ப்பு, அரசியல், கல்வி, பொருளாதாரம் உள்ளிட்ட உரிமைகள் பாதிக்கப்படுவதாக 1970களில் அசாம் மாணவர் போராட்டம் வெடித்து. இதனையடுத்து ராஜீவ் காந்தி ஆட்சியின்போது அசாமிய மக்களுக்கும் இந்திய அரசிற்குமான 1985 அசாம் உடன்படிக்கை ஏற்பட்டது. அசாம் உடன் படிக்கையின்படி, 1971 மார்ச்சுக்கு முன்பாக வங்க தேசத்திலிருந்து அசாமிற்குள் வந்தவர்களுக்கு

மட்டுமே குடியுரிமைச் சட்டத்தின்படி குடியுரிமை வழங்கப்படும்.

இதன்படியே அசாமில் தேசிய குடிமக்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு,சுமார் 19 லட்சம் மக்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டது. இதில் இந்துக்களும் அடக்கம்.

இப்பின்புலத்தில்தான் தற்போதைய குடியுரிமை திருத்த சட்டம் (CAA 2019) குடியுரிமை பெறுவதற்கு 2014 ஆண்டுக்கு முன்பாக இந்தியாவில் வாழ்ந்திருந்தால் போதுமானது என்கிறது. 1971 க்குப் பின்பு அசாமில் குடியேறிய வங்கதேசத்தவர்கள் வெளியேறுவார்கள் என்று அம்மாநிலத்தில் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்கள் எதிர்பார்த்திருந்த நிலையில், தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்தின்மூலம், வங்க தேசத்திலிருந்து அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் குடியேறிய இஸ்லாமியர் அல்லாதோருக்குக் இந்திய குடியுரிமை கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது என்ற காரணத்தினால் அம்மாநிலத்தில் மீண்டும் போராட்டங்கள் வெடித்துள்ளன. இது அசாமில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அசாம் உடன்படிக்கையை மீறுவதாக உள்ளது எனக் கூறிப் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

அசாம் போரட்டக்காரர்களுக்கு அகதிகள் இஸ்லாமியர்களா, இந்துக்களா? என்பது பொருட்டல்ல. மாறாக அசாமியர்களா? இல்லையா? என்பதே பொருட்டு. அசாமியரல்லாத வேற்று நாட்டவர் எவருக்கும் குடியுரிமை வழங்குவதையே எதிர்க்கிறார்கள்.

### 7. முன்னதாக அசாமில் மேற்கொண்ட தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) ஏற்படுத்திய விளைவுகள் என்ன?

அசாம் உடன்படிக்கையின்படி அசாமில் தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டது. பட்டியலில் இடம்பெற வேண்டி விண்ணப்பிப்பவர்கள் பத்தாண்டுகள் பின்னோக்கிக் காட்டும் பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களை சமர்பிக்க வேண்டும். சுமார் 3.5 கோடி மக்கள் தொகை கொண்ட அசாம் மாநிலத்தில் உள்ள ஒவ்வொருவரும் தம்மிடம் இருக்கும் ஆவணங்களைக் காட்ட வேண்டிவந்தது. இந்தியாவின் கிராமப்புறங்களில் ஆவணங்கள் பராமரிக்கும் பழக்கம் அரிதாகவே காணப்படுகிறது. இதனால், முதலில் தயாரிக்கப்பட்ட தேசிய குடிமக்கள் பதிவேட்டில் மட்டும் சுமார் 40 இலட்சம் பேர் விடுபட்டிருந்தனர். இதையொட்டி எழுந்த பதற்றத்தை தொடர்ந்து மீண்டும் பட்டியல் தயாரிக்கப்பட்டது. கடந்த ஆகஸ்டில் இறுதிப் பட்டியலை மத்திய அரசு வெளியிட்ட போது, ஏறக்குறைய 19 இலட்சம் மக்கள் அப்பட்டியலில் இடம் பெறவில்லை. பட்டியலில் இடம் பெறாதவர்கள், தாங்கள் குடிமக்கள்தான் என்று நிரூபிக்க முறையீடு செய்ய வேண்டும்.

இப்பட்டியலானது அசாமில் சட்டத்திற்குப் புறம்பாக குடியேறியவர்களை அங்கிருந்து வெளியேற்றும் பணியின் பகுதியாகும். இவர்கள் அருகிலுள்ள இஸ்லாமியப் பெரும்பான்மை நாடான வங்கதேசத்திலிருந்து வந்தவர்கள் என இந்திய அரசு கூறுகிறது. ஆனால், இப்பட்டியல் பல பத்தாண்டுகளாக இங்கு முறையாக வாழ்ந்து வந்த இஸ்லாமிய மக்களின் வாழ்க்கையை புரட்டிப் போட்டுள்ளதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இதுமட்டுமின்றி, பெரும்பாலான வங்காள இஸ்லாமியர்கள் பல பத்தாண்டு காலமாக அசாமில் வாழ்ந்து வருகிறார்கள். பலர் அசாமிலேயே பிறந்தும் உள்ளனர். தற்போது வங்காளத்தில் அவர்களுக்கு எந்த வேர்களுமே இல்லை.

குடியுரிமையை இழந்துவிடுவோமோ என்ற அச்சம் மற்றும் மன அழுத்தத்தின் காரணமாக அசாமில் இதுவரை 51 பேர் தற்கொலை செய்துக் கொண்டுள்ளனர். இவர்கள் நாடற்றவர்களாக்கப் படலாம் என ஐ.நா மற்றும் பல்வேறு சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் கவலை தெரிவித்துள்ளன.

இந்தப் பட்டியலில் இடம்பெறாதவர்களை அடைத்து வைப்பதற்கென்று தடுப்பு முகாம்கள் கட்டப்பட்டுள்ளன. தடுப்பு முகாம்களைக் கட்டும் தொழிலாளிகள் உட்பட பலர் தேசியக் குடியுரிமைப் பட்டியலின் கடுமையான விதிகளில் சிக்கியுள்ளனர்.

இப்போது குடியுரிமை திருத்தச் சட்டம் இந்தப் பட்டியலில் உள்ள சுமார் 13 இலட்சம் இந்துக்களுக்கு குடியுரிமை வழங்க வழிவகை செய்கிறது. எஞ்சிய சுமார் 6 இலட்சம் இஸ்லாமியர்கள் ‘சட்டவிரோத குடியேறிகள்’ என தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்படவுள்ளனர்!

### 8. அசாமியர்கள் கேட்டதால் அங்கே தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. அது பற்றி தமிழர்கள் ஏன் அச்சப்பட வேண்டும்?

இந்தியா முழுவதும் தேசிய குடிமக்கள் பதிவேட்டை (NRC) தயாரித்து ஒவ்வொரு குடிமகனுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கும் நோக்கத்தில் 2003 ஆம் ஆண்டு வாஜ்பாய் தலைமையிலான பா.ச.க. அரசு 1955 குடியுரிமை சட்டத்தில் பிரிவு 14A வை அறிமுகப் படுத்தி திருத்தம் கொண்டு வந்தது. அத்திருத்தத்தில் "சட்டப்புறம்பான குடியேறிகள்" என்ற அம்சத்தை புதிதாக சேர்த்தது. இப்போது அமித் ஷா, ராஜ்நாத் சிங் போன்ற மத்திய அமைச்சர்கள் நாடு தழுவிய தேசிய குடிமக்கள் பதிவேட்டைத் (NRC) தயாரிப்போம் என்பதை உறுதியாக சொல்லியுள்ளனர். இந்த பதிவேடானது இந்தியாவில் வசிக்கின்ற இந்திய குடிமகன்கள் மற்றும் வெளிநாட்டில் வசிக்கின்ற இந்திய குடிமகன்கள் குறித்த விவரங்களைக் கொண்டிருக்கும்.

இந்தியாவில் பிறந்திருந்தால் குடியுரிமை உண்டு என்பதற்கு பதிலாக பூர்வீகமாகவே இந்தியாவில் வாழ்ந்துவருபவர் என்பதை நிரூபிக்கும் ஆவணங்களின் அடிப்படையில் யார் இந்திய குடிமக்கள்? யார் இந்திய குடிமக்கள் இல்லை? என்று தீர்மானிக்கப்படும். பின்னர், 'சந்தேகத்திற்கு இடமான குடிமக்கள்' என்றொரு பட்டியல் தயாரிக்கப்படும்.

நம்மில் எத்தனை பேரிடம் பூர்வீகத்தை நிரூபிப்பதற்கான முந்தைய தலைமுறையின் பிறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்கள் உள்ளன? இதுதான் அசாமைத் தாண்டி இந்தியா முழுவதும் போராட்டம் நடப்பதற்கான காரணம்.

### 9. தேசிய குடிமக்கள் பதிவேட்டை (NRC) எப்படி தடுத்து நிறுத்துவது?

இதை நேரடியாக தடுத்து நிறுத்த முடியாது. ஏனென்றால், குடிமகனா? இல்லையா? என்று தெரிந்து கொள்வதற்காக நம்மிடம் வந்துள்ளோம் என்று சொல்லி அரசு அதிகாரிகள் நம்மிடம் ஆவணங்களைக் கேட்கப் போவதில்லை. மாறாக தேசிய மக்கள்தொகை பதிவேடு (NPR) என்ற பெயரில்தான் நம்மிடம் விவரங்களைக் கேட்பதற்கும் ஆவணங்களை சரிபார்ப்பதற்கும் வருவார்கள்.

### 10. இது என்ன தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) என்று இன்னொரு விசயத்தை சொல்கிறீர்கள்?

இந்திய ஒன்றிய அரசு அதன் இணைய தளத்தில் தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) குறித்து வெளியிட்ட விளக்கம் வருமாறு "நாட்டில் உள்ள மக்களை அடையாளம் காணும் வகையில் ஓர் ஒருங்கிணைந்த தகவல் தொகுப்பை உருவாக்குவதாகும்", "குடி விவரங்கள் மற்றும் கைரேகைப் பதிவுகள் உள்ளிட்ட பயொமெட்ரிக் தகவல்களை உள்ளடக்கியிருக்கும்" என்கிறது.

தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) நடைமுறை குறித்து ஆகஸ்ட் மாதம் மேற் கொண்ட மாதிரி கணக்கெடுப்பை ஸ்க்ரால் (scroll) ஊடகம் ஆய்வு செய்தது. இந்த கணக்கெடுப்பில் சுமார் 14 கேள்விகள் கேட்கப்பட்டன. அக் கேள்விகள் பொதுவாக பெயர், வயது, பாலினம், கல்விநிலை, வேலைநிலை, பிறந்த இடம், தாய் மொழி, முகவரி, எந்த நாட்டவர் போன்ற குடி விவர கேள்விகளைம கொண்டுள்ளது. மேற்கூறிய கேள்விகளைப் பொறுத்தவரை இந்த கணக்கெடுப்பு கிட்டத்தட்ட வழக்கமாக மக்கள் தொகை கணக்கெடுப்பில் பெறப்படுகிற விவரங்களை ஒத்துள்ளது. ஆனால் இந்த கேள்விகளோடு கூடுதலாக பெற்றோர்களின் பிறப்பிடம் குறித்த கேள்வி தேசிய மக்கள்தொகை பதிவேட்டில் கேட்கப்படுகிறது. மேலும் ஆதார் எண், ஓட்டுனர் உரிமம் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை, அலைபேசி எண் ஆகிய விவரங்களைக் கட்டாயம் என்றில்லாமல் விருப்பத்தின் பேரில் வழங்கலாம் என்கிறது.

இவ்வாறு மக்களிடமிருந்து பெறப்படுகிற தகவல்களைக் கொண்டு பெற்றோர்களின் பிறப்பிட விவரங்களை ஆதார் எண் போன்ற பயொமெட்ரிக் விவரங்களோடு முதல்முறையாக ஒன்றிய அரசு இணைக்கிறது.

### 11. தேசிய மக்கள்தொகை பதிவேடு (NPR) எவ்வாறு தேசிய குடிமக்கள் பதிவேட்டோடு (NRC) தொடர்பு கொண்டுள்ளது?

முன்பே கூறியது போல், தேசிய குடிமக்கள் பதிவேட்டை (NRC) நாடு முழுவதும் தயாரிக்க 2003இல் குடியுரிமை சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டதல்லவா? அந்த திருத்தத்தை அமல்படுத்துவதற்கு சில விதிகள் வகுக்கப்படு கின்றன. அந்த விதிகளில்தான், தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) அறிமுகப்படுத்தப்படு கிறது.

மக்களிடம் சென்று ஒவ்வொருவரின் விவரத்தோடு அவரது பெற்றோரின் பிறந்த தேதி, மற்றும் பிறந்த இடம் போன்ற விவரங்களையும் ஆவணங்களையும் பார்த்து தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) தயாரிக்கப்பட வேண்டும்.

இந்த பதிவேட்டைச் "சரிபார்த்து" வட்டார

இந்திய குடிமக்கள் பதிவேடு உருவாக்கப்படுகிறது. ஒருவேளை இந்திய குடிமகன் குறித்த சந்தேகம் இருந்தால் "கோரிக்கை மற்றும் மறுப்பு" என்ற அடுத்த நிகழ்முறைக்கு மாற்றிவிடப்படும். இப்படியாக, இந்திய குடிமக்களின் பட்டியலைத் தாங்கிய தேசிய குடிமக்கள் பதிவேடும் (NRC) சந்தேகத்திற்கு இடமானோர் பட்டியலும் தேசிய மக்கள்தொகை பதிவேட்டில் (NPR) இருந்துதான் தயாரிக்கப்பட விருக்கிறது.

தேசிய மக்கள் தொகை பதிவேடே (NPR), தேசிய குடிமக்கள் பதிவேட்டின் (NRC) முதல் படியும் தொடக்கமுமாகும்.

### 12. இவற்றால் இந்தியாவின் இஸ்லாமியக் குடிமக்கள் பாதிப்புக்கு உள்ளாவார்களா?

குடியுரிமை திருத்தச் சட்டம், மதச் சிறுபான்மையினர் மீதான பாகுப்படுத்தலுக்கு சட்டப்பூர்வ வடிவம் கொடுக்கிறது. பெரும்பான்மை மதத்தின் பிரதிநிதியாக கருதிக் கொள்கிற ஆர்.எஸ்.எஸ்./பாஜக அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறுபான்மை மக்களின் சமூக உரிமைகளை சட்டப்பூர்வமாகப் பறிக்கிறது. குடியுரிமை என்ற சட்ட அங்கீகாரத்தைப் பறிக்க முயல்கிறது.

1935 ஆம் ஆண்டில் ஜெர்மனியில் நாஜிக்கள் கொண்டு வந்த நூரம்பெர்க் சட்டமானது, யூதர்களை ஜெர்மன் குடியுரிமை பெறத் தகுதி அற்றவர்கள் ஆக்கியது. அரசு மற்றும் பல்கலைக் கழக வேலை வாய்ப்பு பெறுவதற்கு யூதர்களுக்குத் தடை விதித்தது. பர்மாவில் சிறுபான்மை மக்களான ரோஹிங்கியா இஸ்லாமியர்களுக்கு பர்மிய அரசு குடியுரிமை மறுத்ததை இங்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

எந்த நாட்டில் இன, மத சிறுபான்மையினர் மீதான பாகுபடுத்தல், பெரும்பான்மை குழுக் களால் சட்டப்பூர்வமாக மாற்றப்படுகிறதோ, அது அங்கே சிறுபான்மை மக்கள் மீதான கட்டற்ற வன்முறையை அவிழ்த்துவிடுவதற்கு களத்தை தயாரிக்கிறது.

இந்திய துணைக்கண்டத்தில் இந்து பெரும் பான்மைவாத அடிப்படையில் 'இஸ்லாமியர்கள் இந்நாட்டு மக்கள் அல்ல' என்றும் 'இங்குள்ள இந்துக்களே இஸ்லாமியர்களாக மதம் மாறினார்கள்' என்றும் இஸ்லாமிய மக்களை எதிரிகளாக சித்திரித்து இஸ்லாமியர்களின் குடியுரிமைப் பறிப்பை பா.ச.க., ஆர்.எஸ்.எஸ். நியாயப்படுத்தி பிரச்சாரம் செய்கிறது. அதன் ஒரு பகுதியாக சுற்றியுள்ள மூன்று இஸ்லாமிய நாடுகளில் வாழ்கின்ற இந்து மத மக்களை இந்திய குடிமக்களாக ஏற்றுக் கொண்டு இந்தியாவுக்கு 'இந்து நாடு' என்ற தோற்றத்தை வழங்க முயற்சிக் கின்றது பாசக. அண்டை நாடுகளில் இந்து சிறு பான்மை மக்கள் ஒடுக்குமுறைக்கு ஆளாகிறார்கள். இந்து நாடு அடைக்கலம் தருகிறது என்ற தோற்றத்தை வழங்கி, இந்து பெரும்பான்மைவாத அங்கீகாரத்தை பெற முயல்கிறார்கள். இதை இந்துராஷ்டிரக் கொள்கையின் நடைமுறையாக மேற்கொள்கிறார்கள்.

இஸ்லாமியர்களைப் பார்த்து 'பாகிஸ் தானுக்குப் போ', 'பாபரின் மகனே', அந்நியர்கள், ஊடுருவல்காரர்கள் போன்ற இஸ்லாமிய வெறுப்பு மொழிகள் பா.ஜ.க. தலைவர்களால் அன்றாடம் பேசப்படுகின்றது. "தாய் மதத்திற்கு திரும்ப வேண்டும் அல்லது எல்லோரும் இந்துக்கள் என்று ஒப்புக் கொள்ள வேண்டும், இந்துப் பெயர்களை வைத்துக்கொள்ள வேண்டும்" போன்ற நிபந்தனைகள் இஸ்லாமியர் களிடம் முன்வைக்கப்படுகின்றது. திட்டமிட்ட மாபெரும் படுகொலைகளின் வழியாகவும் இது போன்ற சட்டங்களின் வழியாகவும் ஆர்.எஸ்.எஸ்./ பா.ஜ.க. இதை செய்யத் துடிக்கிறது.

### 13. இம்முயற்சிகள் இஸ்லாமியர்களுக்கு மட்டுமே எதிரானதா?

இல்லை. ஆவணங்கள் இல்லாத எவரும் 'சந்தேகத்திற்கு இடமானவர்' என்ற பட்டியலில் வந்துவிடுவார். இதனால், இந்து, இஸ்லாமியர், கிறித்தவர் என்ற வேறுபாடின்றி கிராமப்புற மற்றும் நகர்ப்புறத்தைச் சேர்ந்த ஏழை,எளிய உழைக்கும் மக்கள், பின் தங்கிய ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்கள், மீனவர்கள், பழங்குடிகள் போன்றோர் தேசிய குடிமக்கள் பட்டியலில் (NRC) இடம்பிடிப்பது கடினம். இந்த ஒட்டுமொத்த நடைமுறைக்குள் போய் வருவது பணமதிப்பிழக்க நடவடிக்கையை விடவும் பன்மடங்கு இழப்பையும் அலைக்கழிப்பையும் உண்டாக்கும்.

### 14. திடுமென அயலவர்கள்/ஊடுருவல்காரர்கள்/ அகதிகள் மீதான வெறுப்பரசியலை முக்கியப் பிரச்சார அரசியல் உத்தியாக பாசக கையெலெடுப்பதற்கான காரணம்தான் என்ன? இந்துராஷ்டிர சித்தாந்தம் மட்டும் தான் காரணமா?

அதுமட்டும்தான் எனக் கூறமுடியாது. குறிப்பாக இதற்கு பின்னாலான பொருளாதார காரணங்களும் உள்ளன.

அரை நூற்றாண்டு கால முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைகள் (தனியார் மயம், தாராள மயம், உலக மயம்) ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் வட அமெரிக்கா விலும் ஏற்படுத்திய சமூக நெருக்கடிகள், அதன் துணைவிளைவான ஊழல்கள், சமூக குற்றங்கள், வேலை வாய்ப்பின்மை ஆகியவை உலகப் பொருளாதார ஒழுங்கை ஆட்டங்காண வைத்துள்ளன.

உலகமய, தாராளமயக் கொள்கைகள் தோற்றுவித்த சமூக நெருக்கடிகளுக்கு எதிரான பாதிக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் கோபமும் கார்ப்பரேட்களுக்கு எதிரான வர்க்கப் போராட்டமும் அயலவர்கள்/ஊடுருவல்காரர்கள்/அகதிகள் மீதான வெறுப்பரசியலாக மடைமாற்றப்படுகின்றன. இஸ்லாம் வெறுப்பு, இன வெறுப்பு, அகதிகள் எதிர்ப்பு, அதீத தேசியவாதம், கவர்ச்சிகர வாய்வீச்சுரைகள், நிறைவேற்ற இயலாத வாக்குறுதிகளை வழங்குவது, அதிமனித வழிபாட்டிற்கு சமூகத்தை உடன்பட வைப்பது, ஊடகங்களை விலைக்கு வாங்குவது, கார்ப்பரேட் மய பிரச்சார பாணி போன்ற பல்வேறு விதமான வலது பாபுலிச உத்திகள் கடைபிடிக்கப்படுகின்றன.

உலகெங்கிலும் வலதுசாரி பிற்போக்கு சக்திகள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுகின்றன. முற்போக்கு முகாம்களின் சமூக செல்வாக்குகள் சரிவுற்றுவருகின்றன. இது கடந்த பத்தாண்டுகால உலக அரசியல் போக்காகவே மாறிவருகிறது. இது வெறும் தற்செயல் நிகழ்வல்ல.

இப்படித்தான் வலதுசாரி பிற்போக்கு சக்திகளான அமெரிக்காவில் ட்ரம்ப், பிரேசிலில் போல் சொனரோ, துருக்கியில் எர்டோகன், இங்கிலாந்தில் போரிஸ் ஜான்சன் போன்றோர்கள் தேர்தல் வழியாகவே ஆட்சியைப் பிடித்துள்ளன. இவர்களால் முன்வைக்கப்படும் தற்காப்புவாதம், இஸ்லாம் வெறுப்பு, அகதிகள் வெறுப்பு அரசியலுக்கு மேற்கூறிய முதலாளித்துவ பொருளாதார நெருக்கடிகளும் அதன் விளைவான சமூக நெருக்கடிகளும்/கொந்தளிப்புகளும் அடித்தளமாக உள்ளன.

முதலாம் உலகப் போருக்குப் பிந்தைய ஜெர்மனியானது,போரால் பெரும் பொருளாதார நெருக்கடிகளாலும் சமூக நெருக்கடிகளாலும் சூழப்பட்டிருந்த நிலையில்தான் யூதர்கள் மீதான வெறுப்பரசியலை இட்லரின் நாசிசம் முன்வைத்து மக்களைப் பாகுபடுத்தியது. ஹிட்லருக்கு முன்பே யூதர்கள் பற்றிய கேள்விகள் இருந்தாலும் நெருக்கடி காலத்தில், அது முன்னுக்குக் கொண்டு வரப்பட்டு சமூகத்தைப் பிளவுபடுத்தியது.

ஆக, இந்த பின்புலத்தில் பார்த்தோம் என்றால், இந்தியாவில் இஸ்லாமியர்களுக்கு எதிரான பாகுபாடு ஏற்கெனவே இருந்தாலும், தற்போது இந்தியாவின் பொருளாதார சீரழிவு காலகட்டத்தில், வளர்ச்சி கோசம் மங்கலாகி விட்ட சூழலில், ஆட்சியாளர்கள் மீதான சமூகத்தின் கொந்தளிப்புகள் மத, இன மோதலாக வலது பிற்போக்கு சக்திகளால் மடை மாற்றப்படுகிறது. தற்போது அமித்சாவின் 'ஊடுருவல்கார்கள்' பிரச்சாரத்தை மேற்கூறிய பின்புலத்தில் காண்பது அவசியாமாகும்.

## 15. அப்படியென்றால், தேசிய மக்கள் தொகை பதிவேட்டுப் பணியை எதிர்க்கவேண்டுமா?

ஆம். நிச்சயமாக. நாடெங்கிலும் குடியுரிமை திருத்த சட்டத்திற்கு (CAA-2019) எதிராகவும் தேசிய குடிமக்கள் பதிவேட்டிற்கு (NRC) எதிராகவும் போராட்டங்கள் தீவிரமாகி வருகின்ற நிலையில், அதிகம் கவனம் பெறாத தேசிய மக்கள் தொகை பதிவேட்டை(National population Register (NPR)) அமலாக்க முயல்கிற அதிகார வர்க்க முயற்சிகள் தற்போது எதிர்ப்பிற்குள்ளாகியுள்ளன.

மேற்கு வங்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) தயாரிக்கும் வேலையை "பொதுமக்கள் நலனின்" பெயரில் நிறுத்துவதாக அம்மாநில முதல்வர் மம்தா பேனர்ஜி முதலில் ஆணையிட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதைத் தொடர்ந்த சிவில் சமூகத்தின் தொடர் போராட்டத்தால் தற்போது கேரளா, ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் மேற்கு வங்க மாநில அரசுகள் குடியுரிமை திருத்த சட்டத்தை அமல்படுத்தமாட்டோம் என மாநில சட்டமன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. தற்போது தெலுங்கானா அரசும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப் போவதாக அறிவித்துள்ளன. கடந்த ஜூலை 31, 2019இல் அசாம் தவிர நாடு முழுவதுமுள்ள அனைத்து மாநிலங்களிலும் மக்கள்தொகை பதிவேட்டை (NPR) மேற்கொள்ளவேண்டும் என மோடி அரசு அரசாணைப் பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழக அரசு இது மக்கள் தொகை கணக்கெடுப்புதான் என்று பொய் சொல்லிக் கொண்டிருக்கும் நிலையில் தேசிய மக்கள்தொகை பதிவேட்டுக்கான கணக்கெடுப்பைப் புறக்கணிப்பது என்ற ஒத்துழையாமை இயக்கத்தை நடத்த வேண்டிய இடத்தில் நாம் உள்ளோம்.

- 'தமிழ்த் தேச மக்கள் முன்னணி' வெளியீடு




# திராவிடர் விவசாய–தொழிலாளர் சங்கத்தின் வெளிச்சத்துக்கு வராத வரலாறு

வெளிச்சத்துக்கு வராத லால்குடி திராவிடர் விவசாயத் தொழிலாளர் சங்க வரலாற்றை பதிவு செய்திருக்கிறது, பெரியார் சரவணன் எழுதியுள்ள ‘திராவிடர் விவசாய-தொழிலாளர் சங்கம்’ நூல். பெரியார் மீது தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கும் திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கத்துக்கும் உள்ள தொடர்புகளையும் நூல் விளக்குகிறது. திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த மலையப்பன் என்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த அதிகாரி, திருச்சி பகுதியில் பார்ப்பன - உயர் ஜாதிப் பண்ணையார்களுக்கு எதிராக குத்தகைதாரர்களுக்கு ஆதரவாக செயல்பட்டார். குறிப்பாக , குளித்தலை பகுதியிலுள்ள நங்கவரம் பண்ணைக்கு எதிராக குத்தகைதாரர் பக்கம் நின்று நிலங்களைப் பிரித்துக் கொடுத்தார். இது நடந்தது 1950ஆம் ஆண்டு. நங்கவரம் பண்ணை மிகவும் செல்வாக்குள்ளது. ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இதுவா வேலை என்று அன்று பார்ப்பனர்களின் குரலாகவே வெளி வந்து கொண்டிருந்த ‘இந்து’ ஏடு கண்டித்து எழுதியது. மாவட்ட ஆட்சித் தலைவரை எதிர்த்து வழக்கு தொடுத்தவர் ஒரு அய்யங்கார் பார்ப்பனர்; அரசு வழக்கறிஞர் ஒரு அய்யங்கார் பார்ப்பனர், நீதிபதி ஒரு அய்யங்கார் பார்ப்பனர். மாவட்ட ஆட்சித்தலைவருக்கு எதிராக தீர்ப்பு எழுதிய அய்யங்கார் நீதிபதி, தனது அதிகார எல்லையை மீறி மாவட்ட ஆட்சித் தலைவர் மலையப்பனை கடும் வார்த்தைகளால் விமர்சித்தார்.

நேர்மையாக செயல்பட்ட ஒரு மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த அதிகாரியை பார்ப்பனர்கள் பொறியில் சிக்க வைத்து நெருக்கடி தந்ததை அறிந்த பெரியார், கரூர், பசுபதிபாளையம் பகுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மலையப்பனுக்கு ஆதரவாக நின்று நீதிமன்றத் தீர்ப்பை கடுமையாக சாடினார். இதில்தான் பெரியார் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. அந்த அவமதிப்பு வழக்கில் பெரியாரை ஜாதிப் பெயரோடு அழைத்து அவமானப்படுத்திய வழக்கறிஞர் சீனிவாச்சாரி மீது திராவகம் வீசியதாக பெரியார் தொண்டர் தியாகராசன் கைது செய்யப்பட்டார்.

தஞ்சை மாவட்ட திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கத்தில் நாகை எஸ்.எஸ். பாட்சா வுடன் இணைந்து பணியாற்றி வந்த திருச்சி ஏ.எம். ஜோசப்,

பெரியார் அழைப்பை ஏற்று 1952இல் திருச்சி மாவட்ட திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கத்தின் அமைப்புகளுக்கான வேலைகளைத் தொடங்கினார். அப்போது லால்குடிப் பகுதி முழுதும் விரல் விட்டு எண்ணக்கூடிய சில பார்ப்பன - உயர்ஜாதிப் பண்ணையார்கள் கட்டுப் பாட்டில்தான் இருந்தது.

கூகூர் பரமசிவம் பிள்ளை பண்ணை, தாத்தாச்சாரியார் பண்ணை, கொண்டையம் பட்டி செட்டியார் பண்ணை, மணக்கால் பாப்பம்மாள் பண்ணை என்று ஆதிக்கம் கொடி கட்டிப் பறந்த காலத்தில் திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் ஏனைய சங்கங்களிடமிருந்து வேறுபட்டு சுயமரியாதை உணர்வுடன் போராட்டத்தில் இறங்கியது. திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம், கூலி உயர்வுக்காகப் போராடவில்லை. ஜாதி - தீண்டாமை ஒழிப்பு; சுயமரியாதைக்காகவும் போராடியது என்பதே அதன் தனித்துவம். இந்தச் சங்கத்தில் உறுப்பினராக வேண்டுமானால் பொய் பேசக் கூடாது; குடிக்கக் கூடாது; ஜாதி, தீண்டாமையை எதிர்க்க வேண்டும்; குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

லால்குடியில் ஒரு தொடர் வண்டி நிலையத்தையே உருவாக்கக்கூடிய செல்வாக்குடன் இருந்த கொண்டையம்பட்டி செட்டியார் பண்ணை, வெற்றிலை சாகுபடி செய்து வந்த கொடிக்கால் பிள்ளைமார் ஜாதியினரான விவசாயிகளை தங்கள் ஆதரவாளர்களாக்கிக் கொண்டு, விவசாயத் தொழிலாளர்களையும் குத்தகை சாகுபடியாளர்களையும் கொடூரமாக ஒடுக்கி வந்தபோது, திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம், “விளைச்சலில் சரி பாதியை பிரித்துக் கொடு” என்ற உரிமைப் போராட்டத்தைத் தொடங்கியது. பண்ணை - குத்தகைத் தொகையைக் கடுமையாக உயர்த்தியபோது, குத்தகைத் தொகையை தரமாட்டோம் என்று தொழிலாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். வேலை நேரம் போக இரவில் அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் (கெரசின் எண்ணெய்யில் எரியும் விளக்கு) கூட்டங்கள் நடத்தி ஆலோசனை நடக்கும். பெரியார் கருத்துகள் பேசப்படும். கூட்டத்தில் எடுக்கும் முடிவுகளை விளக்கி ஊர்வலங்கள், பரப்புரை, துண்டறிக்கை விநியோகம் நடக்கும். ஒரு கட்டத்தில் ஆண்டைகளிடம் இனி கெஞ்சுவதில் பயன் இல்லை; அறுவடை நெல்லை நாமே வீட்டுக்கு எடுத்துச் செல்வோம்; வருவதை எதிர் கொள்வோம் என்று முடிவெடுத்தார்கள். அது வரை பொதுக் களத்துக்குத்தான் அறுவடை வரும். இந்த முடிவை அறிந்து கொண்ட, கொண்டையாம் பட்டி பண்ணை கொடிக்கால் விவசாயிகளைத் திரட்டி, தி.வி.தொ. சங்கத்தினரை வழி மறித்துத் தாக்க ஏற்பாடுகள் செய்தனர். கூகூர் - திருமங்கலம் பிரிவில் இரு தரப்புக்கும் நடந்த மோதலில் 12க்கும் மேற்பட்ட திராவிடர் விவசாய சங்கத் தொழிலாளர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். கொல்லப்பட்டவர்கள் 20க்கும் அதிகம் என்று மூத்த தோழர் ஒருவர் இப்போதும் உயிருடன் இருப்பவர் கூறுகிறார். அதே போல் மணக்கால் பாப்பம்மாள் பண்ணையில் சம பங்கு கேட்ட தி.வி.தொ. சங்கத்தினர் மீது மதுரையிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து நடத்திய தாக்குதலில் 7 பேர் கொல்லப் பட்டனர். இந்த போராட்ட வரலாறுகள் பதிவு செய்யப்படவில்லை என்பதுதான் துயரம். இவ்வளவு அடக்குமுறை - படுகொலைகளுக்குப் பிறகு விளைச்சலில் சமபங்கு என்ற கோரிக்கையை மாற்றி பயிரிடும் நிலத்தில் சம பங்கு என்ற கோரிக்கையோடு போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தினார்கள். இவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகு தான் 1952இல் தமிழ்நாட்டில் அதிகாரத்துக்கு வந்த இராஜகோபாலாச்சாரி பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார். கீழத் தஞ்சையில் நில பிரபுத்துவம் வீழ்த்தப்பட்டதற்குக் காரணம் திராவிட இயக்க ஆட்சியில் கொண்டு வரப்பட்ட குத்தகை தாரர்களைப் பாதுகாக்கும் சட்டங்களே என்று கள ஆய்வுகள் நடத்தி விரிவான நூலை எழுதியிருக்கிறார், பொருளாதார ஆய்வாளர் ஜெயரஞ்சன்.

லால்குடி பகுதியில் திராவிட விவசாய தொழிலாளர் சங்கம் நடத்திய போராட்டங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது இந்த நூல். இது தொடர்பான விரிவான ஆய்வுகள் மேலும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கான கதவினைத் திறந்து விட்டிருக்கிறது, இந்த நூல்.

**நூல் : திராவிடர் விவசாய-தொழிலாளர் சங்கம்**
**வெளியீடு : கருஞ்சட்டைப் பதிப்பகம், சென்னை-87.**
**விலை : ரூ.70**
**கிடைக்குமிடம் : புதிய எண்.120, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை-24.**

‘இரா’

# அது என்ன "சரசுவதி சிந்து நாகரிகம்"?

● ஆதி வள்ளியப்பன்

*மா*னிட நாகரிகங்களில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுவது 'இண்டஸ் வேலி சிவிலைசேஷன்' என்ற சிந்துவெளி நாகரிகம். இந்தத் தளம் கண்டு பிடிக்கப்பட்ட நாள் தொடங்கி, அறிவியல், வரலாறு, தொல்லியல் உள்ளிட்ட துறைசார் வல்லுநர்கள் இந்த நாகரிகத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள இன்றுவரை தொடர் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், 2020 மத்திய பட்ஜெட் உரையின்போது நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், 'சரஸ்வதி சிந்து நாகரிகம்' என்று இதற்குப் புதுப் பெயரிட்டுள்ளார்; 'ஷ்ரேனி' என்ற வர்த்தகச் சங்கங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் சிந்துவெளி முத்திரைகளில் காணக்கிடைப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிந்துவெளி வரிவடிவம் குறித்து முதன்மை ஆய்வுகளை மேற்கொண்ட மறைந்த ஐராவதம் மகாதேவன், பின்லாந்து ஆய்வாளர் அஸ்கோ பர்போலா ஆகியோரே நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அறிவித்த கருத்துகள் சார்ந்த திட்டவட்டமான முடிவுவை எட்டியிருக்கவில்லை.

சிந்துவெளியின் மொழி எது? சிந்துவெளி முத்திரைகளில் பதிக்கப்பட்டுள்ள எழுத்துகள் எதைச் சுட்டுகின்றன? இந்த இரண்டு கேள்விகளுக்கு விடை தேடி கடந்த நூறாண்டுகளாக ஆராய்ச்சிகள் தொடர்ந்து வருகின்றன; திட்டவட்டமான முடிவுகள் இன்னும் எட்டப்பட வில்லை.

அதேநேரம் சிந்துவெளி தொடர்பான மரபணுத் தரவுகள், தொல்லியல், மொழியியல் ஆய்வுகள் ஆகிய அனைத்தும் ஒரே முடிவை நோக்கியே நகர்ந்துள்ளன. இந்த மூன்று வெவ்வேறு துறை சார்ந்த ஆய்வுகளும் சுட்டும் ஒரே திசை, சிந்துவெளியில் பேசப்பட்டது பூர்வ திராவிட மொழி (Proto-Dravidian language) என்பதுதான்.

ஈரானின் ஸாக்ரோஸைச் (Zagros) சேர்ந்த உழவர்கள், ஆதி இந்தியர்கள் ஆகியோரின் கலப்புதான் சிந்துவெளி நாகரிக மக்கள் என்பது நவீன மரபணுத் தரவுகள் முன்வைக்கும் முடிவு. தொல்லியல் ஆதாரங்களும் அகழாய்வுச் சான்றுகளும் இந்த முடிவை வலுப்படுத்துகின்றன.

எழுத்து முறை 5000-5500 ஆண்டுகளுக்கு முன்புதான் உருவானது. 'கியூனிஃபார்ம்' எனப்படும் சித்திர எழுத்து முறையில் எழுதப்பட்ட மெசபடோமிய நாகரிக மொழிகள் எவையும் இன்றைக் குப் பேசப்படுவதில்லை. ஸாக்ரோஸ் பகுதியைச் சேர்ந்த உழவர்கள் சிந்துவெளி நாகரிகத்துக்கு இடம்பெயர்ந்து வந்தார்கள்.

அப்படி வந்தபோது, அவர்கள் கொண்டுவந்த மொழி பூர்வ ஈலாமைட்டாக (Elamite) இருக்க வேண்டும். இன்றைக்கும் பலூசிஸ்தானில் வாழும் பிராஹூய் (Brahui) இனக்குழு மக்கள் பிராஹூய் என்ற திராவிட மொழியையே பேசு கிறார்கள். (அவர்களின் பூர்வ தொழில் கால்நடை மேய்த்தல்) பிராஹூய் மொழி ஈலாமைட் மொழியுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டது.

சிந்துவெளி நாகரிகம் குறித்த தொல்லியல் சான்றுகள் கண்டறியப்பட்டு இன்னும் நூறாண்டுகள்கூட முடியவில்லை. ஆனால், அதற்கு முன்பே ஈலாமைட் - திராவிட மொழிகளுக்கு இடையிலான ஒற்றுமை வலியுறுத்தப்பட்டது. தமிழ் எழுத்து மொழிக் கொள்கைகளின் அடிப்படை யிலேயே ஈலாமைட் எழுத்து மொழியும் இயங்குவதாக பிரிட்டனைச் சேர்ந்த மொழி யியலாளர் எட்வின் நாரிஸ் 1853இல் சுட்டிக்காட்டியுள்ளார். அதற்கு மூன்று ஆண்டுகள் கழித்து வெளியான 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' நூலில் ராபர்ட் கால்டுவெல்லும் இதே தொடர்பை வலியுறுத்தி யுள்ளார்.

திராவிட மொழி ஆராய்ச்சியாளரான முனைவர் டேவிட் டபிள்யு. மெக்ஆல்பின், பூர்வ ஈலாமோ - திராவிட மொழிகள் குறித்த ஆய்வுக் கட்டுரையை 1981-ல் எழுதினார். 2000 ஆண்டுகளுக்கு முன்பே ஈலாமைட் அழிந்து விட்டது; என்றாலும், தன்னுடைய ஆய்வுக்கு 250 ஈலாமைட் வேர்ச் சொற்களை எடுத்துக் கொண் டார். அவற்றில் 40 சதவீத வேர்ச் சொற்கள் இரண்டு மொழிக் குடும்பத்திலும் பொருந்திப் போயின.

சிந்துவெளி நாகரிகத்தி லிருந்து மெசபடோமியாவுக்கு முக்கியத் தாவரம் ஒன்று இறக்குமதி செய்யப்பட்டது. அந்தத் தாவரம் எள். மெசபடோமிய நாகரிகத்தின் முதன்மை மொழிகளில் ஒன்றான அக்காடியனிலும் திராவிட மொழிகள் அனைத்திலும் இந்த எண்ணெய் வித்துத் தாவரத்தின் பெயர் இன்றைக் கும் கூட எள் என்றே வழங்கப் படுகிறது.

இந்தத் தொடர்பே சிந்துவெளியில் வாழ்ந்தவர்கள் பண்டைய திராவிட மக்கள்தாம் என்ற கருதுகோளை வலுப்படுத்துகிறது என்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் பிராங்க்ளின் சி. சவுத்வொர்த். இப்படி மர பணுத் தரவுகள், தொல்லியல், அகழாய்வுச் சான்றுகள் வலி யுறுத்தும் திராவிடத் தொடர்பை சர்வதேச மொழி யியல் அறிஞர்களும் தங்கள் ஆராய்ச்சி மூலம் உறுதிப் படுத்துகிறார்கள்.

உலகம் போற்றும் தமிழ்த் தொல்லியல் அறிஞரான ஐராவதம் மகாதேவன், சிந்து வெளி எழுத்துக்களுக்கும் திராவிட மொழிக் குடும்பத் துக்கும் இடையிலான உறவை 'The Indus Script: Text, Concordance and Tables' என்ற நூலில் விரிவாக எழுதியிருக்கிறார். சிந்துவெளி எழுத்துகள் குறித்த ஆராய்ச்சி களில் அந்த நூல் ஒரு மைல்கல்.

"சிந்துவெளியின் மொழி பூர்வ திராவிடம்தான் என்பதற்கான ஆதாரங்கள் என்னுடைய ஆய்வில் கிடைத்திருக்கின்றன. சிந்துவெளி வரிவடிவத்தை முழுமையாகக் கண்டறிந்து விட்டதாக நான் கூறமாட்டேன். அதேநேரம் சிந்துவெளி முத்திரைகள் திராவிட மொழித் தன்மையைப் பிரதிபலிக் கின்றன" என்று ஐராவதம் மகா தேவன் மற்றொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மட்டுமல்லாமல் அஸ்கோ பர்போலா தொடங்கி ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர். பாலகிருஷ்ணன், 'எர்லி இந்தியன்ஸ்' நூலாசிரியர் டோனி ஜோசப் வரை சிந்து வெளி எழுத்துகள் குறித்து ஆதாரப் பூர்வமாக எழுதியிருக்கிறார்கள். மொழி, பண்பாட்டு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட இவர்களின் விரிவான ஆய்வுகளின் மூலம் சிந்துவெளியில் பேசப்பட்டது பூர்வ திராவிட மொழிதான் என்பது நிறுவப்பட்டுள்ளது.

அப்படியானால் சிந்துவெளி மக்கள் எப்போது தென்னிந்தியாவுக்கு வந்தார்கள்? ஸாக்ரோஸிலிருந்த கால்நடை மேய்ப்பர்கள் சிந்து

வெளிக்கு வந்த பிறகு, தென்னிந் தியப் பகுதிகளுக்கும் 5,000 ஆண்டுகளுக்கு முன்னதாகக் குறிப்பிட்ட அளவுக்கு வந்திருக்க வேண்டும். அதிலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு சிந்துவெளி நாகரிகம் சரியத் தொடங்கியது.

அந்த நிலையில், சிந்து வெளி மக்களும் தென்னிந்தியாவில் கால்நடை மேய்த்துக் கொண்டிருந்தவர்களுடன் கலந்ததால் திராவிட நாகரிகம் தழைத்திருக்க வேண்டும். அவர்கள் பேசிய மொழிகளின் வேர் ஈரானில் இருந்து கிளைத் திருப்பதற்கான சாத்தியங்களையே பெரும்பாலான ஆய்வுகள் சுட்டுகின்றன என்பதில் இருவேறு கருத்தில்லை.

காகர் (Ghaggar) ஆறு தான் சரஸ்வதி ஆறு என்று இன்றைக்கு ஒரு தரப்பினர் கூறுகின்றனர். ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் இந்த ஆறு, சிவாலிக் மலைப் பகுதியில் தோன்றி பஞ்சாப், ஹரியாணா, ராஜஸ்தான், பாகிஸ்தானின் சோலிஸ்தான், சிந்து ஆகிய பகுதிகளில் பாய்ந்தது. முன்பு காகர் என்றும் தற்போது ஹக்ரா (Hakra) என்றும் இந்த ஆறு குறிப்பிடப்படுகிறது.

சிந்துவெளி நாகரிகம் சிந்து நதியில் மட்டு மல்லாமல் ஹக்ராவின் கரைகளிலும் செழித்தது. இந்த ஹக்ராதான் பண்டைய சரஸ்வதி ஆறு; இதைக் கண்டடைவதன் மூலம் ஆரியர்கள் வெளி யில் இருந்து வந்தவர்கள் அல்லர் என்ற கூற்றுக்கு நிரூபணமாக முன் வைக்க முயலப்படு கிறது.

வேதங்களில் முதலாவதாகக் கருதப்படும் ரிக் வேதத்தில், மலைச் சிகரங்களையே தகர்க்கக் கூடிய பேராறாக சரஸ்வதி போற்றப்படுகிறது. ஆனால், ஹக்ராவோ மலைச் சிகரங்களைத் தகர்க்கும் பேராறு அல்ல; பருவமழையால் உயிர் பெறும் பருவகால ஆறாகவே இருந்திருக்கிறது.

ரிக் வேதத்தில் குறிப்பிடப்படுவதைப் போல், ஹக்ரா பேராறாக இருந்திருந்தால், ஆண்டு முழுவதும் நீர் பாய்ந்த ஜீவநதியாக இருந்திருக்க வேண்டும். ஆனால், பருவமழை தப்பியதாலேயே வறண்டு, பிறகு மறைந்தது.

4,200 ஆண்டுகளுக்கு முன்பு பருவமழைப் பற்றாக் குறையால் ஆறுகள் வறண்ட தாலேயே எகிப்து, மெசப டோமியா, சீனா, இந்தியா ஆகிய பகுதிகளில் தழைத்த நாகரிகங்கள் ஒரே கால கட்டத்தில் சரிவைக் கண்டன. இதே காரணத்தால் தான் சிந்து வெளியும் சரிந்தது. சர்வதேச ஸ்டிராடிகிராபி (பாறைப் படிவியல்) ஆணையம் இந்தக் கருத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

அப்படியானால் ரிக் வேதத்தில் குறிப்பிடப் படும் சரஸ்வதி ஆறு எது? ஆப்கானிஸ்தானைக் கடந்தே ஆரியர்கள் இந்திய நிலப் பகுதிக்கு வந்துசேர்ந்தார்கள். அப்படி வந்தபோது அங்கிருந்த ஹராவைதி (Harahvaiti) ஆற்றையே சரஸ்வதி என்று அவர்கள் குறிப்பிட்டிருப் பதற்கான சாத்தியம் அதிகம். இந்தோ-ஈரானிய மொழிகளில் ‘ச’ என்ற எழுத்தில் தொடங்கும் சொற்கள் ‘ஹ’ என்ற எழுத்தால் மாற்றப்படுவது வழக்கமாக இருந்துள்ளது.

சிந்து எனப்பட்டது ஹிந்து என்று மாறியது இப்படித்தான். அதைப் போலவே ஹராவைதி, சரஸ்வதி ஆகிவிட்டது. இமாலயப் பனி உருகுதலால் ஆண்டு முழுவதும் நீரைப் பெறும் ஜீவநதி இது. இன்றைக்கு அர்கான்தப் (Arghandab) என்றழைக்கப்படும் ஹராவைதி, ரிக் வேதம் குறிப்பிடுவதுபோல் உண்மையிலேயே பேராறு தான்.

**நன்றி: டோனி ஜோசப் எழுதிய ‘எர்லி இந்தியன்ஸ்’ நூல்**




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.org

## ஆண்டுக் கட்டணம் ரூ.200

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

✆ 7373684049 – periyarmuzhakkam@gmail.com



# 1971 சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டு வழக்கில் சாட்சிக் கூண்டில் ஏறி 'துக்ளக்' சோ கேட்ட மன்னிப்பு

● வழக்கறிஞர் எஸ். துரைசாமி

1971ஆம் ஆண்டு சேலத்தில் பெரியார் நடத்திய மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாட்டு நிகழ்வுகள் 2020இல் மீண்டும் பொது வெளியில் ஊடகங்களில் விவாதத்துக்கு வந்தது. 'துக்ளக்' பத்திரிகையில் 50ஆவது ஆண்டு விழாவில் பேசிய நடிகர் ரஜினிகாந்த், அந்த மாநாட்டில் ராமன்-சீதை சிலைகள் நிர்வாணமாக செருப்பு மாலைகள் போடப்பட்டு எடுத்து வரப்பட்டதாகப் பேசினார். அப்படி ஏதும் நடக்கவில்லை. உண்மையைத் திருத்திப் பேசுகிறார் நடிகர் ரஜினிகாந்த் என்று திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட பெரியார் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன. இந்த நிலையில், தான் பேசியது உண்மை என்று ரஜினிகாந்த் கூறியதோடு, சம்பவம் நடந்த சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு 'அவுட்லுக்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளி வந்த கட்டுரையில் இடம் பெற்ற சில வரிகளை தனது பேச்சுக்கு ஆதாரமாகக் காட்டினார். இதைத் தொடர்ந்து சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் நடந்த சம்பவங்கள் குறித்தும், அது தொடர்பாக நடந்த வழக்குகள் குறித்தும் விரிவாக மூத்த வழக்கறிஞர் துரைசாமி, ஊடகங்கள், கூட்டங்கள் வழியாக விளக்கங்களை அளித்தார்.

இந்த வழக்குகள் குறித்து எவ்வித ஆதாரங்களும் இல்லை என்றும், 'துக்ளக்' சோ சாட்சியாக விசாரிக்கப்பட்டார் என்பதற்கு ஆதாரம் இல்லை என்றும், அது குறித்து விளக்கம் தருவதற்கு 'துக்ளக்' ஆசிரியர் சோ இப்போது உயிருடன் இல்லை என்றும், குருமூர்த்தி பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கும் பதிலை எழுதியிருந்தார்.

இதற்கு மறுப்பு தெரிவித்து வழக்கறிஞர் எஸ்.துரைசாமி 'துக்ளக்' ஏட்டுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

சேலம் மூடநம்பிக்கை ஊர்வலம் தொடர்பாக நடந்த வழக்குகளையும் 'துக்ளக்' சோ நீதிமன்றத்தில் சாட்சியமளித்த போது அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி களையும் விரிவாக பதிவு செய்கிறது இந்த மறுப்புக் கடிதம்.

1971 சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டை ஒட்டி தொடரப்பட்டது மூன்று வழக்குகள்.

1. சேலம் நகர ஜனசங்கத்தைச் (RSS ன் கிளை) சேர்ந்த ஒருவர், மேற்படி ஊர்வலத்தில் ராமர் படத்தை செருப்பால் அடித்ததாலும், இந்து கடவுள்களின் நிர்வாணப் படங்களை ஊர்வலமாகக் கொண்டு வந்ததாலும் அவருடைய மனது புண்பட்டதால் இந்திய தண்டனைச் சட்டம் 294(அ) படி தந்தை பெரியாரையும் மற்றம் 2. திருவாரூர் தங்கராசு 3. பேராசிரியர் தி.வை.சொக்கப்பா (முன்னாள் சேலம் கலைக் கல்லூரி முதல்வர்) 4. சேலம் நகர திராவிடர் கழக செயலாளர் பச்சமுத்து 5. சேலம் நகர திராவிடர் கழகத் தலைவர் ஆர். நடேசன் ஆகியோர் மீது சேலம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தனிநபர் வழக்கு தொடர்ந்தார்.

2. இரண்டாவது வழக்கு மேற்படி சேலம் மாநாட்டில் தந்தை பெரியார் நிறைவேற்றிய தீர்மானம் 'ஒருவன் மனைவி மற்றவனை விரும்புவது என்பதை ஒரு குற்றமாக்கக் கூடாது". இந்தத் தீர்மானத்தை 1. இந்து 2. இண்டியன் எக்ஸ்பிரஸ் 3. தினமணி ஆகிய பார்ப்பன பத்திரிக்கைகள் 'மாற்றான் மனைவியை அபகரித்துக் கொண்டு போனால் அதை தவறாகக் கருதக்கூடாது" என திரித்து வெளியிட்டது. அது தவறான செய்தி என்பதால் மூன்று பத்திரிக்கை ஆசிரியர்களின் மீது மாநாட்டு வரவேற்பு குழு தலைவர் என்ற முறையில் பேராசிரியர் தி.வை. சொக்கப்பா சென்னை தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 500இன் கீழ் மான நஷ்ட வழக்கு தொடர்ந்தார்.

3. மூன்றாவது வழக்கு மேற்படி மானநஷ்ட வழக்கு நிலுவையில் இருந்த பொழுது இந்து பத்திரிக்கையில் தொடர்ந்து சேலம் மாநாட்டு தீர்மானத்தை திரித்து வெளியிட்டுக் கொண்டே இருந்தது. அதனால் இந்து பத்திரிக்கையின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி பெயரில் தொடரப்பட்டது. நீதிபதிகள் தலைமை நீதிபதி கே.வீராசாமி மற்றும் வி.வி.ராகவன் முன்பு விசாரணைக்கு வந்து, சம்மனை பெற்றுக்கொண்டு இந்து பத்திரிக்கையின் அன்றைய ஆசிரியர் நேரில் ஆஜராகி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த பொழுது தீர்மானத்தை மாற்றி பிரசுரித்த தற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டதால் வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

இந்த மூன்று வழக்கிலும் எஸ்.துரைசாமி ஆகிய நான்தான் ஆஜர் ஆனேன். மற்றப்படி நீர் (துக்ளக் குருமூர்த்தி) எழுதியது போல ஏதோ ஒரு வக்கீல் அல்ல. ஏன் என் பெயரைச் சொன்னால் நாக்கு அழுகிவிடுமோ இதுதான் உமது யோக்கியமா ஜாதி வெறி பிடித்தவனெல்லாம் பத்திரிக்கை ஆசிரியரானால் இப்படித்தான். 05.02.2020 துக்ளக்கில் நீங்கள் எழுதியது முற்றிலும் தவறு. சேலம் குற்றவியல் வழக்கில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் அது சட்டப்படியும் தர்மப்படியும் குற்றமல்ல என்பதுதான் எங்கள் தரப்பு வாதம். பொதுவாகவே ஒரு நாத்திகன் என்பவன் பொய் சொல்லமாட்டான். சுயசிந்தனையும், நாணயமும் பொது ஒழுக்கமும், பொதுச்சேவை எண்ணமும் கொண்டவன்தான் நாத்திகன். இந்த மூன்று வழக்குகளையும் ஒரே வழக்குபோல் பாவித்து துக்ளக்கில் வெளியிட்ட செய்தி உண்மையல்ல; அப்பட்டமான பொய்.

1971 சேலம் ஊர்வலம் பற்றி முதலாவதாக துக்ளக்கில் வந்த செய்தியின் மீது யாரும் வழக்கு தொடரவில்லை. அப்படி ஒரு செய்தி எங்கும் பரவவில்லை காரணம் துக்ளக்கில் வந்த செய்தியே ஆபாசமாகத்தான் இருந்தது. அதோடு தந்தை

பெரியார் இராமனை செருப்பால் அடிப்பது போல் படம் போட்டு இராமனை மேலும் கேவலப்படுத்தியதோடு பொதுமக்கள் பெரியார் ஏன் இராமனை செருப்பால் அடித்தார் என்று தெளிவாக புரிந்து கொள்ள அது சந்தர்ப்பமாக அமைந்தது. அதற்குப் பிறகு நூற்றுக்கணக்கான கூட்டங்கள் நடத்தி ஏன் இராமனை செருப்பால் அடிக்க வேண்டுமென பொதுமக்கள் புரிந்து கொண்டார்கள். 05.02.2020 துக்ளக்கில் வந்த அரைப் பக்க செய்தியில் உள்ள முரண்பாடுகளை சுட்டிக் காட்டுகிறேன்.

1. இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை யின் மீது சென்னை குற்றவியல் நீதிமன்றத்தில் பேராசிரியர் டி.வி.சொக்கப்பாவால் தொடரப் பட்டது மான நஷ்ட வழக்கு அதில் மேற்படி பத்திரிக்கைகள் பேராசிரியர் தி.வை. சொக்கப்பா வுக்கு மாநாட்டு வரவேற்புக் குழு தலைவர் என்ற முறையில் வழக்கு தொடர சட்டபடி அதிகாரம் இல்லை என்ற சட்டப் பிரச்சினையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர், சென்னை உயர்நீதிமன்றம் இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி தொடர்ந்த வழக்கை பேராசிரியர் தி.வை. சொக்கப்பாவிற்கு அதிகாரம் உள்ளது எனக்கூறி அவர்கள் வழக்கை தள்ளுபடி செய்தது. அதை எதிர்த்து மேற்படி பத்திரிக்கைகள் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து. அந்த மேல்முறையீட்டில் பேராசிரியர் சொக்கப்பா நேரடியாக பாதிக்கப்பட்டவர் இல்லை என்ற காரணத்தைக் கூறி சென்னை குற்றவியல் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை ரத்து செய்து தீர்ப்பளித்தது. இதற்கும் துக்ளக் ராமசாமிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

இந்து பத்திரிக்கையின் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சேலத்தில் நடந்த ஜனசங்கத்தினர் பெரியார் மற்றும் 4 பேர் மீதும் தொடர்ந்த வழக்கில் ஜனசங்கத்திற்குக்காக துக்ளக் ராமசாமி சாட்சி சொல்ல அழைத்து வரப் பட்டார். துக்ளக் ராமசாமி மீது யாரும் வழக்கு தொடரவில்லை அவரை ஒரு பொருட்டாகவே யாரும் கருதவில்லை. சாட்சி சொல்ல நீதிமன்றத் திற்கு வந்தவர் சொல்வது வாக்குமூலமல்ல அதற்குப் பெயர் சாட்சியம் (evidence) போலீஸில் கொடுப்பதுதான் வாக்குமூலம் செக்குக்கும் சிவலிங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாதவ ரெல்லாம் பத்திரிக்கை ஆசிரியராக வந்தால் இப்படித்தான் எழுதுவார்கள். சோ ராமசாமி குற்றவாளியாக நீதிமன்றம் வரவில்லை பெரியாருக்கு எதிராக சாட்சி சொல்ல வந்தார். அதுவும் குற்ற வழக்கு தொடர்ந்த ஜனசங்கத்தினர் அழைத்ததால். நான் எந்த குற்றவாளியையும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. பிராது தரப்பு சாட்சியைத்தான் குறுக்கு விசாரணை செய்தேன். குற்றவழக்கில் சாட்சி சொல்ல வந்த யாரிடமும் எந்த வழக்கறிஞரும் கேட்கும் முதல் கேள்வி 'நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்தீர்களா? என்பதுதான். நானும் துக்ளக் ராமசாமியிடம் அதே கேள்வியைத்தான் கேட்டேன், அவர் சொன்ன பதில் நான் நேரடியாக சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. ஜனசங்கத்தார் கொடுத்த தகவலின் பேரில்தான் நான் சாட்சி சொல்ல வந்தேன்.

சாட்சியத்தில் துக்ளக் ராமசாமி கூறியது இதுதான், ராமசாமி நாயக்கர் நடத்திய ஊர்வலத் தில் ராமனுக்கு செருப்புமாலை போட்டதோடு செருப்பால் அடித்தார்கள் மற்றும் இந்து கடவுள்களின் படங்களை நிர்வாணமாக எடுத்து வந்தார்கள். அது என் மனதை புண்படுத்தியது, துக்ளக் பத்திரிக்கையில் ஊர்வலத்தில் எடுத்து வந்த படங்களைத்தான் வெளியிட்டேன்.

அடுத்த கேள்வி மனது புண்பட்டதென கூறுகிறீர்களே எந்த டாக்டரிடம் போய் மருந்து போட்டு புண்ணை ஆற்றினீர்கள்? என்று கேட்டேன். எரிச்சலடைந்த ராமசாமி நீண்ட விளக்கம் கொடுத்தார்

சாட்சி எரிச்சல் அடைய வேண்டுமென்ப தற்காகத்தான் அந்த கேள்வி கேட்கப்பட்டது. அடுத்து மனது புண்படுவது என்றால் என்ன எனக் கேட்டேன். அதற்கும் நீண்ட விளக்கம் கொடுத்தார். அதற்குப் பிறகு நான் கேட்ட கேள்வி ராமன் பிறப்பு பற்றியது. வால்மீகி இராமா யணத்தையும், கம்பராமாயணத்தையும் காட்டி புத்திர காமேஷ்டியாகத்தைப்பற்றி வால்மீகியும் கம்பனும் எழுதி வைத்ததை 'துக்ளக்' சோ-வையே படிக்கச் சொல்லி அதைப் பதிவு செய்தேன்.

வால்மீகி சொல்லும் புத்ரகாமேஷ்டியாகம்

> 'ப்ரதிப்ரஸ்தாதா ராபத்னிகளை அழைத்து வரவேண்டும். அவர்கள் மூன்றுதரம் ஸ்வ்யமாயும், மூன்றுதரம் அபஸவ்யமாயும், மூன்றுதரம் ஸவ்யமாயும் குதிரையை ப்ரதக்ஷிணஞ் செய்ய வேண்டும். பிறகு அத்வர்யு மஹிஷியை அதின் பக்கத்தில் படுக்க வைத்து, வெண்மையான பட்டால் அவர்களை மூடி, 'அம்பே! அம்பால்யம்பிகே' யென்ற மந்திரங்களை

ஜபிக்கவேண்டும். குதிரையில் ஆவாஹனஞ் செய்யப்பட்டிருக்கும் தேவதை அவளுக்கு ஸந்தானத்தைக் கொடுக்கும்.”

சுவாமி சிவாநந்த சரஸ்வதி கூறும் புத்திர காமேஷ்டி யாகம்

முற்காலங்களில் யஜமானனுக்கும், யாகஞ் செய்வோனுக்குப் பலபேர் பத்தினிகள் இருந்தனர். அசுவமேத யாகம் செய்யும்போது, பத்தினிகள் எல்லோரும் கைகளில் பானேஜனம் வைத்துக்கொண்டு குதிரையின் பக்கத்தில் வருகிறார்கள். பிறகு கீழ்க் குறித்திருக்கிற மந்திரத்தைச் சொல்லி, ஒன்பதும் குதிரையைச் சுற்றி வரல் வேண்டும். அதன் விபரம்:- மந்திரத்தின் முதற்பகுதி சொன்னவுடன், ஒருதரம் வலமாகவும், பிறகு ஒன்றும். அடுத்தபடியாக மந்திரத்தின் மூன்றாம் பகுதியைச் சொல்லிக் கொண்டு ஒருதரம் மவுனமாகவும், பின் இரண்டு தரமும் வலம் வரல் வேண்டும். இதற்கு மந்திரம்:-

1. ‘கணானாம் த்வா: கணபதிம் ஹவாமஹே” (வஸோமம)
2. ‘ப்ரியாணாம் த்வா: ப்ரியபதிம் ஹவாமஹே” (வஸோமம)
3. ‘நிதீனாம் த்வா நிதிபதிம் ஹவாமஹே” (வஸோமம)

பொருள்: ஓ குதிரையே! கணங்களின் தலைவனும், விருப்பத்தை நிறைவேற்றுந் தலைவனும், பொருட்களின் தலைவனுமாகிய உன்னை அழைக்கிறோம்.. நீ எனது பர்த்தாவாக இருக்கவேண்டும்.

(மனைவிகளுள் தலைவியை மஹிஷியென்பர்; அவளுக்குத்தான் குதிரை நாயகனாக வர வேண்டுமாம்) பிறகு, பானேஜனத்தால் யஜமானனும், பத்தினிகளும் பிராணசோதனம் (அங்கங்களைத் தொடுதல்) செய்யக்கடவர். பிறகு மஹிஷியானவள் குதிரையை நெருங்கி, அதனுடன் சேர்ந்து படுத்துக் கொண்டு கீழ்க்காணும் மந்திரத்தைச் சொல்ல வேண்டும்.

‘ஆஹாமஜானி கர்ப்பத மாத்வ மஜாஸி கர்ப்பதம்”

பொருள்: ஓ குதிரையே! கர்பத்தை உண்டு பண்ணுகிற வீரியத்தை இழுத்து யோனியில் க்ஷேபிக்கிறேன் (க்ஷேபித்தல்-இடுதல்) அதைப்போல் நீயும் செய்ய வேண்டும். இம்மந்திரம் சொல்லி முடிந்ததும், ஒரு துணியைப் போட்டு குதிரையையும், மஹிஷியையும் மூடிவிட்டு அத்வாயு சொல்லவெண்டிய மந்திரம்.

‘ஸ்வர்க்கே லோகே ப்ரோணுவாதாம்’

பொருள்: ஓ குதிரையே! மஹிஷியே! நீவிரிருவரும் இந்த யாக பூமியில் இவ்வுடையினால் உடல் முழுவதும் மறைத்துக் கொள்ளுங்கள்.

இதன் பின்னர் மஹிஷி சொல்ல வேண்டிய மந்திரம்:

‘வருஷா வாஜி ரேதோதாரேதோ ததாது’

பொருள்: சுக்கிலத்தைத் தன்னுள் வைத்துக் கொண்டிருக்கிற குதிரை, அதை என்னிடத்தில் வைக்கட்டும். இதன் பிறகு யஜமானன் குதிரையும், பத்தினியும் படுத்திருக்கும் இடத்திற்குச் சென்று குதிரையைத் தொட்டுக் கொண்டு கீழ்க்குறித்த மந்திரத்தைச் சொல்ல வேண்டும்.

‘உத்ஸக்த்யா அவகுதம் தேஹி ஸமஞ்ஜிம் சாரயா
வ்ருஷன் ய: ஸ்த்திரீணாம் ஜீவபோஜன’

பொருள்: புணர்ச்சி வேளையில் என் மனைவியாகிய இவளிடத்தில் (மஹிஷி) நான் செய்யும் காரியங்களை எனக்குப் பதிலாக நீ செய்யவேண்டும்.

அத்வர்யு முதலிய அய்வரும் (அத்வர்யு பிரஹ்மா, ஹோதா, உத்காதா, ஃதா) குமாரிகளும், ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிற வாக்கியங்கள் வருமாறு:

முதலில் அத்வர்யு குமாரியை விளித்துத் தனது விரலால் அவளின் அல்குலைச் சுட்டிக்காட்டிப் பரிஹாசமாகச் சொல்லுகிறான்:

‘யகாஸகௌ சகுந்தகா ஹலகிதி வஞ்சதி:
ஆஹந்தி கபே பஸோ நிகல்யா பீதி தாரகா”

பொருள்: பெண்கள் விரைந்து நடக்கும் போதும், புணர்ச்சிக் காலத்திலும் யோனிக்குள் ஹலஹலாவென்னும் ஒலியுண்டாகிறது. பிறகு வீரியம் வெளிப்படுகிறது.

இதற்குக் குமாரியானவள் அத்வர்வின் லிங்கத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டு விடையளிக்கிறாள்.

அந்த ராமாயணங்களின்படி தசரத மனைவிகள் விடியும் வரை குதிரைகளுடன் படுக்க வைத்தும் அங்க தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ரிஷ்ய சிங்கருடன் புணரச்செய்தும் 12 மாதங்கள் கழித்து (10 மாத மல்ல) கோசலைக்கு ராம சம்சுமித்திரைக்கு லட்சுமண், சத்துருக்கும் கைகேகிக்கும் பரதனும் பிறந்தார் என்று சோ ராமசாமின் வாயாலேயே சொல்வ வைத்து கணவன் அல்லாத மாற்றானுக்கும் குதிரைக்கும் பிறந்தவன் எப்படி கடவுள் ஆவான் என்றும் அகலிகையை மீது இந்திரன் இச்சை கொண்டு திருட்டுத்தனமாக உடலுறவுக் கொண்டதைப் பற்றியும் கௌதம முனிவர் கையும் களவுமாக இந்திரனை பிடித்துக்கொண்டது பற்றியும் கோபம் கொண்ட கௌதம முனிவர் இந்திரனுக்கு உடம்பெல்லாம் பெண்குறியாக போகும்படி சாபமிட்டதையும் உடம்பெல்லாம் பெண்குறி அடைந்த தேவலோக கடவுள் இந்திரன் ஒடி ஒலிந்தது பற்றியும் பிறகு தேவகனங்களெல்லாம் மூவேழு உலகத்திலும் தேடியப்பிறகு இந்திரன் ஒளிந்திருந்த இடத்தை கண்டுபிடித்து இழுத்து வந்து கௌதம முனிவர்முன் நிறுத்தியதைப் பற்றியும் பிறகு கௌதமமுனிவர் சாபவிமோசம் கொடுத்ததைப்பற்றியும் அகலிகை மீட்ப படலத் தில் வால்மீகியும் கம்பரும் விரிவாக கூறியதைக் காட்டியும்

> "இந்த யுக்தியை அவருக்கு உபதே சித்து அஹல்யையைப் பார்யையாயடை யும்படி செய்தது யாரே?" என்று கேட்க, நாரதர், 'என்னைத்தவிர வேறு யாருக்கு இவ்வளவு ச்ரத்தை' யென்றார். இந்திரன் வெட்கத்தாலும் வருத்தத்தாலும் புத்தி மயங்கி, 'நாரதரே! நான் முப்பத்து முக்கோடி தேவதைகளுக்கு அரசனென்பது நிஜமானால் அந்த அஹல்யையை அனுபவிக்காமல் அவளுடைய பதிவ்ரதா தர்மத்தைக் கெடுக்காமல் விடுகிறதில்லை. அதினால் எது வந்தாலும் வரட்டுமெ' என்று ப்ரதிக்ஞைசெய்தான்.
>
> 2. 'கௌதமர் அஹல்யையை, நீ ஜனஸ்தானத்தில் நதியாகக் கடவதெ'ன்று சபித்தார். 'ராமன் அங்கே ஸஞ்சரிக்கையில் அவருடைய பாதம் பட்டு அவளுக்குச் சாபவிமோசனமாயிற்றெ' என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இது வேறுகல்பத்தில் நடந்திருக்கலாம். (ஆ.ரா.III. 18-22. ப்ரஹம புராணம் 87).
>
> கண்டான் - இந்திரன் காக்கை ரூப மெடுத்துப் பாதிராத்ரி குண்டலங்களைக் கேட்க, அவன் தன் பார்யையான மத யந்திரயென்பவளுக்கு ஓர் அடையாளஞ் சொல்லியனுப்பினான். அதைக் கேட்டு அந்தப் பதிவ்ரதை அவைகளை உதங்கரி டத்தில் கொடுத்து, 'இதைப் பூமியில் வைத்தால் நாகர்கள் அபஹரிப்பார்கள். போஜனஞ்செய்து அசுத்தமான ஒருவன் இவைகளை அணிந்தால் யக்ஷிர்கள் அபஹரிப்பார்கள். இவைகளை ஜாக்ரதை யாய் வைக்காமல் தூங்கினால் தேவர்கள் அபஹரிப்பார்கள். இவை இரவும் பகலும் கணக்கில்லாததனத்தைக் கொடுக்கும். ராத்ரியில் ப்ரகாசத்தால் சந்த்ரனையும் நக்ஷத்ரங்களையும் மறைக்கும். இதை அணிந்து கொள்ளுகிறவன் பசிதாஹத்தி லிருந்தும் அக்னி விஷம் அபாயம் முதலியவைகளிடமிருந்தும் விடுபடுவர்" னென்று எச்சரித்தாள். உதங்கர் அவைகளைக் கொண்டுவருகையில் அவை அஜாக்ரதையால் நாகர்களால் அபஹரிக்கப் பட்டன. தன் தபோமஹிமையால் அக்னி இந்திரன் முதலிய தேவர்களின் ஸஹாயத்தைப் பெற்று, அவைகளை நாகலோகத்திலிருந்து கொண்டுவந்து, தன் குருபத்னியான அஹல்யைக்குக் கொடுத்தார் - பாரதம், அச்வமேதபர்வம். 56.

மற்றும் வால்மீகியில் சிவபெருமான் பார்வதியும் வருடக்கணக்கில் உடலுறவு கொண் டிருந்து தேவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க புணர்வதை, அதன்பிறகு வால்மீகி ராமாணத்தில் உள்ள குறிப்பைக் காட்டி ராமனுக்கு பல ஸ்திரிகளுடன் தொடர்பு உண்டு என்றேன்.

அதைப்படிக்க சோ ராமசாமி முகம் சுருங்கியது ஆமாம் அப்படித்தான் எழுதப்பட் டுள்ளது என்றார், அதற்கடுத்து ராமன் லட்சுமண் சீதை ஆகியோர் மாமிசம் சாப்பிடுவார்கள் மது அருந்துவார்கள் என்பது சரிதானா என்றேன் 'பொய் அபாண்டமான பொய்" இது துக்ளக் ராமசாமி தந்த பதில்.

நான் பொய் சொல்லமாட்டேன் இதைப் படியுங்கள் என்று வால்மீகி ராமாயணத்தில் உள்ள கீழ்கண்ட வரிகளை படிக்கச் சொன்னேன்.

'இப்படி அநேக ஸ்தலங்களில் ஸஞ்சரிதத்து ஆச்ரமத்திற்கு வந்தார்கள். கைங்கர்யபாக்யத்தைப் பெற்ற லட்சுமணன் அவர்களை எதிர்கொண்டழைத்து உபசரித்தார். சுத்தமான பாணங்களால் கொல்லப்பட்ட பத்து கறுப்புமான்களை ரக்தம் உலர்வதற்காகத் தனித்தனியாய்ப் போட்டிருந்ததைக் கண்டு ராமன் ஸந்தோஷித்து, 'ஸீதே! விதிப்படி நித்யபலிகளைக் கொடு'' வென்றார். ஆவள் முதலில் பூதங்களுக்குப் பலிவைத்து, ராமலக்மணர்களுக்கு மாம்ஸத்தையும் மதுவையும் கொடுத்தாள். அவர்கள் போஜனஞ் செய்து திருப்தியடைந்து கை கால்களைக் கழுவி ஆசமனஞ் செய்தபிறகு, ஜானகி ஆஹாரஞ் செய்தாள். 'உலர வைக்கப்பட்டிருந்த மாம்ஸத்தில் உபயோகப்படாத பாகங்களைக் காக்கை களுக்காக வைத்திரு'' வென்று ராமன் ஸீதைக்குச் சொன்னார்.''

பாவம் சோ ராமசாமியின் சப்த நாடியும் ஒடுங்கியது பேச்சுவரவில்லை வால்மீகி இராமாயணத்தில் அப்படித்தான் உள்ளது என்றார். இதை வால்மீகி சொன்னால் உங்கள் மனம் புண்படாது தாங்கள் சொன்னால் புண்படுமா என்றதற்கு ராமசாமியிடமிருந்து எந்த பதிலும் இல்லை. அதன்பிறகு தமிழக கோவில்களில் உள்ள ஆபாச சிலைகளின் புகைப்படத்தை காட்டி இது உங்கள் மனதை புண்படுத்தவில்லையா என்றதற்கும் இது எல்லாம் மதநம்பிக்கைதான் என்றார் சுருதி குறைந்து விட்டது. அதன்பிறகுதான் கேட்டேன் தந்தை பெரியார் மீது ஜனசங்கத்தினர் செருப்பை வீசியது உங்களுக்கு உடன்பாடா என்று அப்பொழுது தான் துக்ளக் ராமசாமி சொன்னார் ராமசாமி நாயக்கர் சுதந்திர போராட்ட தலைவர். பிராமண துவேஷி என்பதைத் தவிர அவர் மீது எனக்கு மரியாதை உண்டு. அவர் மீது செருப்பை வீசியது கண்டிக்கதக்கது அதற்காக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்று இது எதுமே தெரியாமல் அரைவேக்காட்டுத்தனமாக எனது பேட்டியில் கூறியதை அபாண்டமான பொய் உளறியிருக்கிறார் இன்றைய துக்ளக் ஆசிரியர் எதையும் வரலாறு தெரிந்து பேசக் கற்றுக் கொள்ளும் துக்ளக் ராமசாமி மீது எந்த வழக்கும் இல்லை ஜனசங்கத்தார் தொடர்ந்த வழக்கில்தான் தந்தை பெரியார் மீது செருப்பு வீசியவர்களுக்காக பெருந்தன்மையாக மன்னிப்பு கேட்டுக் கொண்டார் ராமசாமி குற்றவாளியாக அவர் நீதிமன்றம் வரவில்லை சாட்சியாகத்தான் நீதி மன்றம் வந்தார். அதனால்தான் குறுக்கு விசாரணைக்கு ஆளானர். அவர்மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை தவறு செய்தவர்களுக் காகத் தான் அவர்கள் சார்பில் 'துக்ளக்' சோ மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

கொஞ்சமாவது அறிவு நாணயம் இருந்தால் இந்த மறுப்பை உமது பத்திரிக்கையில் வெளி யிடுங்கள் என்று வழக்கறிஞர் எஸ். துரைசாமி மறுப்பு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ●

## 'பீரியட் பீஸ்டு' மாணவிகள் பதிலடி

*மாதவிடாய்க் காலத்தில், விடுதி சமைய லறைக்குள் செல்லக் கூடாது என்று குஜராத் மாநிலம் 'பூஜ்' பகுதியில் உள்ள ஸ்ரீசகஜ்ஜானந்தா என்ற தனியார் கல்லூரி விதி வைத்திருந்தது. இந்த விதியை மீறி விட்டதாகக் கூறி, 68 மாணவியருக்கு கட்டாய மாதவிடாய் சோதனையும் நடத்தியது.*

*இதற்கு கண்டனங்கள் எழுந்த நிலையில், குஜராத்தைச் சேர்ந்த கிருஷ்ணாஸ்வரூப் தாஸ்ஜி என்ற சாமியார், ''மாதவிடாய் நாட்களில் தங்கள் கணவர்களுக்கு உணவு சமைக்கும் மாதவிடாய்ப் பெண்கள், அடுத்த ஜென்மத்தில் நாய்களாகப் பிறப்பார்கள்; சாப்பிட்ட கணவன்மார்கள் காளை மாடாவார்கள்'' என்று பயமுறுத்தினார். இந்நிலையில், மாதவிடாய் பற்றிய பொதுவான தவறான கருத்துக்களைத் களைவதற்காக 'சச்சி சஹேலி' என்ற தன்னார்வ தொண்டு நிறுவன நிர்வாகியான டாக்டர் சுர்பி சிங் என்பவர், 'பீரியட் பீஸ்ட்' என்ற நிகழ்ச்சியை தில்லியில் ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்ச்சியில், 28 மாதவிடாய்ப் பெண்கள் அடங்கிய குழு 500-க்கும் மேற்பட்டவர்களுக்கு உணவு சமைத்து பரிமாறியது. இந்த 'பீரியட் பீஸ்ட்' நிகழ்வில் தில்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா மற்றும் சமூக ஆர்வலர் கம்லா பாசின் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.*

# பால் – மனிதர்களின் உணவானது எப்படி?

*பவுத்தம் செல்வாக்கு பெற்ற காலத்தில் அதை சூழ்ச்சியால் வீழ்த்த நினைத்த பார்ப்பனர்கள், மாட்டுக்கறி உண்பதை கைவிட்டதோடு அதன் நினைவுகளின் தொடர்புகளைத் துண்டிக்க முடியாத நிலையில் பாலை உணவாகவும் 'கோமியத்தை' (சிறுநீர்) புனிதமாகவும் போற்றத் தொடங்கினர் என்றார் அம்பேத்கர். இதை உணவு அறிவியல் வரலாறும் நிரூபிக்கிறது.*

பால் அருந்துவது நம் உடலுக்கு ஏற்றதா, ஒவ்வாததா என்ற விவாதம் பல காலமாக நடந்து கொண்டிருக்கிறது. பிறந்து குறிப்பிட்ட காலம்வரை பாலூட்டிகளின் குட்டிகள் தாயின் மடியில் சுரக்கும் பாலை உணவாகக் கொள்கின்றன. மனிதர்களும் பாலூட்டிகளே; அதேநேரம், மனிதர்கள் மட்டுமே மற்ற விலங்குகளின் பாலை அருந்துகின்றனர். நாயும் பூனையும் மனிதர்கள் கொடுப்பதாலேயே பாலை அருந்துகின்றன.

மற்ற விலங்குகளின் பாலை மனிதர்கள் அருந்துவது இயற்கைக்கு முரணானது என்ற வாதம் தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது; பால் ஒரு சத்தான உணவு. அதில் புரதம், கொழுப்பு, கால்சியம் போன்ற உடலுக்குத் தேவையான சத்துக்கள் உள்ளன என்று மற்றொரு வாதமும் முன்வைக்கப்படுகிறது.

இதைப் புரிந்துகொள்ள, நம் உணவில் பால் இடம்பிடித்த வரலாற்றை அறிவியல்பூர்வமாக அணுகுவதில் இருந்து தொடங்கலாம். மூன்று லட்சம் ஆண்டுகளுக்குமுன் மனித இனம் பாலை அருந்தவில்லை. காரணம், குழந்தைப் பருவத்தில் சுரக்கும் லாக்டேஸ் (டுயஉவயளந) எனும் நொதி, பாலில் உள்ள லாக்டோஸ் எனும் சர்க்கரையை செரிக்கும். மனிதர்களுக்கு சுமார் நான்கு வயதுக்குள் லாக்டேஸ் சுரப்பது இயல்பாகவே நின்றுவிடும். அதன் பின் தாய்ப்பால்கூடச் செரிமானம் ஆகாது; விலங்குகளுக்கும் அப்படியே.

12,000 ஆண்டுகளுக்கு முன், மத்திய ஆசியாவில் வாழ்ந்த மனிதர்கள் கால்நடை களைப் பழக்கி வீட்டு விலங்கு களாக மாற்றினார்கள். முதலில் இறைச்சிக்காகவே கால் நடைகள் வளர்க்கப்பட்டன. ஒரு கட்டத்தில் அவற்றின் பாலைப் புளிக்க வைத்துத் தயிராகவும், பாலாடைக்கட்டியாகவும்

பயன்படுத்தினார்கள். பாலைப் புளிக்க வைப்பதன் மூலம் அதில் உள்ள லாக்டோஸ் என்கிற செரிமானம் ஆகாத சர்க்கரை வேதியியல் மாற்றத்துக் குள்ளானது.

லாக்டோஸை மிகக் குறைந்த அளவில் கொண்ட தயிரும், பாலாடைக்கட்டியும், வெண்ணெய்யும் உடலில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால், ஓர் அளவுக்கு மேல் பாலை நேரடியாக அருந்தினால் வயிற்று வலி, வாந்தி ஏற்பட்டது. ஏனென்றால் பாலில் உள்ள லாக்டோஸ் பெருங்குடலில் இருக்கும் பாக்டீரியாக்களுடன் வினைபுரிந்து வயிற்றில் வாயுவை உருவாக்கி வயிற்று வலியை ஏற்படுத்துகிறது.

பாலை முதன்முதலில் நேரடியாக அருந்தியது யார் என்பது தொல்லியல் ஆய்வுகள் மூலம் சமீபத்தில் கண்டறியப் பட்டுள்ளது. சுமார் 6,000 வருடங் களுக்குமுன் மத்திய ஆசியாவில், லாக்டேஸ் நொதியைச் சுரக்கும் '13910T' மரபணுவில் வகைமாற்றம் நிகழ்ந்தது. இந்த மரபணுவைக் கொண்டவர்கள் குழந்தைப் பருவத்தைக் கடந்த பின்பும் பாலைச் செரிக்கும், லாக்டோஸ் ஏற்புத்தன்மை பெற்றவர்களாக இருந்தார்கள்; லாக்டேஸ் நொதி சுரப்பது இவர்களுக்கு நீடித்தது.

மத்திய ஆசியாவில் கால்நடை வளர்ப்பு, மேய்ச்சல் நில வாழ்க்கை முறையில் ஈடுபட்ட மக்களிடம் ஏற்பட்ட மரபணுப் பிறழ்வுதான், பாலைச் செரிக்கும் தன்மையான லாக்டோஸ் ஏற்புத்தன்மையை பரவலாக்கியிருக்க முடியும். மங்கோலியாவின் மேய்ச்சல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் இத்தகைய மரபணுப் பிறழ்வு எதுவும் நிகழவில்லை. எனவே, அவர்கள் இன்றளவும் பாலை நேரடியாக உட்கொள்ளாமல், தயிராக மாற்றிப் பயன்படுத்துகிறார்கள்.

**நம் நாட்டில் பாலைச் செரிக்கும் மரபணு '13910T'-க்கு உரியவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து கால்நடைகளுடன் இந்தியாவுக்குள் நுழைந்தவர் களின் வழித்தோன்றல் களும் பின்னர் அவர்களுடன் கலந்து உருவானவர்களும் என்று அனுமானிக்கலாம்.**

'13910T' மரபணுவைப் பெற்றவர்கள் முதலில் ஐரோப்பாவின் தெற்கிலும், பிறகு வடக்கிலும் குடியேறி னார்கள். வெண்கல யுகத்தில் தான் (Bronze Age) ஐரோப்பா வின் சில பகுதிகளில் பால் அருந்தும் பழக்கம் உடைய சமூகத்தினர் பரவலாகத் தோன்றினார்கள். தொடக்கக் காலத்தில் ஐரோப்பியர்களில், வெறும் பத்து சதவீதத்தினருக்கு மட்டுமே லாக்டோஸ் ஏற்புத் தன்மை இருந்தது. இன்றைக்கு இங்கிலாந்து, ஸ்காண்டிநேவிய நாடுகளில் தொண்ணூறு சதவீத மக்கள் லாக்டோஸ் (சர்க்கரை) ஏற்புத்தன்மை அல்லது லாக்டேஸ் (நொதி) நீடிப்புத் தன்மை பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

சிலியின் ஒரு பகுதியில் வாழ்ந்துவரும் பூர்வகுடிகள் மத்தியில் லாக்டேஸ் நீடிப்புத் தன்மையைப் பெற்றுள்ளதால், பால் அருந்துவதால் இவர் களுக்கு ஒவ்வாமை ஏற்படுவ தில்லை. இதற்குக் காரணம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் குடியேறிய ஐரோப்பியர் களுடன் இவர்கள் கலந்ததுதான் என்று தெரிய வந்துள்ளது.

ஐரோப்பியர்கள் கால்சியம் சத்தைப் பெறுவதற்குப் பால் முக்கிய மூலாதாரமாக விளங்குகிறது. ஐரோப்பாவில் ஆண்டின் பெரும் பகுதியில் சூரிய ஒளி குறைவாகவே இருப்பதால், ஐரோப்பியர்கள் கால்சியம் சத்தைப் பெற சூரிய ஒளி போதுமான அளவில் கிடைப்பதில்லை. ஆனால், வெப்பம் மிகுந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் அபரிமிதமான சூரிய ஒளி வைட்டமின் டி-யைத் தயாரிக்கவும், அதன் மூலம் கால்சியத்தைப் பெறவும் மக்களுக்கு உதவுகிறது.

எனவே, ஐரோப்பாவில் ஒரு சில மக்கள் குழுக்களில் நிகழ்ந்த '13910T' எனும் மரபணுப் பிறழ்வு, பால் செரிக்கும் வகையில் லாக்டேஸ் நொதி குழந்தைப் பருவம் கடந்தும் நீடிக்கும் தன்மையை உருவாக்கியது. இது உடலுக்குத் தேவையான கால்சியத்தைப் பால் மூலம் எளிதாகப் பெறும் சூழலை உருவாக்கியது.

இந்தியாவில்...

நம் நாட்டில் பாலைச் செரிக்கும் மரபணு '13910T'-க்கு உரியவர்கள் மத்திய ஆசியாவி லிருந்து கால்நடைகளுடன் இந்தியாவுக்குள் நுழைந்தவர் களின் வழித்தோன்றல்களும் பின்னர் அவர்களுடன் கலந்து உருவானவர்களும் என்று அனுமானிக்கலாம்.

'எர்லி இந்தியன்ஸ்' நூலில் டோனி ஜோசப் இந்தியாவைப் பற்றி கீழ்க் காணும் கருத்தை முன் வைக்கிறார்: 'இந்தியாவைப் பொறுத்தவரை நாட்டின் வடக்கிலும், மேற்கிலும் வாழ் கிறவர்களில் 40 சதவீதத்துக்கும் மேலாக லாக்டோஸ் ஏற்புத் தன்மையுடன் இருக்கிறார்கள்.

ஆனால், வடகிழக்கில் இது வெறும் ஒரு சதவீதம் மட்டுமே. இந்தியாவின் வடக்கிலும் மேற்கிலும் உள்ளவர்கள் மிக அதிகமாகப் பாலைப் பயன்படுத்துகிறார்கள் என்று தேசிய மாதிரி ஆய்வு கூறுகிறது.

ஆனால், நாட்டின் கிழக்கிலும் தெற்கிலும் ஒப்பீட்டளவில் பாலின் பயன்பாடு குறைவு என்கிறது இந்த ஆய்வு. ஆனால், மீன்-இறைச்சி உட்கொள்ளுதல் வடநாட்டைவிட இப்பகுதிகளில் அதிகம். தமிழ்நாட்டில் பால் ஒவ்வாமை உடைய மக்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கக்கூடும். பாலிலிருந்து தேவையான புரதச்சத்தைப் பெறும் வடஇந்தியர்களும், மேற்கு இந்தியர்களும் மரக்கறி உணவுப் பழக்கத்தை வலியுறுத்தக் காரணம் இதுவாகவும் கூட இருக்கலாம்.'

இந்த வகையில் இந்திய மக்களிடம் ஒரே வகையான உணவுப் பழக்கத்தை எதிர்பார்க்க முடியாது. அனைவருக்கும் ஒரே வகையிலான உணவு என்பது அறிவியலுக்குப் புறம்பானது. பால் மூலம் பெறப்படும் வெண்ணெய், பாலாடைக் கட்டி, தயிர் போன்றவை லாக்டோஸை மிகக் குறைந்த அளவில் கொண்டவை. இவற்றால் அனைவருக்கும் ஒவ்வாமையை ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆனால், நம் நாட்டில் சுமார் 80 சதவீதம் பேர் பாலை நேரடியாக அருந்தினால், செரிக்கும் திறனற்றவர்கள் என்பதே அறிவியல் முன்வைக்கும் உண்மை.

எனவே, பால் நம் உடலுக்கு ஏற்றதா இல்லையா என்பதை அது விளைவிக்கும் ஒவ்வாமையே காட்டிக் கொடுத்துவிடும். ஆனால், தேனீர் அருந்தும்போது மிகக் குறைந்த அளவே பாலைப் பயன்படுத்துவதால் பொதுவாக ஒவ்வாமை ஏற்படுவதில்லை.

அதற்காக, நமது உடலுக்குப் பால் ஏற்றதா, இல்லையா என்று அறிய மரபணுச் சோதனை செய்து நம் உடலில் '13910T' மரபணு இருக்கிறதா இல்லையா என்றெல்லாம் மெனக்கெட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. ஒரு குவளைப் பால் அருந்திப் பார்த்தால் போதும்!

●

## பெரும்பான்மைவாதம் ஆபத்தானது: எச்சரிக்கிறார் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி

ஜனநாயகத்தில் எதிர்ப்பை அடக்க நினைக்கும் எந்த முயற்சியும், மக்களின் பேச்சுரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று உச்சநீதிமன்ற நீதிபதி தீபக் குப்தா கூறியுள்ளார். உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் 'ஜனநாயகமும், எதிர்ப்பும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கம் தில்லியில் நடைபெற்றது. இதில் உச்சநீதிமன்ற நீதிபதி தீபக் குப்தா பங்கேற்று உரையாற்றினார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

நாடுமுழுவதும் சமீப காலமாக நடைபெறும் போராட்டங்களில் பங்கேற்கும் மக்களை 'தேச விரோதிகள்' என்று சொல்கிறார்கள். காரணம் அவர்கள் அரசை எதிர்த்துப் போராடுகிறார்கள் என்பதுதான்.ஜனநாயகத்தில் எதிர்ப்பை அடக்க நினைக்கும் எந்த முயற்சியும் பேச்சுரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை நசுக்குவ தாகும். அரசுகள் எப்போதும் சரியானவை அல்ல. அரசை எதிர்ப்பவர்கள் எல்லாம் தேச விரோதிகள் அல்லர்.குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும்போதுதான் ஜனநாயகம் வெற்றி பெற்றது என்று கருத முடியும். எதிர்ப்பு, மாற்றுக் கருத்து என்பது ஜனநாயகத்தில் முக்கிய மானது. அதை அங்கீகரித்து, ஊக்குவிக்க வேண்டும். ஜனநாயகத்தின் உள்ளார்ந்த பகுதியே கேள்வி கேட்பதுதான். அமைதியான வழியில் போராட எல்லோருக்கும் உரிமை உண்டு.

ஒரு கட்சி தேர்தலில் 51 சதவிகிதம் வாக்குகள் பெற்றுவிட்டால், மீதமுள்ள 49 சதவிகிதம் வாக்குகள் பெற்ற கட்சியினர் அடுத்த 5 ஆண்டுகளுக்கு வாய்மூடி இருந்துவிட வேண்டும் என்பதல்ல. பெரும்பான்மைவாதம் என்பதே ஜனநாயகத்துக்கு எதிரான கூற்றுதான்.எப்போதெல்லாம் சித்தாந்தங்களுக்கு இடையே மோதல் ஏற்படுகிறதோ அப்போது எதிர்ப்பு உருவாகும். அதனடிப்படையில், அமைதியான முறையில் எத்தனை காலம் வேண்டுமானாலும் எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்த உரிமை உண்டு. அந்த நேரங்களில், 'அரசை எதிர்ப்பது தேசவிரோதம்' என்று முத்திரை குத்துவது ஜனநாயக இயக்கத்தை வேண்டுமென்றே முடக்கமுயல்வதாகும். ஒருவர் மீது தேசவிரோதவழக்கு சுமத்தப்பட்டால், அவருக்குஆதரவாக வாதிடமாட்டோம் என வழக்கறிஞர்கள் சங்கம் தீர்மானம் போட்டதை நான்கண்டிக்கிறேன். இது சட்ட நெறிமுறைகளுக்கு விரோதமானதுசில நேரங்களில் சில தீர்ப்புகள் மீது எனக்கு உடன்பாடில்லை. அது என்னுடைய தனிப்பட்ட கருத்து. ஆனால், நான் தீர்ப்புவழங்கும் அமர்வில் இருந்து விட்டால், நீதியின் அடிப்படையில்தான் செயல்படுவேன். நீதித்துறை எப்போதும் அச்சமற்று, சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். எதிர்க்கவும், மாற்றுக்கருத்து கூறவும் உரிமைஇருக்கிறது, விமர்சிக்கக்கூட உரிமை இருக்கிறது. நீதித்துறையும் கூட விமர்சன த்துக்கு அப்பாற்பட்டது அல்ல. இவ்வாறு நீதிபதி தீபக் குப்தா பேசியுள்ளார்.

# சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தேவை

● **மருத்துவர் செந்தில்**

*பாரதிய ஜனதா கட்சியின் இரண்டாவது ஐந்து ஆண்டுகள் ஆட்சியின் இரண்டாவது பட்ஜெட் வெளியிடப் பட்டிருக்கிறது. 1992ஆம் ஆண்டு தொடங்கிய தனியார் மயமாக்கலை, அடுத்த கட்டத்துக்குக் கொண்டுச் செல்வதற்கு அடையாளமாக, இந்தியாவின் மிகப் பெரிய பொது த்துறை நிறுவனமான இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் தனியார் மயமாக்கப்படப் போவதாக அரசு அறிவித்திருக்கிறது. இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் முழுமையாக விற்கப்படப் போகிறது. ஒரு துறைமுகம் தனியார் மயமாக்கப்படும் என்ற அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. மாவட்ட மருத்துவமனைகளை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்துவதற்கான திட்டங்களை அரசு அறிவித்திருக்கிறது.*

*தனியார் மயமாக்கலின் பொருளாதார பின்விளைவுகள் ஒருபுறமிருக்க, தனியார் மயமாக்கலின் மிகப்பெரிய ஆபத்து பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டினால் கிடைத்துவரும் சிறிய பலன்களையும் இல்லாமல் செய்து விடும் என்பதுதான்.*

விடுதலை பெற்ற இந்தியாவில் 69 ஆண்டுகளாக, நடுவன் அரசுப் பணிகளிலும், கல்வியிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மக்களுக்கு, சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு நடைமுறையில் இருக்கிறது. 69 ஆண்டுகள் கழித்தும் இந்த இட ஒதுக்கீடு முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப் பணிகளுக்கு ஏறக்குறைய முழுமையாக அமுல் படுத்தப் பட்டாலும், முதலாம் மற்றும் இரண்டாம் நிலைப் பணிகள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிரப்பப்படுவதில்லை. 'ஒப்பந்த முறைப் பணி யாளர்கள்' என்ற குறுக்கு வழியைப் பயன்படுத்தி இட ஒதுக்கீட்டை புறக்கணிப்பது வழக்கமாக இருக்கிறது. 2001 ஆம் ஆண்டு தேசிய புள்ளி விவர அறிக்கையின்படி, யுஜிசி (ருேடைிடே முசயவே ஊடிஅஅளைளடைிடே) நிதி உதவியோடு இயங்கும் 256 பல்கலைக்கழகங்களின் கீழ் உள்ள 11000 கல்லூரிகளில் பணிபுரியும் 3.42 லட்சம் ஆசிரியர் பணிகளில், தாழ்த்தப்பட்ட மக்களும், பழங்குடி யினரும் 2ரூ மட்டுமே இருந்தார்கள். இட ஒதுக்கீட்டின் மூலம் நிரப்பப்பட வேண்டிய 75,000 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்தன.

நடுவன் அரசுப் பள்ளிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பின்தங்கிய மக்களுக்கான இட ஒதுக்கீட்டின் நிலை இன்னமும் பரிதாபம். பின்தங்கிய மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கிட பரிந்துரை செய்த மண்டல் கமிஷன் 1977ஆம் ஆண்டு மொரார்ஜி தேசாய் அவர்கள் தலைமை அமைச்சராக இருந்த காலத்தில் அமைக்கப் பட்டது. ஐந்து ஆண்டுகள் கழித்து, இந்திராகாந்தி அம்மையார் தலைமை அமைச்சராக இருந்த காலத்தில் நாடாளுமன்றத்தில் மண்டல் கமிஷன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிறகு ஏழு ஆண்டுகள் கழித்து வி.பி. சிங் அவர்களால் இது அமல்படுத்தப்பட்டது. இதற்கான அரசாணை, வி.பி. சிங் ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு அமைந்த ராஜீவ் காந்தி அரசால் 1992ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஆயினும் இட ஒதுக்கீடு வேலை வாய்ப்பிற்கு மட்டுமே தரப்பட்டது. கல்வியில் இட ஒதுக்கீட்டிற்கான அரசாணை வருவதற்கு இன்னமும் 12 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. அந்த ஆணை வந்து 14 ஆண்டுகள் கழித்து, இந்த ஆண்டு (2020) நடைபெறவிருக்கும் அகில இந்திய அளவிலான மருத்துவ மேல் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வில், எந்தவிதக் காரணமுமின்றி, பின்தங்கிய மக்களுக்கான இட ஒதுக்கீடு இரத்து செய்யப்பட் டிருக்கிறது. பின்தங்கிய மக்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கான மண்டல் கமிஷன் பரிந்துரை 42 ஆண்டுகள் ஆகி இன்னமும் நிறைவேற்றப்பட வில்லை. இந்திய நிர்வாக அமைப்பில் இருக்கும் முன்னேறிய சாதியினரின் ஆதிக்கம், மக்கள் சபைகளில் நிறைவேற்றப்படும் சட்டங்களைக் கூட நிறைவேற்ற விடாமல் செய்யும் வலிமை பொருந்தியதாக இருக்கின்றது.

அதே சமயம் உயர்சாதியினரில் உள்ள ஏழைகளுக்கான இட ஒதுக்கீட்டுச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அடுத்தநாளே, குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. அதற்கு மறுநாளே அதற்கான அரசாணை, அனைத்து நடுவண் அரசின் கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டு, இந்த கல்வி ஆண்டிலேயே உயர்சாதியினரில் ஏழைகளுக்கான இட ஒதுக்கீடு அமுல்படுத்தப்பட வேண்டும் என ஆணையிடப் பட்டது. இதற்காக அதிக இடங்களை உருவாக்க வேண்டியிருந்தால் உருவாக்கிக் கொள்ளலாம் என்ற சலுகையையும் அரசு அளித்திருக்கிறது.

இந்திய அரசும், நிர்வாகமும் யாருக்காக இருக்கிறது என்பதற்கும், பின்தங்கிய, தாழ்த்தப் பட்ட மக்களுக்கு இந்த நாட்டில் இருக்கும் அதிகாரம் எவ்வளவு என்பதற்கும் இதைவிட சிறந்த எடுத்துக்காட்டு இருக்க முடியாது.

இந்திய சமூக அமைப்பின் கீழ் அடுக்குகளில் இருக்கிற சமூகங்கள் கல்விக்கும், வேலை வாய்ப்புக்கும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நடத்தும் போராட்டம் முழுமையான வெற்றி யடைய செல்ல வேண்டிய தூரம் அதிகம். இட ஒதுக்கீடுகளின் மூலம் கிடைக்கும் சிறிய வெற்றி களைக் கூட முற்றிலும் இல்லாமல் செய்வதற்கான எளிய தந்திரமே தனியார்மயமாக்கல்.

தொண்ணூறுகளின் முற்பகுதியில் தாராள மயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் தொடங்கியது முதல் தனியார் துறை அபரித வளர்ச்சி கண்டு வருகிறது. தனியார் துறை வேலை வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. தனியார் துறை, இட ஒதுக்கீட்டுக்கு எதிரான மனநிலை கொண்டதாக இருக்கிறது. மேனாள் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் “தனியார் துறையில் இட ஒதுக்கீடு வேண்டும்” என்று பேசிய போது, இந்தியாவின் பெரிய தனியார் நிறுவனமான டாடா நிறுவனத்தின் தலைவரான ரத்தன் டாட்டா “எங்கள் நிறுவனங்கள் உலகச் சந்தையில்

போட்டியிட மிகச் சிறந்த பணியாளர்கள் தேவை. இட ஒதுக்கீடு அளிக்க நிர்பந்திக்கப்பட்டால் திறமை குறைந்தவர்களை பணியமர்த்த வேண்டும். அது உற்பத்தித் திறனை குறைத்துவிடும்'' என பேசினார்.

தொராட் மற்றும் அட்வால் 2007ஆம் ஆண்டு, டெல்லியில் ஒரு ஆய்வை மேற் கொண் டார்கள். ஒரே மாதிரியான கல்வித் தகுதிகள், முன் அனுபவங்கள் மற்றும் பிற திறமைகள் கொண்ட விண்ணப்பங்களை, சாதிகளையும், மதங்களையும் அடையாளம் கண்டுபிடிக்கக் கூடிய பெயர்களில், வேலை கோரி சில பெரிய நிறுவனங்களுக்கு அனுப்பினார்கள். உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணக்கூடிய விண்ணப்ப தாரர்களுக்கு அனுப்பப்பட்ட நேர்காணல் அழைப்புகளைவிட தாழ்த்தப்பட்ட மாணவர் களுக்கு 50% குறைவான அழைப்புகள் விடுக்கப் பட்டன என்பதும், முஸ்லிம் பெயராக இருந்தால் அந்த வாய்ப்பு 25% க்கும் குறைவு என்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டது.

மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்விகளுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டால், திறமை குறைந்த மாணவர்கள் சேர்க்கப்பட்டு, கல்வியின் தரம் கெட்டுவிடும் என்று கூப்பாடு போட்டார்கள். இன்று மருத்துவக்கல்வி வேகமாக தனியார் மயமாகி வருகிறது. இந்தியாவிலுள்ள 269 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 30,688 இடங்கள் இருக்கின்றன. ஆனால் தனியார் வசம் இருக்கும் 260 கல்லூரிகளில் 35,290 இடங்கள் இருக்கின்றன. தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கான மதிப்பெண்கள், அரசு மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் சேரும் மாணவர்களின் மதிப்பெண்களை விட மிகமிகக் குறைவு. தகுதி, தகுதி என்று கூச்சல் போடுபவர்கள் இது பற்றிப் பேசுவதே கிடையாது.

இட ஒதுக்கீடு நாட்டு முன்னேற்றத்தின் எதிரி எனப் பேசியவர்கள், உயர் வகுப்பினரில் ஏழைகளுக்கு தரப்படும் இட ஒதுக்கீட்டை 'புரட்சிகரமான செயல்' என்று வர்ணிக்கிறார்கள். மதிப்பெண் குறைவாக வாங்கிய தாழ்த்தப்பட்ட அல்லது பின்தங்கிய மாணவன், தொழிற்கல்வியில் சேர்வதால் கல்வியின் தரம் குறைந்துவிடும் என்று கூறுபவர்கள், உயர்சாதியைச் சேர்ந்த ஏழை மாணவன் மதிப்பெண் குறைவாக வாங்கி, தொழிற்கல்வியில் சேர்வதை வரவேற்பதற்குக் காரணம் என்னவாக இருக்கக்கூடும்? மதிப்பெண் குறைவாக வாங்கினாலும் உயர்சாதி மாணவர்கள் அறிவாளிகள் என்றும், என்ன மதிப்பெண் வாங்கினாலும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பிறவி முட்டாள்கள் என்றும் நினைக்கும் ஆதிக்க மனப்பான்மையன்றி வேறென்ன?

மண்டல் கமிஷன் அறிக்கை அமுலாக்கப்பட்ட போது, பின்தங்கிய மக்களுக்கு 27% இட ஒதுக்கீடு என்ற எண்ணிக்கை எந்த அடிப்படையில் முடிவு செய்யப்பட்டது என்று நீதிமன்றங்கள் கேள்வியெழுப்பின. இட ஒதுக்கீடுச் சட்டங்களும், சமூக நீதிக்கான மற்ற முன்னெடுப்புத் திட்டங்களும் 1931ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படை யில் திட்டமிடப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டிய நீதிமன்றங்கள், சாதி அடிப்படையிலான இப்போதைய சமூக, பொருளாதார, கல்வி புள்ளி விவரங்கள் இல்லை என்பதைத் தெரிவித்தன. 1931ஆம் ஆண்டு சாதிவாரி கணக்கெடுப்பும் முழுமையான கணக்கெடுப்பு அல்ல. இந்திய கணக்கியல் துறையின் அப்போதைய தலைவராக இருந்த ஜெ.ஹெச். ஹட்டன் ஒரு மானுடவி யலாளர். அவர் பழங்குடியினரை 'தொல்குடியினர்' எனவும், தாழ்த்தப்பட்ட மக்களை சாதி அமைப்புக்கு வெளியில் உள்ள ஒடுக்கப் பட்டவர்கள் எனவும் பிரித்தார். அவர் கணக்கெடுப்பின்படி 277 தாழ்த்தப்பட்ட சாதிகள் கண்டறியப்பட்டு, அவை மக்கள்தொகையில் 10.1% இருப்பதாக சொல்லப்பட்டது. அவருடைய கணக்கெடுப்பில் பின்தங்கிய மக்கள் பற்றிய விவரங்கள் முழுமையாக இல்லை. இந்த 80 ஆண்டுகளில் பல சமூக மாற்றங்கள் நடந்திருக் கின்றன. எனவே நிகழ்காலத்தில் சாதி அமைப்பு அடைந்திருக்க மாற்றங்களையும், இட ஒதுக்கீட்டினால் என்ன பலன் கிடைத்திருக்கிறது என்பதையும், ஏற்றத்தாழ்வுகளை கலைவதற்கு எப்படிப்பட்ட புதிய திட்டங்கள் தேவை என்பதைப் பற்றியும் அறிவதற்கு, முழுமையான சாதி, பொருளாதார, கல்வி புள்ளி விவரங்கள் தேவை.

இதற்காகத்தான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் முதல் ஐந்தாண்டுக் கால ஆட்சியின்போது, 2011ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பில் சாதி விவரங்கள் கேட்டறியப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பாட்டாளி மக்கள் கட்சி முன்வைத்தது. மருத்துவர் அன்புமணி ராமதாஸ் தலைமையில் பாட்டாளி மக்கள் கட்சியின் நாடாளுமன்ற

இட ஒதுக்கீடு நாட்டு முன்னேற்றத்தின் எதிரி எனப் பேசியவர்கள், உயர் வகுப்பினரில் ஏழைகளுக்கு தரப்படும் இட ஒதுக்கீட்டை 'புரட்சிகரமான செயல்' என்று வர்ணிக்கிறார்கள்.

உறுப்பினர்கள், அப்போதைய உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் அவர்களைச் சந்தித்து, இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். இந்தப் பிரச்சினை நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட போது லாலு பிரசாத் யாதவ், சரத் யாதவ், முலாயம்சிங் யாதவ் போன்ற தலைவர்களும் ஆதரவளித்தார்கள். மக்களவைத் தலைவராக இருந்த பிரணாப் முகர்ஜி கோரிக்கையை ஏற்பதாக அறிவித்தார். எனினும், 2011ஆம் ஆண்டு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தனியாகவும், சாதி புள்ளி விவரங்கள் கணக்கெடுப்பு தனியாகவும் நடைபெறும் என அமைச்சரவை முடிவு செய்தது. இந்தக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட பின்பும் இன்றுவரை விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இனி தனியார்மயம் தான் என்ற நிலை சமூகநீதிக்கான அச்சுறுத்தல். சமூக நீதியைக் காக்க தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வேண்டும். சமூக நீதிப் போராட்டத்தை, பங்களித்தல் நீதிப் போராட்டமாக, கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீடு என்பதைத் தாண்டி, அரசு தரும் வங்கிக் கடன்கள், பொதுத்துறை நிறுவனங்களுக்கு துணைப் பொருட்கள் தயாரிக்கும் வாய்ப்புகள், தொழில் முனையும் வாய்ப்புகள் அனைத்திலும் சாதி அடிப்படையிலான பங்கீடு வேண்டும் என்று முன்னெடுத்துச் செல்ல வேண்டியது தனியார் மய யுகத்தில் அவசியமாகிறது.

இந்தப் போராட்டங்களுக்கு சாதி அடிப்படையிலான புள்ளி விவரங்கள் தேவை. "தலைகளை எண்ணிக்கொள். இடங்களை பிரித்துக் கொடு" என்பது தந்தை பெரியாரின் கூற்று. சமூக நீதித் திட்டங்களை திட்டமிடவும், பொருளாதார வளர்ச்சியின் சரியாக பங்கிட்டுக் கொடுக்கவும் சாதி புள்ளிவிவர கணக்கு மிக அவசியம். எனவே 2021ஆம் ஆண்டு நடைபெற விருக்கும் அகில இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது சாதி விவரங்கள் பதியப்பட வேண்டும்.

கட்டுரையாளர்: தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி மேனாள் உறுப்பினர்

## பெரியார் வீட்டில் சுத்தானந்த பாரதி செய்த பூஜை

பெரியாரைக் காண ஈரோடு சென்றேன். என்னை அன்பாக வரவேற்று தமது மனைவியாருக்கு அறிமுகம் செய்தார்.

எனது திடீர் வருகை அவருக்கு ஆச்சரியத்தைத் தந்தது. 'சேலம் வந்தேன்; உங்களையும் காண விரும்பினேன்' என்றேன்.

சிறிது நேரம் உரையாடினோம். குளியல் அறையைக் காட்டினார். பயண அலுப்புத் தீரக் குளித்தேன். குற்றால அருவிபோல் ஜலம் கொட்டியது.

பெரியார் என்னை அறிந்தவர். என்னுடைய ஆஸ்திகக் கொள்கைகள் அவருக்குப் பிடிக்காதவை. ஆயினும், அவர் இதற்காக வேற்றுமை காட்டாமல் வீட்டிற்கு வந்த அதிதியை எப்படி வரவேற்று உபசரிக்க வேண்டுமோ அப்படி வரவேற்று உபசரித்தது எனக்கு மிகுந்த வியப்பைத் தந்தது.

அவருடைய துணைவியார் கூடத்தில் மெழுகிக் கோலமிட்ட இடத்தில், பூசை செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

அனுஷ்டானங்கள் முடித்து சூரிய நமஸ்காரம் செய்து, பூசை அறைக்குத் திரும்பினேன். வெள்ளித் தாம்பாளத்தில் பூசைக்குரிய புஷ்பங்கள், பிற பொருள்கள் கொண்டு வைத்தார் பெரியாரின் துணைவியார்.

வேத மந்திரங்கள் ஜபித்து, தீபம் காட்டி முறைப்படி பூசை முடித்தேன். இதையெல்லாம் அவர் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

தம் வீட்டில் மாறுபட்ட கொள்கையுடன் ஒருவர் பூசை செய்கிறாரே என்று அவர் கோபமோ, ஆட்சேபணையோ கொள்ளாமல் பொறுமையாக இருந்தது அவருடைய பெருந் தன்மையை நன்கு எடுத்துக் காட்டியது.

பூசை முடிந்த பின் 'நீங்கள் சாப்பிடுங்கள்' என்று அன்புடன் சொல்லி விருந்துண்ணச் செய்தார்.

விருந்தோம்பலின் இலக்கணமாகப் பெரியார் திகழ்ந்தார்.

மாலையில் ஒற்றை மாட்டு வண்டியில் என்னை வழியனுப்ப பெரியார் வந்தார் ஸ்டேஷனுக்கு.

"நாயக்கரே, தங்களுடைய மனம் தங்க மனம்" என்று நன்றி தெரிவித்தேன். அவர் "மிகவும் மகிழ்ச்சி" என்று கரங் கூப்பி விடையளித்ததை என்னால் மறக்கவே முடியவில்லை.

இவர் பெரியார் என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை!

சுத்தானந்த பாரதி எழுதிய
'சாதனையும் சோதனையும்' நூலில்.. பா.ந. கணபதி
('தினமணி கதிர்' 6.5.1990)

# "மணவிலக்கு"க் கேட்பது கலாச்சார சீரழிவா?
# ~ மோகன் பகவத்துக்கு மறுப்பு



*ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், "படித்த செல்வாக்குள்ள குடும்பங்களில் விவாகரத்து அதிகரித்து வருகிறது. அவர்களின் படிப்பும் செல்வாக்கும் தான் இதற்குக் காரணம். இதுவே ஆணவமாகி விவகாரத்து வரை போய் விடுகிறது" என்று அண்மையில் பேசியுள்ளார். கல்வியும் ஆணவமும் 'கணவன்-மனைவி' சேர்ந்து வாழும் 'கலாச்சாரத்தை' சீர்குலைக்கிறது என்ற நோக்கத்தில் இப்படிப் பேசியதற்கு மறுப்பு தெரிவித்து 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளேட்டில் ஒருவர் மறுப்பு எழுதியுள்ளார். எழுதியவர் வாரந்தோறும் கட்டுரைகள் எழுதும் சுவாமிநாதன் எஸ். ஆங்கிலேசாரியா அய்யர் என்ற பத்திரிகையாளர். இவரும் ஒரு பார்ப்பனர். மோகன் பகவத்துக்கு எழுதியுள்ள மறுப்புக் கட்டுரையின் சுருக்கமான கருத்து:*

மோகன் பகவத் மீண்டும் பழைய காலத்துக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார். கடந்தகால இந்தியாவில் கல்வியும் செல்வாக்கும் உள்ளவர்களாக ஆண்கள் மட்டுமே இருந்தனர். அந்த இரண்டு 'பெருமை'களும் பெண்களுக்கு மறுக்கப்பட்டது. பரம்பரை சொத்து உரிமையும் கல்வியும் பெண்களுக்கு மறுக்கப்பட்டது. ஆண் எஜமானர்களின் 'கருணை'க்கு அடிமைப்பட்டவர் களாகவே பெண்கள் இருந்தார்கள். பெண்கள் சுதந்திரமானவர்களாக வாழ்வதற்கு சமூகமும் கலாச்சாரமும் தடை போட்டன. சொந்தக்கால்களிலேயே நிற்க முடியாத பெண்கள், குடும்பத்தின் அடிமையாக வாழ வேண்டியிருந்ததால் விவாகரத்து குறித்து கற்பனையே செய்ய முடியாது.

கல்வி உரிமை கிடைத்த பிறகுதான் பெண்களுக்கு விழிப்புணர்வு உருவாகி தங்களின் உரிமைகளைக் கேட்கத் தொடங்கினர். இதனால் ஏற்கனவே அதிகாரம் செலுத்தி வந்தவர்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்டனர். அமெரிக்காவில் அடிமை

முறை இருந்த காலத்தில் அடிமைகளுக்கு திட்டமிட்டு கல்வி மறுக்கப் பட்டது. கல்வி பெற்று விட்டால், சுதந்திர உணர்வு வந்துவிடும் என்ற அச்சமே அதற்குக் காரணம். இந்தியாவை பிரிட்டிஷார் ஆட்சி செய்த காலத்தில் பிரிட்டிஷ் அதிகாரி மெக்காலே மற்றும் லண்டனில் இந்தியா வின் நிர்வாகத்தைக் கண் காணித்த பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்தியர்களிடம் கல்வியைப் பரப்ப விரும்பினர். தங்களின் நிர்வாகத்துக்கு கல்வி கற்ற இந்தியர்களைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம்.

புராண வேத காலங்களில் விவகாரத்துக்கான நடைமுறை கள் ஏதும் இல்லை. ஆண்கள் விரும்பாவிட்டால் அற்பக் காரணங்களுக்காகக்கூட பெண்களை வீட்டை விட்டு துரத்தி விடுவார்கள். மனைவி யைப் பற்றி ஏதேனும் வதந்தி உலவினாலும் வீட்டுக்குள் சேர்க்க மாட்டார்கள். இராமா யணத்தில் இராமன் தனது மனைவி சீதையை அப்படித் தான் நடத்தினான். மோகன் பகவத் வேண்டுமானால் இத் தகைய பெண்களுக்கு எதிரான கொடூரமானப் போக்கைக் கொண்டாடி மகிழலாம். ஆனால் அரசியல் சட்டம் அத்தகைய பாகுபாடுகளை மறுக்கிறது. இந்து மதம் உட்பட அனைத்து மதங்களுமே பெண் களுக்கு எதிரான பாகுபாடு களையே வலியுறுத்துகின்றன.

இந்து மத மரபு - சொத்து மற்றும் திருமணம், தொழில் வழியாக ஆண்களுக்கு அதிகாரங்களை வழங்கியது. குடும்பப் பிரச்சினைகளிலும் ஆண்களே அதிகாரம் படைத்த வர்கள். வரதட்சணைக்கான பணப் பேரங்கள் வழியாகவே பெற்றோர்கள் திருமணங்களை உறுதி செய்கிறார்கள். குழந்தைப் பருவத்திலேயே இந்து மதத்தில் திருமணங்கள் நடத்தி வைக்கப் பட்டன. மேயோ என்ற வெளி நாட்டு சுற்றுலாப் பயணி இந்தியாவை சுற்றிப் பார்த்து எழுதிய ‘இந்தியத் தாய்’ (மதர் இந்தியா) எனும் நூலில் குழந்தைத் திருமணங்களின் கொடுமைகளைப் பதிவு செய் துள்ளார். 6 வயது சிறுமிகள் வயதான கணவர்களின் கட்டாய உடல் உறவினால் பெண் உறுப்புகள் பாதிக்கப் பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதை சுட்டிக் காட்டியுள்ளார். இறந்த கணவன் எரிக்கப்பட்ட நெருப்பில் மனைவியரும் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

பெண்கள் கல்வி உரிமை கிடைத்ததினால் தான் இந்தக் கொடுமைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடிந்தது. பெண்கள் சுயமாக சிந்திக்கவும், செயல்படவும் முடிகிறது. கொடுமைக்கார கணவர்களிடம் சிக்கி கண்ணீர் சிந்தாமல், விவாகரத்து கேட்டு தங்களை விடுவித்துக் கொள்கிறார்கள். **விவகாரத்து அதிகரித்து வரு கிறது என்றால் அதன் உண்மை யான அர்த்தம் என்ன? ஆண் களின் அடக்குமுறைகளை பெண்கள் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதுதான்**. ஆண்களைத் தண்டிக்கத் தயாராகி விட்டார்கள் என்பதுதான். இது நீதியின் செயல்பாடு. மோகன் பகவத் கூறுவதுபோல் ஆணவத் தின் அடையாளம் அல்ல.

குடும்ப சுகாதாரக் கணக் கெடுப்பு அறிக்கை ஒன்று 15 வயதுக்கு மேற்பட்ட பெண் களில் மூன்றில் ஒரு சதவீதத் தினர் குடும்ப வன்முறைக்கு உள்ளாகிறார்கள் என்று குறிப் பிடுகிறது. இந்த வன்முறையி லிருந்து தங்களை விடுவித்துக் கொள்வோர் 14 சதவீதம் பெண்கள் மட்டுமே என்றும் அந்த புள்ளி விவரம் கூறுகிறது. தங்கள் மீதான வன்முறைகளை அந்தக் காலத்தைப்போல் பெண்கள் சகித்துக் கொண்டு போக விரும்புவதில்லை. அதை வெளிப்படுத்தவே விரும்பு கிறார்கள். பெண்களின் இந்த விழிப்புணர்வை மோகன் பகவத் போன்றவர்களால் அங்கீகரிக்க முடியாமல் போகலாம்.

இந்து மதம் மட்டுமல்ல, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களும் பெண்களுக்கு சம உரிமைகளை வழங்குவதில்லை. அவர்கள் பாகுபாடுகளுடன் நடத்தப்படு வது குறித்து பல அறிக்கைகள் வெளி வந்து கொண்டிருக் கின்றன. ஆணவக் கொலைகள், பெண்கள் மீதான சித்திர வதைகள் இஸ்லாம், கிறிஸ்தவ மதத்திலும் நடக்கவே செய்திருக் கின்றன. இப்போது அய்ரோப் பிய சமூகமே கல்வி பெற்ற சமூகமாகவும் விழிப்புணர் வுள்ள சமூகமாகவும் மாறி நிற்பதை மோகன் பகவத்தால் ஏற்க முடியாத நிலையில் ‘விவாகரத்து’களை கலாச் சாரத்துக்கு எதிரான ஆணவ நடவடிக்கையாக கருதுகிறார் போலும். மதங்களால் பழக்க வழக்கங்களாக மாற்றப்பட்ட பெண்களுக்கு எதிரான பாகு பாடுகளை கடும் குற்றங்களாக அய்ரோப்பிய சமூகம் கருது கிறது. இதைப் பார்த்தாவது கலாச்சாரம், சம்பிரதாயம் என்ற பெயரில் பேசப்படும் பெண் களுக்கு எதிரான பாகு பாடுகளை கைவிட முன் வர வேண்டும். ●

# 1958இல் 'விடுதலை' வெளியிட்ட கட்டுரைக்காகக் கிடைத்த தண்டனை

*1958ஆம் ஆண்டு 'விடுதலை' நாளேட்டில் 'இளந்தமிழா; புறப்படு போருக்கு' என்ற தலைப்பில் வெளி வந்த ஒரு கட்டுரைக்காக அதை எழுதிய கட்டுரையாளரும் 'விடுதலை ஆசிரியர் ஈ.வெ.ரா., மணியம்மையாரும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டனர்.*

ஒரு பதினேழு வயது இளைஞருக்காகப் பாரதிதாசனும் மு. வரதராசனாரும் (மு.வ.) நீதிமன்றப் படியேறி, சாட்சிக் கூண்டில் ஏறி நின்று சான்று கூறினரென்றால் நம்ப முடிகிறதா?

திராவிடர் கழக நாளேடான 'விடுதலை'யின் 19 ஜனவரி 1958 இதழில் தஞ்சை சி.என். நெடுமாறன் என்ற பெயர் தாங்கி, "இளந்தமிழா! புறப்படு போருக்கு!" என்றொரு கட்டுரை வெளி வந்தது. வட இந்தியர் நடத்தி வந்த கடைகளையும் பிற வணிகங்களையும் தமிழர் புறக்கணிக்க வேண்டும் என்று அக்காலப் பகுதியில் பெரியார் அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பை வலியுறுத்தி எழுதிய கட்டுரை இது.

'கூலியாட்களாக, உடலுழைப்புக்காரர்களாக நாம் நம்முடைய தாயகத்திலே அலக்கணுறுகின்றோம். ஆனால் பிழைப்பை நாடி வந்த வடவர் கூட்டமோ இன்றைக்கு சவுகார்பேட்டையிலே கும்மாளமடித்துக் கொட்டமடிக்கின்றது' என்று தொடங்கிய அக் கட்டுரை, 'பம்பாய்க்கு நம்மவர் சென்றாலோ பனியா கூட்டம் நம்மைத் தெருக்கூட்டுவோராக, ரிக்ஷா இழுப்போராக, வேலையாட்களாகப் பயன்படுத்துகின்றதேயொழிய நம்மை எள்ளளவும் மதிப்பதில்லை' என்று தொடர்ந்து, 'எனவே இந்த பனியா ஆதிக்கத்தைச் சவக்குழிக்கு அனுப்பத் தமிழர் திரண்டெழ வேண்டாமா?' என்று உணர்ச்சி மிக்க நடையில் அறைகூவல் விடுத்தது. இதற்கு அரணாகப் பாரதிதாசன் பாடலும் மு.வ.வின் கருத்தும் மேற்கோளாக அமைந்திருந்தன.[1]

இந்தக் கட்டுரை அரசாங்கத்தின் பார்வைக்கு வந்தது. 'பிராமணர்'களுக்கும் வட இந்தியருக்கும் எதிரான கருத்துகளைக் கொண்டது இக்கட்டுரை என்று முடிவு செய்த அரசாங்கம், காவல்துறை ஆணையரை நடவடிக்கை எடுக்குமாறு பணித்தது. அப்போது ஆணையராக இருந்தவர் எஃப்வி. அருள். விடுதலை அலுவலகத்தில் கட்டுரையின் மூலக் கையெழுத்துப்படி கைப்பற்றப்பட்டு, எழுதியவரும் அடையாளங் காணப்பட்டார். காவல்துறை விசாரணையில் தெரிய வந்த தகவல்கள் வருமாறு.

கட்டுரையாசிரியரின் இயற்பெயர் சி.என். நடராசன், வயது 18. மன்னர் சரபோஜி கல்லூரியில் இளங்கலை முதலாண்டு மாணவர் தந்தை பெயர் சி. நாகராஜ பிள்ளை. தஞ்சை கீழ ராஜ வீதியில் வீடு.[2]

கோப்பைப் பரிசீலித்த அரசாங்கத்தின் சட்டத் துறை, நடவடிக்கை எடுக்கலாம் எனப் பரிந்துரைத்தது. 'ஆட்சேபகரமான பரப்புரையை இந்தச் செய்தித்தாள் தொடர்ந்து சந்தோஷமாகச் செய்து வருவதாகத் தெரிகிறது. உடனே இதை நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் பின்னர் மேலும் பல தொந்திரவுகளுக்குக் காரணமாகும்' என்று நிதி அமைச்சர் சி. சுப்பிமணியம் அரசுக் கோப்பில் 21.2.1958இல் குறிப்பு எழுதினார். 'ஆம், வழக்குத் தொடரலாம்' என்று அதே நாளில் உள்துறை அமைச்சர் பக்தவத்சலமும் வழி மொழிந்தார். மார்ச் 3ஆம் நாள் முதலமைச்சர் காமராசர் ஒப்புதலளித்தார்.[3]

இதன்படி கட்டுரையாசிரியர், 'விடுதலை' நாளேட்டின் ஆசிரியர் ஈ.வெ.ரா. மணியம்மை ஆகியோர் மீது இந்திய தண்டனைச் சட்டம் 153அ என்ற பிரிவின் கீழ் (வகுப்புகளிடையே மதம், இனம், மொழி முதலானவற்றின் பேரில் பகைமையைத் தூண்ட முற்படும் குற்றம்) எழும்பூர் முதன்மை மாகாண மாஜிஸ்திரேட் ஆர். சதாசிவம் முன்பு விசாரணைக்கு வந்தது. முதலில் (21.7.1958) பாரதிதாசன் சாட்சி கூறினார். கட்டுரையாளரின் சார்பில் வாதிட்ட வழக்குரைஞர் அநுமந்தராவ் குறுக்கு விசாரணையில் கேட்டதற்கு, 'இம்மாதிரிப் பாட்டுக்கள் விரோத மனப்பான்மையை வளர்ப்பதற்காக எழுதப்படவில்லை. அமைதியை உண்டாக்குவதே நோக்கம்' என்றார் பாரதிதாசன். அரசு வக்கீல் கேட்டதற்குப் பதிலளிக்கையில், 'நான் திராவிடர் கழகத்தில் சேர்ந்தவன் அல்ல. ஆனால் அவர்களுடைய கொள்கைகள் நல்லவை என்று கருதுபவன். அபிமானம் உண்டு' என்றும் கவிஞர் கூறினார். 'தமிழர்களைப் பற்றி வடநாட்டினர் இவ்வாறு எழுதினால் எப்படி நினைப்பீர்கள்' என்ற கேள்விக்கு, 'நியாயமானதாக இருந்தால் ஒப்புக்கொள்ள வேண்டியது' என்று பதிலிறுத்தார்.[4]

அடுத்த விசாரணையில் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் மு.வ. சாட்சியளிக்கையில், கட்டுரையாளர் மேற்கோள் காட்டிய பகுதி 'துவேஷத்தைத் தூண்டும் நோக்கத்துடன் எழுதப்படவில்லை. தமிழ்நாட்டில் இன்றுள்ள நிலைமையை அது அப்படியே தெளிவுபடுத்துவதாக உள்ளது' என்றும், 'எனது கட்டுரையைப் படிக்கும் எவரும் வட இந்தியர் மீது விருப்போ அல்லது வெறுப்போ கொள்ள மாட்டார்' என்றும் கூறினார். 'இதைப் படிக்கும் சாதாரண வாசகர் என்ன கருதுவார்' என்ற அரசு தரப்பு வழக்குரைஞரின் கேள்வியைக் கட்டுரையாளரின் வக்கீல் மறுத்தாலும் நீதிபதி அதற்கு அனுமதியளித்தார். 'வட இந்தியரின் சுரண்டல் தான் தனது மோசமான நிலைக்குக் காரணமென்று சாதாரண மனிதன் நினைப்பார் என்றும், அது அவனை வட இந்தியர்களை வெறுக்கும் படிச் செய்யாது' என்றும் மு.வ. உறுதிபடக் கூறினார்.[5]

பாரதிதாசன், மு.வ. ஆகியோரின் சான்றுகளையும், கட்டுரையாளரின் வாதங்களையும் நீதிபதி ஏற்கவில்லை. கட்டுரையாளருக்கும் நாளேட்டின் ஆசிரியருக்கும் ஆளுக்கு நூறு ரூபாய் தண்டம் விதித்தார். தவறினால் ஒரு மாத வெறுங்காவல் தண்டனை. கட்சிக் கொள்கைப்படி ஈ.வெ.ரா. மணியம்மை தண்டம் கட்டாமல் சிறை புகுந்தார். பணம் கட்டுவதற்கு ஒரு வாரம் கால அவகாசம் கேட்டு அதைக் கட்டினார் சி.என். நடராசன்.[6]

படிப்பைத் தொடர்ந்த நடராசன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்று (1962), பின்னர் மதுரை - காமராசர் பல்கலைக்கழகத்தில் (1979) சமூகவியலில் முனைவர் பட்டமும் பெற்றார். கோவை பூ.சா.கோ. கல்லூரியிலும் (1964-71) மதுரை கல்லூரியிலும் (1971-85) பல்லாண்டுகள் சமூகவியல் ஆசிரியராகப் பணியாற்றிய பின் மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி விரிவாக்க மையத்தில் 1985இல் பணிக்கமர்ந்த நடராசன், அம்மையம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகமாக 1992இல் மறு ஆக்கம் பெற்றபோது பேராசிரியராக நியமிக்கப்பட்டு 2000இல் பணி நிறைவு பெற்றார்.

குறிப்பு :

சி.என். நடராஜன் உடல் நலிவுற்றுத் தம் எண்பதாம் அகவையில் 1.2.2020இல் நெல்லையில் காலமானார்.

சான்றுக் குறிப்புகள்


1. 'விடுதலை', 19 ஜனவரி 1958.
2. G.O. No.913. Home, Confidential, 5 April 1958
3. மேலது
4. 'விடுதலை', 22 ஜூலை 1958.
5. 'விடுதலை', 10 ஆகஸ்டு 1958.
6. G.O. No.1535. Public (General B), 20 May 1958



நன்றி : 'காலச்சுவடு' மாத இதழ்
(ஆய்வாளர் முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி
எழுதியதிலிருந்து ஒரு பகுதி)



# அம்பேத்கர் நடத்திய ‘மூக் நாயக்’

*நிதி வசதி ஏதும் இல்லை என்றாலும் ஒரு லட்சிய உத்வேகத்துடன்தான் அம்பேத்கர் ‘மூக் நாயக்’ பத்திரிகையைத் தொடங்கினார். அவர் பத்திரிகை தொடங்கும் செய்தியை அறிந்த கோலாப்பூரின் சத்திரபதி ஷாஹூ மகாராஜா அம்பேத்கரின் இல்லத்துக்கு வந்து ரூ.2,500 நன்கொடையைத் தந்தார்.*

சுதந்திரப் போராட்ட காலத்திலிருந்து எந்த ஒரு இயக்கமும் தனக்கான ஒரு ஊடகத்தைக் கொண்டிருப்பதை முக்கியமென்று கருதிவந்திருக்கிறது. அந்த நிலை தற்போதும் தொடர்கிறது. இதில் விளிம்பு நிலையில் இருந்தவர்கள்/ இருப்பவர்கள் தலித் மக்களே! அம்மக்களின் குரல் ஒலிப்பதற்கான அச்சு ஊடகமோ, காட்சி ஊடகமோ இன்றுவரை குறைவாகத்தான் இருக்கின்றன. இந்தப் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது,100 ஆண்டுகளுக்கு முன்பு அம்பேத்கர் மேற்கொண்ட முன்னோடி இதழியல் முயற்சிகள் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது நமக்குப் புலப்படுகிறது.

அது 1920, ஜனவரி 31. டாக்டர் அம்பேத்கர் தொடங்கிய மாதமிருமுறை மராத்தி இதழான ‘மூக் நாயக்’கின் முதல் இதழ்

வெளியான நாள். 'மூக் நாயக்' என்றால், மராத்தி மொழியில் 'குரலற்றவர்களின் தலைவர்' என்று பொருள். இந்தப் பெயரை 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த மராத்திய பக்திக் கவிஞர் துக்காராமின் பாடல் ஒன்றி லிருந்து டாக்டர் அம்பேத்கர் தழுவிப் பயன்படுத்தினார். 'மூக் நாயக்' என்ற பெயருக்குக் கீழாக, அந்தப் பாடலும் இடம் பெற்றிருந்தது.

முன்னதாக அமெரிக்கா வில் டாக்டர் பட்டம் பெற் றிருந்த அம்பேத்கர், லண்டனில் உள்ள பொருளாதாரக் கல்லூரி யில் பொருளா தாரத்தில் முனைவர் ஆய்வை மேற் கொண்டிருந்த நிலையில், அவருக்கு வழங்கப்பட்ட பரோடா மாகாண கல்வி உதவித் தொகை நிறுத்தப் பட்டதால், அந்த ஆய்வைப் பாதியிலேயே விட்டுவிட்டு, இந்தியாவுக்கு 1917இல் வந்தார். மீண்டும் தனது ஆய்வைத் தொடரும் கனவோடு அதற்கு ஆகக் கூடிய செலவுக்குத் தொகையைச் சேமிப்பதற்காக ஒரு அரசுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி னார். இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட சில அனுபவங்கள் தான் அவரை சொந்தமாகப் பத்திரிகை நடத்தத் தூண்டின.

1918-19ஆம் ஆண்டுகளில் சவுத்பரோ கமிட்டி இந்தியா வுக்கு வந்தது. அது தாழ்த்தப் பட்டவர்கள் சார்பில், டாக்டர் அம்பேத்கரையும் முற்பட்ட பிரிவினர் சார்பில் சமூக சேவகர் வித்தல் ராம்ஜி ஷிண்டேவையும் தங்கள் தரப்புகளின் வாதங்களை எடுத்துவைக்க அழைத்தது. இந்த விஷயத்தில் வித்தல் ராம்ஜியின் தரப்பு வாதங்களுக்குப் பத்திரிகைகள் கொடுத்த முக்கியத்துவத்தைத் தனக்குக் கொடுக்கவில்லை என்று அம்பேத்கரின் மனம் வாடியது. கூடவே, ஒரு முன்னணி ஆங்கில நாளிதழுக் குத் தாழ்த்தப் பட்டவர்களின் நிலையை எடுத்துக் கூறி ஒரு கடிதத்தை அனுப்பினார். அந்தக் கடிதம் பிரசுரிக்கப்படவே யில்லை. இதெல்லாம்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக் கென்று தனி பத்திரிகை வேண்டும் என்ற திசையை நோக்கி அம்பேத்கரை நகர்த்தின.

பத்திரிகையின் தொடக்க நிலையில் இந்தத் தொகை பெரும் ஊக்கமாக இருந் திருக்கும் என்பதில் சந்தேக மில்லை. 'மூக் நாயக்' பத்திரிகையை அம்பேத்கர் தொடங்கினாலும் அதன் ஆசிரியர் பொறுப்பில் அவர் எப்போதும் இருந்ததில்லை. அரசுப் பணியில் இருந்ததுவும் இதற்கு ஒரு காரணம். மாதம் இருமுறை இதழாக ஒரு சனிக்கிழமை விட்டு அடுத்த சனிக்கிழமையில் அந்த இதழ் வெளியானது. ஆரம்பத்தில் பாண்டுரங் நந்தராம் பட்கர் அந்த இதழின் அதிகாரபூர்வ, பெயரளவிலான ஆசிரியராக இருந்தார். பிறகு, தின்யந்தேவ் கோலப் ஆசிரியர் பொறுப் பேற்றார். சில காலம் கழித்து அம்பேத்கருக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் கோலப் பதவி விலகினார்.

'மூக் நாயக்'கின் முதல் இதழில்தான் தற்போது அடிக்கடி மேற்கோள் காட்டப் படும் அம்பேத்கரின் வரிகள் இடம்பெற்றன. "இந்து சமூகம் என்பது ஒரு கோபுரம் போன்றது. அதன் ஒவ்வொரு தளமும் ஒவ்வொரு சாதிக் கென்று ஒதுக்கப்பட்டது. இதில் குறிப்பிடத் தகுந்த விஷயம் என்னவென்றால், இந்தக் கோபுரத்துக்குப் படிக்கட்டுகள் கிடையாது. ஆகவே, ஒரு தளத்திலிருந்து இன்னொரு தளத்துக்கு ஏறவோ இறங்கவோ முடியாது. ஒருவர் எந்தத் தளத்தில் பிறந்தாரோ அந்தத் தளத்திலேயே மடிகிறார். கீழே உள்ள தளத்தைச் சேர்ந்தவருக்கு எவ்வளவு திறமையும் தகுதியும் இருந்தாலும் அவர் மேலே உள்ள தளத்துக்குச் செல்வதற்கு எந்த வழியும் இல்லை. அதேபோல், மேலே உள்ள தளத்தைச் சேர்ந்தவர் எந்தத் தகுதியும் திறமையும் இல்லை யென்றாலும் அவரைக் கீழே உள்ள தளத்துக்கு இறக்குவதற்கு எந்த வழிவகையும் இல்லை."

'மூக் நாயக்' அதன் பெயருக்கு ஏற்ப குரலற்றவர் களின் துயரத்தை வெளிப் படுத்தும் ஊடகமாக விளங்கியது. தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்கள் எதிர்கொண்ட சாதிக் கொடுமைகளைப் பற்றி அந்த இதழுக்குக் கடிதம் எழுதினார்கள். அது சுதந்திரப் போராட்டம் சூடுபிடித்துக் கொண்டிருந்த காலம். 'மூக் நாயக்' பத்திரிகை இந்திய தேசியவாதத்தைக் கேள்விக் குள்ளாக்கி யது. இதனால் அம்பேத்கரோ 'மூக் நாயக்' பத்திரிகையோ இந்திய சுதந்திரத்துக்கு எதிரானவர்கள்

என்று அர்த்தம் இல்லை. அந்நியரின் கொடுமைகளை, ஆக்கிரமிப்பை எதிர்க்கும் இந்திய தேசியவாதம் நமக் குள்ளே நிகழ்த்தப்படும் கொடுமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்ப தால்தான் அது அம்பேத்கரால் தாக்குதலுக்கு உள்ளானது.

இன்னொரு இதழில் அம்பேத்கர் இப்படி எழுதுகிறார்: "இந்தியா ஒரு சுதந்திர நாடாக மட்டும் இருந்து விட்டால் போதாது. ஒரு நல்ல அரசாகவும் உருவாக வேண்டும். அதில் எல்லா வகுப்பு மக்களுக்கும் மதம், சமூகம், பொருளாதாரம், அரசியல் தொடர்பானவற்றில் சம உரிமை என்பது உறுதி செய்யப் பட்டதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வாழ்வின் படிகளில் உயர் வதற்கான வாய்ப்பும், இவ்வாறு முன்னேறுவதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலையும் அளிக்கப்பட வேண்டும். பிரிட்டிஷ் அரசின் அநீதியான அதிகாரத்தை எதிர்ப்பது சரி என்று பிராமணர்கள் சொல்வதில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறதோ, அதைவிட நூறு மடங்கு நியாயம், ஆட்சி அதிகாரம் ஆங்கிலேயரிட மிருந்து பிராமணர் கைகளுக்கு மட்டும் மாற்றப்படக் கூடாது என்று ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் எதிர்ப்பதில் அடங்கி யிருக்கிறது."

'மூக் நாயக்' இதழ் தொடங்கப்பட்டபோது, பால கங்காதர திலகரின் 'கேசரி' பத்திரிகைக்கு மூன்று ரூபாய் பணத்துடன் விளம்பரம் அனுப்பப்பட்டது. விளம்பரம் செய்ய மறுத்து, பணத்தைத் திருப்பி அனுப்பியது அந்தப் பத்திரிகை. இப்படியாக, தொடக்கத்திலேயே அம்பேத் கரின் 'மூக் நாயக்' புறக் கணிப்பை எதிர்கொண்டது.

1920இல் 700 சந்தாதாரர் களைக் கொண்டிருந்த அந்தப் பத்திரிகை, 1922இல் ஆயிரத்தை தொட்டது. இதற்கிடையில் பாதியிலேயே நின்றுபோன தனது பொருளாதார முனைவர் பட்ட ஆய்வை மேற் கொள்வதற்காக அம்பேத்கர் லண்டன் சென்றுவிட 'மூக் நாயக்' பத்திரிகை தள்ளாடியது. அதற்கு முன்னதாக ஆறு மாதங்களில் 12 இதழ்களின் பெயர் குறிப்பிடப் படாத ஆசிரியராக இருந்து அம்பேத்கரே எல்லா வேலை களையும் கவனித்துக் கொண்டார்.

சில ஆண்டுகளில் 'மூக் நாயக்' நின்று போனது. ஆனாலும், பின்னாளில் 'பஹிஷ்க்ரிட் பாரத்', 'ஈக்குவாலிட்டி ஜன்ட்டா' ஆகிய இதழ்களை டாக்டர் அம்பேத்கர் தொடங்கி நடத்தினார். அம்பேத்கரின் 'மூக் நாயக்' தொடங்கி நூறு ஆண்டுகள் முடிவுக்கு வந்தாலும் அந்தக் காலத்தைப் போலவே ஒடுக்கப்பட்ட மக்களுக்கென்று வலுவான ஊடகம் இல்லாதது இன்றும் தொடர்கிறது. அப்படிப்பட்ட ஊடகம் அமையும்போது அது 'மூக் நாயக்' இட்ட அடித் தளத்தின்மீதுதான் அமையும் என்பது டாக்டர் அம்பேத்கரின் தியாகத்துக்கும் துணிவுக்கும் சான்று!

- ஆசை

### தமிழனுக்காக நான் பலிகடா ஆகிறேன்!

இருந்தால் என் வைப்பாட்டி மகனாக இரு; இழிமகனாக இரு; இல்லா விட்டால் நாட்டைவிட்டு, இந்து மதத்தை விட்டு வெளியேறு அல்லது ஜெயிலில் இரு" என்றால், "இது உங்கப்பன் உங்க அம்மா சம்பாதித்த நாடா? அவர்கள் பிறந்த நாடா? என் நாட்டில் உனக்கு என்ன வேலை? வெளியேறு, வெளியேறு, மான வெட்கங் கெட்டவனே, வெளியேறு" என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

சமுத்திரம் எனக்கு முழங்கால் அளவு தண்ணீர் தான்.

அட முட்டாள்களா! உங்களுக்கும் சேர்த்துத் தானே பாடுபடுகிறேன்.

விஷமப் பிரச்சாரம் செய்யும் உங்களில் ஒருவன் வாயில்கூட 'நான் ஏன் சூத்திரன்' என்பது வருவ தில்லையே. டில்லியோடு எழவு எடுப்பதற்கு முன் உங்களோடு எழவு எடுக்க வேண்டியிருக்கிறதே!

தமிழன் யோக்கியதை எனக்குத் தெரியும். 75 வருடமாய் தெரியும். தமிழனுக்கு ஆக நான் பலிகடா ஆகிறேன்.

மானமுள்ளவர்கள் வாருங்கள். முடியாத யோக்கியர்கள், யோக்கியர் களுக்குப் பிறந்தவர்கள் வாலை அடக்கிக் கொண்டு யோக்கியமாய் வாழுங்கள்.

- தந்தை பெரியார்
'விடுதலை' 15.11.1973

அறிவியலுக்கு எதிரான கருத்துகளைப் பரப்பும்

# உச்சநீதிமன்ற நீதிபதி இராமசுப்பிரமணியன் நூலுக்கு மறுப்பு (2)

● எட்வின் பிரபாகரன்

*புதிர் 11: மனித உடல் என்பது ஓர் உடல் அல்ல, அது மூன்று உடல்களால் ஆனது. அவை (1) ஸ்தூல சரீரம், (2) சூக்ஷ்ம சரீரம், (3) காரண சரீரம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஐம்பூதங்களின் சேர்க்கையால் உருவாக்கப்பட்டது ஸ்தூல சரீரம். ஸ்தூல சரீரத்தை தாண்டி, மனம் மற்றும் புத்தி ஆகியவற்றின் உறைவிடம் சூக்ஷ்ம சரீரமாகும். இந்த சூக்ஷ்ம சரீரம், ஸ்தூல சரீரத்தை சுற்றி ஒரு ஒளிவட்டத்தின் வடிவில் சக்தியாக பரிணமிக்கிறது. மனிதன் இறந்த பின், அவனுடைய ஆன்மா, சூக்ஷ்ம சரீரத்தின் மேலேறி சிறிது காலம் தன் உடலைச் சுற்றி அலைவதாகவும், அந்த சூக்ஷ்ம சரீரத்தை கரைத்து, காரண சரீரமாக மாற்றுவதற்கு தான் இறுதிச் சடங்குகள் செய்யப்படுவதாகவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.*

*1939இல் மின் பொறியாளர் செம்யோன் கிர்லியன் வேலண்டினா தம்பதியினர் மின்கடத்தும் தட்டின் (Conducting plate) மேல் ஒரு நிழற்படச் சுருளை வைத்துவிட்டு, இன்னொரு மின்கடத்தியின் மேல் ஒரு மனிதனின் கையை வைத்துவிட்டு, அந்த கடத்திகளின் மேல் மின்சாரத்தை செலுத்தினால், அந்த நிழற்படச்சுருளில் பதியப்படும் கை வடிவத்தைச் சுற்றி ஒரு ஒளிவட்டம் தோன்றியிருப்பதை கண்டுபிடித்தனர். குளிர் காய்ச்சலால் (Influenza) கிர்லியன் தாக்கப்பட்டபோது, உடலைச்சுற்றியுள்ள ஒளிவட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுவிடுகின்றன என்பதை கண்டுபிடித்தார். அப்படியானால், ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்கள் இருப்பது உண்மையா? முன்னோர்கள் எப்படி கிர்லியன் நிழற்படம் இல்லாமலேயே இதனை கண்டுபிடித்தனர்?*

**விடை:** ஸ்தூல சரீரம் அய்ம்பூதங்களால் ஆனது என்று கூறும் நூலாசிரியர், சூக்ஷ்ம சரீரம் (மனம் & புத்தி) அதற்கு அப்பாற்பட்டது என்கிறார். இது

உண்மையா என்று அறிய, மனம் (mind) என்றால் என்னவென்று நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆக்ஸ்ஃபோர்ட் அகராதி, “மனம் என்பது ஒரு பொருளல்ல. உணர்வுகள், கற்பனை, உள்ளுணர்வு, யோசனை, தீர்ப்பு, மொழி, நினைவு ஆகிய அறிவாற்றல் திறன்களே மனமாகும். இது உருவாகும் இடம் மூளை” என்று தெளிவாக கூறுகிறது. மூளையில் பிராண வாயு (Oxygen), 73% நீர், கொழுப்பு, தனிமங்கள் மற்றும் பல சத்துப்பொருள்கள் உள்ளன. எனவே சூக்ஷ்ம சரீரம் (மனம் & புத்தி) அய்ம்பூதங்களுக்கு அப்பாற்பட்டது என்ற சாஸ்திர கருத்து தவறானது. அதோடு மட்டுமல்லாமல், அய்ம் பூதங்கள் என்ற பதமே தவறானது. “காற்று”, “ஆகாயம்” ஆகியவற்றை தனித்தனி பூதங்களாக காட்டுவதே பெரும்பிழை.

அடுத்ததாக, சரீரத்தைச் சுற்றி ஒளிவட்டம் உருவாகுவதைப்பற்றி பார்ப்போம். ஒரு மனிதனைச் சுற்றி இயற்கையாக ஒளிவட்டம் உருவானால், அதை படம்பிடித்து, சூக்ஷ்ம சரீரத்தை பார்த்தீர்களா! என்று ஆன்மீகவாதிகள் கூறலாம். ஆனால், நூலாசிரியர் கூறியது என்ன? கிர்லியன் புகைப்படத்தில் ஒளிவட்டம் தெரிவதாகக் கூறியுள்ளார். கிர்லியன் புகைப்படம் இயற்கையானதா? இல்லை என்பதே பதிலாகும். உயர் மின்னழுத்தத்தை ஒரு புகைப்பட தட்டின் மீது செலுத்தும்போது, தட்டின் மீது வைக்கப்படும் கையைச் சுற்றி உருவாகும் செயற்கையான ஒளி தான் கிர்லியன் புகைப் படமாக பதிவாகிறது. உயர் மின்னழுத்தத்தை நீக்கினால், ஒளிவட்டம் மறைந்துவிடும். அப்படி யென்றால், ஒளிவட்டத்துக்கு காரணம் மனிதனா? உயர்மின்னழுத்தமா? உயர்மின்னழுத்தமே காரணம். அதோடு மட்டுமல்லாமல், அந்த புகைப்படத் தட்டின் மீது, கைக்கு பதிலாக ஒரு துடைப்பகட்டையை எடுத்து வைத்தாலும், கிர்லியன் புகைப்படத்தில் செயற்கை ஒளிவட்டம் தெரியும். இதை வைத்துக்கொண்டு துடைப்பக் கட்டைக்கு சூக்ஷ்ம சரீரம் உள்ளது என்றும், ஆன்மா உள்ளதென்றும் கூறமுடியுமா?

இந்த ஒளிவட்டம் (Corona) உருவாக மின்னிறக்கமே (Electrical Discharge) காரணமாகும். உயர் மின்னழுத்தத்தின் போது, பாய்மம் (காற்று அல்லது நீர்) அயனியாக்கப்படுகிறது (Ionisation). அதாவது பாய்மம், நேரயனி (+Cation), எதிரயனி (-Anion) என்று பிரிகிறது. இதனால் ஏற்படும் மின்புலமே செயற்கை ஒளிவட்டத்துக்கு காரணம். மற்றவையெல்லாம் நூலாசிரியரின் கற்பனைகள்.

*புதிர் 12: பஞ்ச பூதங்களுக்கான சிவத்தலங்கள் (காளஹஸ்தி, காஞ்சி ஏகாம்பரேஸ்வர், சிதம்பரம், திருவண்ணாமலை, திருவானைக்காவல்) இந்திய வரைபடத்தில் கிட்டதட்ட ஒரே நேர்க்கோட்டில் உள்ளன. அதே போல, கேதர்நாத்தில் இருந்து ராமேஸ்வரம் வரை உள்ள சிவத்தலங்கள் ஒரே நேர்கோட்டில் உள்ளன. இந்த அதிசயம் நிகழ்ந்தது எப்படி?*

**விடை:** உலகம் தட்டையாக இருந்தால் தான், வரைபடத்தில் ஒரே நேர்கோட்டில் கோயில்கள் இருப்பதாக கருத முடியும். நம் வசதிக்காக, காகிதத்தில் உலக வரைபடத்தை தட்டையாக வரைந்துவிட்டு, கோயில்கள் ஒரே நேர்கோட்டில் இருப்பதாகக் கோர முடியாது. உலகம் உருண்டையாக இருப்பதால், பஞ்சபூத சிவத்தலங்கள் ஒரே நேர்கோட்டில் இருக்க வைப்பில்லை. தட்டையான உலக வரைபடத்தில் கூட, நூலாசிரியர் சொல்வதைப்போல, கேதர்நாத் கோயிலும், ராமேஸ்வரம் கோயிலும் ஒரே நேர்கோட்டில் இல்லை. இது வெறும் செவிவழிச் செய்தியேயன்றி, உண்மையில்லை. தொலைதூர தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் வளர்ந்திருக்கும் இந்த காலகட்டத்தில், இவ் விரண்டு கோயில்களும் நேர்கோட்டில் இல்லை என்பதை அறிய Google Maps செயலி போதும்.

*புதிர் 13: 1972ஆம் ஆண்டு ஜார்ஜ் ஓவென் என்ற கணித மரபியலாளர் ஆவிகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்ள எண்ணினார். அதற்காக ஒரு குழு உருவாக்கப்பட்டது. அக்குழுவில், ஜார்ஜ் ஓவென், அவருடைய துணைவி அய்ரிஸ் மற்றும் பலர் இடம்பெற்றிருந்தனர். குழுவின் செயல்பாடு களை மேற்பார்வையிடும் பொறுப்பை உளவியலாளர் ஜோயெல் விட்டொன் ஏற்றார். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த பிலிப் என்ற நபரின் ஆவியை தொடர்புகொள்ள முயன்றதால், இது “பிலிப் பரிசோதனை” என்று அழைக்கப்பட்டது. இந்த பரிசோதனையின்போது, திடீரென்று அறையின் விளக்குகள் மங்கலாகிப் போகும். குழு உறுப்பினர்கள் பிலிப்பின் ஆவியை கேட்டுக்கொண்டதும், விளக்குகள் பிரகாசமாக எரியும். ஒருநாள் திடீரென்று, குழு உறுப்பினர்கள் அமர்ந்திருந்த மேசையின் மீது ஒரு புகைப்படலம் உருவாகி, மேசை அறைக்கதவை நோக்கி நகரத் தொடங்கியது. பகுத்தறிவாளர் ஓவென் குழு அறிவியலைத் தாண்டி நடந்த நிகழ்வுகளால் ஆடிப்போனது.*

**விடை:** *அய்ரிஸ்சும், மார்கரெட் ஸ்பரொவும்*

இணைந்து ஓவென் குழுவினரின் ஆய்வு முடிவுகளை "Conjuring Up Philip (1976)" என்று நூலாக வெளியிட்டனர். அந்நூலில் குழுவினர் பேயோடு நடத்திய உரையாடல் என்று சில உரையாடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை படித்த கனடா எழுத்தாளர் ஜான் ராபர்ட் கொலொம்போ, தனது "Ghost stories of Ontario (1995)" நூலில், "பிலிப்பிடம் கேள்வி கேட்ட குழுவினர், என்னென்ன பதில்களை எதிர் பார்த்தார்களோ, அந்தந்த பதில்களை பிலிப் அளித்ததைப் போல செயற்கையாக உரையாடலை அமைத்துள்ளனர்" என்று மேற்கோள் காட்டியுள்ளார். மேலும் இந்த குழுவினர் செய்த ஆய்வுமுறை அறிவியலுக்கு எதிரான பித்தலாட்டமாக இருந்துள்ளது. குழுவினரின் ஆய்வை மேற்பார்வையிட்ட உளவியலாளரான ஜோயல் விட்டொன் மோசடி வழக்கில் 2017ஆம் ஆண்டு ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளார். சில வழக்கு விசாரணைகளில், 6 நிகழ்வுகளில் தன்னுடைய கல்வித் தகுதி குறித்து தவறான தகவலை அளித்ததால், ஒன்டரியோ மருத்துவர்கள் & அறுவை சிகிச்சை நிபுணர்கள் கல்லூரி, அவருடைய மருத்துவ உரிமத்தை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது. விட்டொன் 1998இல் பொய் சாட்சியம் அளித்ததாக குற்றம் சாட்டப்பவர். இந்த தகவல்கள் The Globe and Mail என்ற கனடா நாட்டு பத்திரிக்கையில் பதிவாகி யுள்ளது. இத்தகைய ஒரு நேர்மை தவறிய ஒரு மனநல மருத்துவரின் மேற்பார்வையில் நடைபெற்ற ஓவென் குழுவினரின் ஆய்வை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

புதிர் 14: 1932ஆம் ஆண்டு, மருத்துவர் மன்றோவின் மருத்துவமனைக்கு 32 வயது மதிக்கத்தக்க மேரி நைட் வந்தார். 9 மாத கருவை தன் வயிற்றில் சுமந்து கொண்டிருப்பதாகவும், குழந்தை உதைப்பதை தன்னால் உணர முடிகிறது என்றும், பிரசவத்துக்கான நேரம் நெருங்கி விட்டதாகவும் கூறினார். மேரி நைட்டின் பால் சுரப்பிகள் உட்பட உடலின் எல்லா பாகங்களிலும் கருத்தரித்து இருப்பதற்கான அடையாளங்கள் காணப்பட்டன. ஆனால், ஸ்டெதெஸ்கோப்பை வைத்து சோதித்து பார்த்ததில், குழந்தையின் இதயத் துடிப்பை உணர முடியவில்லை. வயிற்றுக்குள் இன்னொரு உயிர் இருப்பதற்கான அறிகுறியே இல்லை. எனவே, கர்ப்பம் வெறும் கற்பனையில் உருவானதை மன்றோ அறிந்து கொண்டார். விஞ்ஞானிகளை குழப்பும் இன்னொரு விஷயம் என்னவென்றால், சில சமயங்களில் ஆண்களுக்கும், ஏன் விலங்குகளுக்கும் கற்பனைக் கரு தோன்றுவது எப்படி என்பதேயாகும்.

**விடை:** போலியாக கருவுறுவது பெரும்பாலும் ஒரு உளவியல் சிக்கலாகவே உள்ளது. இது அகச்சுரப்பி தொகுதியில் ஏற்படும் மாற்றங்களால் நிகழ்கின்றது. இதனால் சுரக்கும் இயக்குநீர் (harmone), பிரசவத்தின்போது ஏற்படும் உடல் மாற்றங்களை, பிரசவம் ஏற்படாதபோதே உருவாக்குகிறது. ஒரு பெண் உண்மையாகவே கருவுற்று இருக்கும்போது, கணவனுக்கும் இத்தகைய போலி கருவுருதல் உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது Couvade Syndrome என்று அழைக்கப்படுகிறது. இதுவும் தவறான இயக்குனர் சுரப்பிகள் சுரப்பதால் ஏற்படும் விளைவாகும். பிரசவ காலத்தில், துணைவி படும் துயரத்தை எண்ணி கூட, சில ஆண்களுக்கு இவ்வாறாக நடக்கலாம் என்பதால், இது "பரிதாப கருவுறுதல்" என்றும் அழைக்கப்படுகிறது. அமெரிக்க அய்க்கிய நாடுகளில், 1940களில் 0.4% கருவுறுதல்கள் போலியானதாக இருந்துள்ளன. ஆனால், மருத்துவ அறிவியலின் வளர்ச்சியால், 2013இல் இந்த எண்ணிக்கை 0.0045% என்ற அளவில் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

புதிர் 15: 1995ஆம் ஆண்டு, செப்டம்பர் 21ஆம் நாள், தெற்கு புது டெல்லியில் உள்ள ஒரு கோயிலில் விநாயகர் சிலை, தும்பிக்கையின் மூலம் பாலை உறிஞ்சிவிட்டதாக ஒரு செய்தி காட்டுத்தீ போல பரவியது. நாடெங்கும் பல விநாயகர் கோயில்களிலும் இதே சம்பவம் நடந்ததாக மக்கள் பரவசத்தோடு கொண்டாடினர். அறிவிய லாளர்கள் அளித்த விளக்கம் என்னவென்றால், விநாயகர் சிலைகளில் உள்ள மிக நுண்ணிய துளைகளின் மூலமாக, தந்துகி எழுகை முறையால் (Capillary Rise method), பால் உறிஞ்சப்படுகிறது என்பதேயாகும். அன்று மாலைக்குள், இந்த விளக்கம் பிடிக்காததாலோ என்னவோ, விநாயகர் சிலைகள் பால் குடிப்பதை நிறுத்திவிட்டன.

தந்துகி எழுகை முறையில் இது நடக்கு மானால், ஏன் இதற்கு முன் அப்படி நடக்கவில்லை என்ற கேள்விக்கும், அன்று மாலைக்குப் பின், ஏன் அது தொடரவில்லை என்பதற்கும் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. பெண்கள் பால்குடம் எடுத்துக்கொண்டு ஊர்வலமாகப் போகும்போதும், கூழ் ஊற்றும் போதும், பலருக்கு ஆவேசம் வருவதையும், சாமியாடுவதையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இப்படி எந்த புறக் காரணிகளும் இல்லாமல், ஒரு கூட்டத்தினரின்

கற்பனையில் உருவாகி, அதை அவர்கள் உண்மை என்று நம்புகிற அளவுக்கு உடலில் மாற்றங்கள் ஏற்படும் நிகழ்வுகளுக்கு அறிஞர்கள், குழு இசிவு நோய் (Mass hysteria) என்று பெயரிட்டுள்ளனர். இந்நோயின் தாக்கம், ஒரு உடலில் இருந்து எப்படி பல உடல்களுக்கு பரவுகிறது என்பதற்கும், சிறிது நேரம் கழித்து உடல் தானாகவே எப்படி இதி லிருந்து விடுபடுகிறது என்பதற்கும், அறிவியலால் இன்று வரை விடை காண முடியவில்லை.

**விடை:**விநாயகர் சிலை பால் குடிப்பதற்கு தந்துகி எழுகை முறையை காரணமாக கூறினாலும், இந்த ஒன்று மட்டுமே காரனமல்ல. மேற்பரப்பு இறுக்கம், ஒரு செய்தியை உறுதி படுத்துவதில் இருக்கும் ஒருசார்ப்புத் தன்மை ஆகியவையும் பெரும் பங்காற்றியுள்ளன. மக்கள் தாங்கள் எது நடந்தது என்று நம்ப நினைக் கிறார்களோ, அதுவே நடந்ததாக சாதிக்கின்றனர். இதுவே ஒரு ஒட்டுமொத்த குழுவினரின் நம்பிக்கையாக இருக்கும்போது, அது அந்த குழுவையே நம்பிக்கை அடிப்படையில் உண்மைக்கு புறம்பான முடிவை எடுக்க வைக்கிறது.

சிலை பால் குடிக்கும் என்று குழுவாக நம்பி தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வது, கூட்டத்தை பார்த்தால் சாமியாடுவது, இத்தகைய குழு மனநோய்க்கான விளக்கத்தை 2002ஆம் ஆண்டு வெளியான British Journal of Psychiatry ஆய்விதழில், பார்தலொமியூ, சைமன் உள்ளிட்ட ஆராய்ச்சியாளர்கள், “Protean nature of mass sociogenic illness” என்ற கட்டுரையில் கூறியுள்ளனர்.

“இத்தகைய “கூட்ட வெறி” என்பது ஒத்திசைவுள்ள குழுவினருக்குள் வேகமாக நோய் அறிகுறிகளை உருவாக்கும். இது உருவாகுவதற்கு நரம்பு மண்டலத்தில் ஏற்படும் உற்சாகம், இழப்பு, பயன்பாட்டின் மாற்றம் ஆகியவையே காரணங்களாகும். இதனால் உடல்ரீதியாக ஏற்படும் தற்காலிக மாற்றங்களுக்கு குறிப்பிட்ட எந்த காரணமும் இல்லை. இடம் பொருள் ஏவலுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு குழுவின் செயல்பாடுகளிலும் தற்காலிக மாற்றங்கள் தோன்றி மறையும்” என்று இக்கூர்மையான விளக்கத்தை, மனித மனங்களை ஆராய்ந்து கூறியுள்ளனர். எனவே மக்களின் இந்த மூடநம்பிக்கை செயல்கள் அறிவியல் விளக்கத்துக்கு அப்பாற்பட்டவையல்ல.

●

## பார்ப்பனர் ஆதரவு இருந்தால்...

நான் (எனக்கு ஞாபக மிருக்கிற வரையில்) என்னுடைய 10ஆவது வயதிலிருந்தே நாத்திகன். சாதி, சமயச் சடங்கு முதலியவற்றில் நம்பிக்கை யில்லாதவன், ஒழுக்க சம்பந்தமான காரியங்களில்கூட மற்றவர்களுக்குத் துன்பமோ, தொல்லையோ தரப்படாது என்பதைத் தவிர, மற்றபடி வேறு காரியங்களில் ஒழுக்கத்துக்கு மதிப்பு கொடுத்தவனும் அல்ல. பணம், காசு, பண்டம் முதலியவைகளில் எனக்குப் பேராசை இருக்கிறது என்றாலும், அவைகளைச் சம்பாதிப்பதில் சாமர்த்தியத்தையாவது காட்டியிருப்பேனேயொழிய, நாணயக் குறைவையோ, நம்பிக்கைத் துரோகத்தையோ காட்டியிருக்க மாட்டேன். யாரையும் ஏமாற்றலாம் என்பதில் நான் சிறிதுகூட முற்பட்டிருக்க மாட்டேன். வியாபாரத் துறையில் பொய் பேசி இருந்தாலும், பொது வாழ்வுத் துறையில் பொய்யையோ, மனமறிந்து மாற்றுக் கருத்தையோ வெளியிட்டிருக்கமாட்டேன். இப்படிப்பட்ட நான், எதற்காக ஒரு சமுதாயத்தாரிடம் விரோதமோ, குரோதமோ கொள்ள வேண்டும். நான் நமது நாட்டையும், சமுதாயத்தையும் ஆங்கில நாட்டுத் தன்மைக்கும், நாகரிகத்திற்கும் கொண்டு வர வேண்டும் என்கின்ற ஆசையுடையவன். இதற்கு முட்டுக் கட்டையாகப் பார்ப்பனச் சமுதாயம் இருக்கிறது என்று சரியாகவோ, தப்பாகவோ கருதுகிறேன்.

அப்படி இல்லை என்பதைப் பார்ப்பனர்கள் காட்டிக் கொள்ள வேண்டாமா? உண்மையிலேயே எனக்கு மாத்திரம் பார்ப்பனர்களுடைய ஆதரவு இருந்திருக்குமானால், நம் நாட்டை எவ்வளவோ முன்னுக்குக் கொண்டு வர என்னால் முடிந்திருக்கும்.

பெரியார், ‘விடுதலை’ - 1.1.1962

# பெரியாரின் பெரும் பணி: பேராசிரியர் அன்பழகன் படப்பிடிப்பு

*98ஆம் அகவையில் முடிவெய்திய திராவிடர் இயக்கத் தூண்களில் ஒருவரான பேராசிரியர் அன்பழகன் பெரியார் குறித்து எழுதிய கட்டுரை.*

எந்த ஒரு மதத்தின் கருத்துகளும் மற்றொரு மதத்திற்கு முற்றும் உடன்பாடல்ல. அடிப்படையிலேயே மாறுபடும் முரண்பட்ட கருத்தும் பல. ஒரு வகையில் நெருக்கமுள்ளது போன்று தோற்றமளிக்கும் மதங்களான -

சைவமும் - வைணவமும்
சமணமும் - பவுத்தமும்
இஸ்லாமும் - கிறிஸ்தவமும்

கூடத் தம்முள்ளே பல வகையில் வேறுபடுவன. சில கால கட்டத்தில் அவை ஒன்றுடன் ஒன்று போரிட்டு நின்றவை.

**ஒரு மதத்திற்குள்ளேயே முரண்பாடுகள்!**



தென்னகத்தில் தோன்றிய ஆச்சாரியார்கள் எனப்படும் ஆதி சங்கராச்சாரியார், இராமனுச்சாரியார், மத்துவாச்சாரியார் ஆகிய மூவருமே - வேதாந்த விசாரத்திலும், விளக்கத்திலும் ஈடுபட்டவர்கள் என்றாலும், அவர்கள் விளக்கிய 'தத்துவம்' மூன்றும், ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. ஒன்றை ஒன்று மறுப்பவை, எதிர்ப்பவை. நடைமுறை வழிகளிலும் வேறு வேறானவை. சைவமும், வைணவமும், இன்றும் பலப்பல பிரிவுகட்கு ஆட்பட்டுள்ளன. எனவே, சமய ஞானிகள் எனப்பட்டவர்களில் எவருடைய ஞானத் தெளிவையும் அல்லது கடவுள் தத்துவ விளக்கத்தையும் - இன்னொரு சமய ஞானி உடன்பட்டு ஏற்றுக் கொண்டதாக வரலாறில்லை. அப்படிப்பட்ட இறை அருள் பெற்றவர்களாகக் கூறப்படும் மத வழிகாட்டிகளே ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துடையவராவதைக் கூட அறிந்து கொண்டு, சிந்திக்க முன் வராத அளவில்தான் - மனிதன் குறிப்பாகத் தமிழன் சுய சிந்தனையற்றவனாக, அந்தத் துணிவும் தெளிவும் அற்றவனாக உள்ளான்.

'வேறுபட்ட சமயங்கள் யாவரும் போற்றும் இறைவா' எனவும், 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' எனவும், சைவர்கள் சிவனைப் போற்றுவதை ஒப்ப - அவரவரும் - தமது மத வழியில் வழிபடும் தெய்வத்தை அனைத்து மதத்தவரும் உலகோரும் போற்றும் இறைவன் எனக் கூறிக் கொள்வர். எனினும், அந்த மதவாதிகள் அனைவரும் ஒப்பியதொரு கடவுளை - கடவுள் தத்துவத்தை இன்று வரை உலகம் அறியவில்லை. எனவே அவரவர் உள்ளத்தில் பதிந்து உரம் பெற்ற நினைவொன்றே அப்படிப்பட்ட 'தெய்வ' சிந்தனை யாவதை யாரும் மறுத்தொணாது அது குறித்து உண்மை காண, தாமே பகுத்தறிந்து தெளிவதற்கு மக்கள் முன்வரவில்லை. தமது மனத்தில் பதிக்கப்பட்டு விட்ட எண்ணத்திற்கு ஆட்பட்டு விட்ட மக்கள், தமது அறிவைப் பயன்படுத்தவே அஞ்சுகின்றார்கள். ஆண்டவனை மலைபோல நம்பி இருக்கிறார்கள் என்பதினும், அவரது பழமை வழி வந்து நிலைத்து விட்ட நம்பிக்கை மலை போன்று - கருங்கற் பாறையாய் உயர்ந்து நிற்கிறது. **தந்தை பெரியாரோ - இரும்புக் கடப்பாறை கொண்டு, தகர்க்கவியலாத கற்பாறையையும் சிற்றுளி கொண்டு சிறுசிறு கல்லாக உடைத்து எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அது ஒரு நீண்டகாலப் பணி என்றும் அறிவித்து, தமது வாழ்நாளையே அதற்கு ஒப்படைத்து ஓயாது பாடுபட்டார்கள். மக்கள் சிந்தித்து அடையும் தெளிவு எதுவாயினும் மனிதனைச் சிந்திப்பதற்குத் தூண்டி, ஒவ்வோராளவிலேனும் மனிதனாக உணரச் செய்த ஒப்பற்ற பெருமை பெரியாருக்கு உண்டு.**

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக வேண்டும்"

- என்றும், சாதி, மத, புராண இதிகாச மூடத்தனமெல்லாம் ஒழித்து மக்கள் - சன்மார்க்க நெறியினர் ஆக வேண்டும் என்றும், வடலூர் வள்ளலார் பலவாறு உரைத்தவை, ஏற்கப்பட வேண்டியன எனினும், அவை மக்களின் நம்பிக்கை வழிப்பட்டு வளர்ந்த பழக்கச் சிந்தனையை மாற்றும் ஆற்றலைப் பெற முடியவில்லை.

வள்ளலாரே தமது வாழ்நாளில் பெரும் பகுதியைப் பழக்கப்பட்ட சிந்தனையின் பக்தி வழியிலேதான் செலுத்தினார். இறுதிக்கட்டத்தில்தான் - பழகிய வழிச் சிந்தனையில் கற்பனையான - பொய்யான எண்ணங்கள் மேலிட்டு, உண்மை ஒளி காணத் தடையாகின்றன என்று உரைக்கலானார். எனவே அவரது பாடல்களில் ஒரு பகுதி மட்டுமே புதிய சிந்தனைக்கு வழி செய்கின்றன. அவையுங்கூடப் பக்தி

நிலைப்பட்ட வழியில் அமைந்திருத்தலின் - ஒரு புதிய சிந்திக்கும் ஆற்றலை மக்களிடம் உருவாக்க இயலவில்லை. ஒரு சில புதிய பொதுநல நோக்குடைய நியாயங்கள் மட்டுமே வழங்குகின்றன. அவையும் ஒரு இயக்கமாக மக்களிடம் பரவவில்லை.

**பெரியாரின் அருமை புரியும் இடம்**

இந்த உண்மையை எண்ணிப் பார்ப்பவர்களே, தந்தை பெரியாரின் சிந்தனையில் பிறந்த, பகுத்தறிவு - தன்மான இயக்கம் எப்படிப்பட்டதொரு எதிர்நீச்சல் பணியில் ஈடுபட்டது என்று உணரலாவர்.

பல நூறு தலைமுறையாக வழி வழி வளர்ந்த நம்பிக்கைகளைக் கொண்டு, சமுதாய (இன) வழக்கமாக இடம் பெற்று, மக்கள் பழக்கத்தில் நிலைத்து, பக்தி உணர்வால் உரம் பெற்று, பரம்பரைப் பெருமை எண்ணத்தால் வலிவு பெற்று, இன்றைய ஆதிக்க சக்திகளுக்கு ஆதரவாக நிலவுதலால் அவர் தம் வலிமையைத் துணைக் கொண்டு, பொருளாதார முறையையே காக்கும் வாயிலாகி, ஏற்றத் தாழ்வுகளான இன்றைய சமூக நிலையை நிலை பொறுத்தும் கருவியாகி கற்றறிந்தார் எனப்படும் கூட்டத்திற்கு அவர்தம் வாழ்வுக்கு வாய்ப்பாகி, மற்ற மக்கட்கோ அது தவிர வேறு வழிச் சிந்தனை ஏற்பட இடமளிக்காத அரணாகி உள்ள வைதீக வருணாசிரம தருமக் கோட்டையைத் தகர்ப்பது என்னும் தந்தை பெரியாரின் பகுத்தறிவு வாதம் எப்படிப்பட்ட எதிர்ப்பைச் சந்தித்தது - சந்திக்கிறது என்பதை ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால் தான் அதன் அருமை விளங்கும்.

இமயப் பனிமலையின் உயர்முடியான எவரெஸ்டில் ஏறும் முயற்சியிலும் கடுமையான ஒரு முயற்சியில், புயல் வீசிட அலை கொந்தளிக்கும் கடலில் மரக்கலம் செலுத்துவதினும் துன்பமான ஒரு முயற்சியில், நன்றி கூறவோ, பாராட்டவோ வரவேற்கவோ செல்வாக்கு மிக்கவர் எவரும் முன் வராத சூழ்நிலையின் காலகட்டத்தில் -

- அறிவு வழிச் சிந்தனையை அரும்ப வைக்கும் பெரும் போரில்,
- மனிதத்தன்மையை நிலைநாட்டும் புதிய சமுதாயம் காணும் போர்க்களத்தில்,
- தமிழனின் பிறவி இழிவுப் பொய்மையைப் பொசுக்கும் பெரும் பணியில் ஈடுபட்டவர் தந்தை பெரியார்.

அவர் எடுத்து வைத்த பகுத்தறிவு வாதங்களை, உண்மை விளக்கத்தை இந்தச் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தியோர் ஏற்றிட இசையாது, எதிர்ப்புக் கிளப்பி, அவரையும், அவரைச் சார்ந்தவர்களையும் 'நாத்திகர்' என்று பறைசாற்றி, மக்களின் வெறுப்புக்கு ஆளாக்கி விடலாம் என்று அவர்கள் முனைந்ததாலேயே, 'நாத்திகம் என்றால் என்ன? அதில் என்ன தவறு? அதனால் யாருக்கு என்ன கேடு? என்னும் கேள்விகளை எழுப்பி, 'கடவுள்' பெயராலும், நினைவாலும் வளர்க்கப்பட்ட மூட நம்பிக்கைகளையும், பொய்மைப் புரட்டுகளையும், பயனற்ற கற்பனையையும் விளக்கிக் கடிந்துரைக்கலானார்.

கடவுள் பெயரால் - சாதி - மதச் சடங்கு ஆதரவும், வைதீகப் புரோகிதம் ஆதிக்கம் செலுத்துவதற்கு வழியும் செய்யப்படாதிருக்குமாயின், அப்படிப்பட்ட 'கடவுள்' என்னும் கடந்த பொருள் பற்றிய சிந்தனை குறித்துப் பெரியார் கவலைப்பட்டிருக்க மாட்டார்.

பெரியார் அவர்களே ஒரு முறை பேசும்போது, "உங்கள் கடவுள் இருக்குமாயின் நான் இல்லை என்பதாலா அவ்வளவு சக்தி வாய்ந்த கடவுள் இல்லாமற் போய்விடும்? பின் ஏன் பயப்படுகிறீர்கள்?" என்று கேள்வி எழுப்பி, "இருப்பது எதுவும் ஒருவன் இல்லை என்பதால் மறைந்து விடாது. இல்லாதது எதுவும் ஒருவன் உண்டு என்பதால் முளைத்து விடாது" என்று விளக்கங் கூறி, "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்கிறீர்கள் - அப்படியானால் நான் இப்படிப் பேசுவதைக் கடவுள் தடுத்திருக்கலாமே! எனவே சிந்தித்துப் பாருங்கள் - எது எது உங்கள் பகுத்தறிவுக்குச் சரி என்று படுகிறதோ - அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று உரையாற்றினார்.

எனவே, பழமைப் பிடிப்பிலிருந்து மக்களை மீட்டு மனிதனாகச் சிந்திக்க வைப்பது - பகுத்தறிவு வழியிலான புதிய சமுதாயத்திற்கு ஏற்றவனாக ஆக்குவது - சமத்துவ சமதர்ம வாழ்வுக்கு அவனைக் கொண்டு வழி வகுப்பது என்னும் இலட்சியத்தோடு நமது மக்களின் அறிவுக் கண் திறந்த பெரியாரின் பணி, தொண்டு, தியாகம், துணிச்சல், இடைவிடாத சிந்தனை, அத்தனையும் காலத்தால் மதிப்பு மிகும் அருஞ்செயலாகும்.

'செயற்கரிய செய்வார் பெரியர் - சிறியர்
செயற்கரிய செய்க லாதார்'

என்னும் குறள் காட்டும் பெரியாராய்த் திகழ்பவர் - நமது தந்தை பெரியாரே!

தந்தை பெரியார் பிறந்ததால் - அவரது புதிய சிந்தனை பிறந்ததால் - தன்மான இயக்கம் பிறந்ததால் பகுத்தறிவைப் பயன்படுத்தி, புத்துணர்வு பெற்ற மனிதராகத் தலைநிமிர்ந்தவர்கள் நாம். தமிழினமும் அவ்வழியில் தலைநிமிரும் நாளை எதிர்நோக்கி நமது பணியை நாளும் தொடர்வதே தந்தை பெரியாரின் பிறந்த நாளைப் போற்றுவோர் ஆற்ற வேண்டிய நன்றிக் கடனாகும்.

வாழ்க தந்தை பெரியாரின் சிந்தனை!

வளர்க மனித சுய சிந்தனை ஆற்றல்!

**'விடுதலை' 50ஆம் ஆண்டு சிறப்பு மலருக்கு எழுதிய கட்டுரையில் ஒரு பகுதி**

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29, New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN